www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**வெந்திடுமோ வேள்வித் தீ?**

போர் முழக்க மிட்டே முன்னோர் போக்கறுந்து போனபின்னும்
பார்வியக்கப் போர்வித்தை காட்டுகிறேன் பாரென்று - மார்புயர்த்தி
வந்துள்ளீர் அம்மா: வாழ்த்துக்கள்! வாய் கூசாப் பொய்யுரைக்கு
வெந்திடுமோ வேள்வித் தீ?

ஈழமோகம்

இதழ் 72 மே.18 - மே.31, 1995 விலை 7.00

## • தீர்வு யோசனைகள் வெளியிடப்படுகின்றன!
## • ஆயுதங்கள் வந்து குவிகின்றன!

# போரும் சமாதானமும்

# -பொ.ஐ.முவின் இரட்டை அணுகுமுறை

**நீண்டகாலமாக தயார்நிலையில் இருப்பதாக கூறப்பட்டுவந்த வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத்திட்டம் பற்றி அரசாங்கம் அனைத்துக் கட்சிகளுக்கும் இன்று அறிவிக்கின்றது. இந்தத் தீர்வின்படி 'வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி' அமைப்பொன்றை அரசு முன்மொழிய உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வுத் தேச தீர்வுத்திட்டம் குறித்து சகல அரசியல் கட்சிகளதும் அபிப்பிராயங்கள் கோரப்பட்ட பின்னர் அதை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்கள் ஆராயப்படும் என்று தெரியவருகிறது.**

**இதேவேளை, பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொண்ட புலிகள் மீதான தீவிரமான தாக்குதலை தொடுப்ப தற்கான தயாரிப்புகளிலும் அரசு ஈடுபட்டு வருகிறது. இதன் முக்கிய படியாக பெருமளவு ஆயுதக் கொள்வனவுகள், போர் தளபாட கொள்வனவுகள் என்பன நடைபெற்றுவருகின்றன. ஏற்கெனவே விமான எதிர்ப்பு ஏவுகணைகளை முறியடிக்கும் எதிர் ஏவுகணைகளின் தொகுதி ஒன்று கொழும்பு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இது பற்றி மேலும் கூறப்படுவதாவது, அரசாங்கம் வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையை தீர்க்கவென தான் தயாரித்த தீர்வுகளை மக்கள் முன்வைக்கும் அதேவேளை, விடுதலைப் புலிகளுடன் உறுதியான யுத்தத்தையும் நடாத்துவதென்ற இரட்டைக் கொள்கையை கடைப்பிடிப்பது என்று தீர்மானித்துள்ளது. இதன்படி வடக்கு கிழக்கு இணைப்பு, முஸ்லீம் சிங்கள பிரதேசங்களுக்கான புதிய எல்லை வகுத்தல், சமஷ்டி முறையிலமைந்த ஒரு ஆட்சியமைப்பை உருவாக்கல் போன்ற விடயங்களை அரசியலமைப்பில் சேர்த்து புதிய திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக இன்று (17.05.1995) அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி உரையாடுவார். இக்கட்சிகளின் ஆலோசனைகள், ஆதரவுகள் என்பவற்றுக்கமைய இவை திருத்தியமைக்கப் பட்டு பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படும் என்றும், இவை சட்டமாக்கப்படுவதற்கான ஆதரவை ஜனாதிபதி பிறகட்சிகளிடம் கோருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை புலிகளுடனான யுத்தத்திற்காக கொள்வனவு செய்யப் பட்டுவரும் ஆயுதங்கள் திருப்திகரமானதாகவும், படைக்கு சேர்க்கப்படும் நபர்களின் எண்ணிக்கை பூரணமாகவும் ஆனவுடன், புலிகள் மீதான தீவிர தாக்குதல் ஒன்றை அரசு மேற்கொள்ளலாம் எனவும் தெரிகிறது. அரசியல் தீர்வொன்றை அரசு முன்வைத்தால் புலிகளை தமிழ் மக்களிடமிருந்து

→ 15

## அனைவருக்கும் கட்டாய இராணுவ சேவை! முன்னாள் படைத்தளபதிகள் ஆலோசனை!

இந்நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் குறிப்பிட்ட காலம் இராணுவ சேவையில் ஈடுபடுவதைக் கட்டாயமாக்கும் சட்டத்தைத் தயாரிக்குமாறு முன்னாள் இராணுவத்தளபதிகள் பலரும் அரசாங்கத்தைக் கோர நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

பலமான இராணுவமொன்றை ஏற்படுத்துவதே எழுந்துள்ள சிக்கலுக்கு முகங்கொடுக்கக் கூடிய ஒரே வழியாகும். அதற்காக அனைத்துப் பிரஜைகளுக்கும் இராணுவ சேவையைக் கட்டாயமாக்குவதைப் போலவே தற்போது இராணுவத்தைவிட்டு அகன்றுள்ள, முன்பு இராணுவத்திலிருந்த அனைவரையும் இராணுவ சேவையிலீடுபடுத்த வேண்டும். அத்துடன் முன்னாள் இராணுவத் தளபதிகளைக் கொண்ட இராணுவ ஆலோசனைச் சபையொன்றை ஏற்படுத்த வேண்டுமெனவும் அவர்கள் அரசாங்கத்தைக் கோரவுள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, தம்மால் செய்ய முடியாதளவு அமைச்சுக்கள் பல பாதுகாப்பு பிரதி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்

→ 15

## கடற்பரப்பில் புலிகளை கட்டுப்படுத்த இந்தியக் கடற்படை!

இந்திய கடற்படை மே 15 முதல் இந்திய இலங்கைக் கடற்பரப்பில் கடுங்காவலில் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாக வெளிநாட்டுத் தூதரகத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் உள்ள விமான எதிர்ப்பு ஏவுகணைகள், இந்திய - இலங்கைக் கடற்பரப்பினூடாகத் தென் இந்தியாவின் தமிழ்நாடு பிராந்தியத்திற்குக் கொண்டு வரும் இரகசிய தகவல்கள் தொடர்பாக இந்தியக் கடற்படைக்குக் கிடைத்த தகவல்களின் படி இந்திய - இலங்கைக் கடற்பரப்பில் கடுங்காவலில் ஈடுபட இந்தியக் கடற்படை தீர்மானித்துள்ளதாக அத்தூதராலய வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இந்திய கடற்படை இந்திய - இலங்கைக் கடற்பரப்பில் கடற்படைப் படகுகளையும், தாக்குதல் விமானங்களையும் வைத்திருக்கக் கூடிய கப்பல்களையும் கண்காணிப்பில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எதிராளிக

→ 15

## நாட்டை விட்டு வெளியேற விமானிகளுக்குத் தடை! லீவில் சென்ற பொலிசார் வேலைக்குத் திரும்பவில்லை! கப்பல் மாலுமி யாழ் செல்ல மறுப்பு!
## "யுத்தத்திற்கு முப்படையினரும் தயார்" பாதுகாப்பு அமைச்சர் சாடு!

"அவ்ரோ" விமானங்கள் இரண்டு புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து விமானப்படையைச் சேர்ந்த விமான ஓட்டிகள் எவரும் நாட்டை விட்டு வெளியேறத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

குடிவரவு, குடியகல்வுத் திணக்களத்திற்கும், விமான நிலையப் பாதுகாப்பு பிரிவிற்கும் இது பற்றி அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

தமது உயிரை இழக்க விரும்பாத விமான ஓட்டிகள் சிலர் நாட்டை விட்டு வெளியேற முயற்சி செய்வதாகக் கிடைத்த தகவலே இத்தடைக்கான காரணமாகும்.

இதேவேளை, கடந்த மூன்று வார காலத்தினுள் சொந்த லீவில் தமது வீடுகளுக்குச் சென்ற கனிஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் லீவு முடிவடைந்த பின் மீண்டும் வேலைக்குச் சமூகமளிக்கவில்லை எனத்தெரியவருகிறது. யுத்தப் பகுதிகளில் வேலையிலுள்ள படையினரை அண்மையிலுள்ள இராணுவ முகாமில் வேலைக்குச் சமூகமளிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பினும் அவ் உத்தரவுப்படி எதுவும் நடைபெறவில்லை எனவும் தெரியவருகிறது.

புலிகள் மீண்டும் தாக்குதல்களை தொடங்கிய பின்னர் வடக்கு கிழக்குக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமக்குரிய பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று இன்னும் பொறுப்புக்களை ஏற்கவில்லை எனவும் தெரியவருகிறது. இவர்கள் சுகயீன விடுமுறை விண்ணப்பங்கள் அனுப்பிவிட்டு வீட்டில் இருப்பதாகவும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமக்குத் தெரிந்த அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள் மூலமாக தமது இடமாற்றங்களை ரத்துச் செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை கஷ்டப்பிரதேசங்கள் என கணிக்கப்பட்டுள்ள வட - கிழக்குப் பகுதிகளில் கடைமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது பயிற்சிக்காலம் முடிந்ததும் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

மறுபுறத்தில் யாழ்ப்பாணத்திற்கான உணவுப் பொருட்களை கொண்டு செல்லும் கல்யாணி என்ற கப்பலின் மாலுமி கடற்புலிகளின் தாக்குதலுக்குப் பயந்து யாழ்ப்பாணம் செல்ல மறுத்துள்ளார். தமது பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லை என்று அவர் போக மறுப்பதால் ஏற்றப்பட்ட உணவுப் பொருட்க

→ 15

## இலங்கைக்கு தாக்குதல் விமானங்களையும், படகுகளையும் இந்தியா வழங்குகிறது!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புதிய யுத்த நிலைமைக்கு முகங் கொடுப்பதற்காக இந்திய அரசு, இலங்கை அரசிற்கு யுத்த உபகரணங்களை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதற்படியாக இலங்கை விமான ஓட்டிகள் செலுத்தக்கூடிய தாக்குதல் விமானங்கள் சிலவும், தாக்குதல் படகுகள் சிலவும் வழங்க இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது. இன்னும் 3 மாதங்களுக்குள் அவை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் இந்தியா அறிவித்துள்ளது.

ஆனாலும் இந்தியப்படையை இலங்கைக்கு அனுப்ப அவர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை.

இதற்குப் புறம்பாகத் தமீழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆயுதங்கள் கிடைப்பதைத் தடுப்பதற்காக இந்தியக் கடற்படையின் ஒத்துழைப்பையும் தருமாறு இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

→ 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசின் விமானப்படை தாக்குதலுக்கு பதிலடியாக புலிகளின் விமானத் தாக்குதல்?

இலங்கை விமானப்படையினால் நடத்தப்படும் விமானத்தாக்குதல்களுக்குப் பதிலாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் விமானத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களுக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விமானத் தாக்குதல் ஆய்வுப் பிரிவான கே.பீ.டிப்பாட்மென்ற் (K.P.Department) இனால் இதுவரை காலமும் விமானத்தாக்குதல் மற்றும் பயிற்சிகளைப் பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க விமானப் படையினர் பலர் கடந்த வாரமளவில் கடும் பாதுகாப்பு ஒழுங்குகளின் கீழ் யாழ்ப்பாணத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாக வடபகுதித் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளபடி இத்தாக்குதலுக்குப் பொறுப்பான கே.பீ. டிப்பாட்மென்றின் முக்கிய நெறியாளராகக் குமாரன் பத்மநாதன் என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். இவருக்கு மேலதிகமாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரபல விமான கெரில்லாப் படையினரான மானி, ஒலிவர், ராஜு, ஆகிய மூவரும் இத்தாக்குதலைத் திட்டமிடுவதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க விமானக் கெரில்லாக்கள் ஐரோப்பாவில் மைக்றோலைற், அல்ராலைற், க்ளைடர் போன்ற விமானங்களினால் விமானத் தாக்குதல்களுக்காக நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் எனவும் அத்தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளது.

நீண்ட காலமாக மிகவும் இரகசியமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளினால் இவ்விமானக் கெரில்லாப் படைப்பிரிவு கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன் அப்படைப்பிரிவின் தளமுகாம் (Base Camp) எழுதுமட்டுவாள் பகுதியில் அமைந்துள்ளதாக வெளிநாட்டுப் பொதுசனத் தொடர்பு சாதனமொன்றினூடாக வெளியிடப்பட்டுள்ளது. அதே சமயம் இப்படைப்பிரிவின் விமானங்களைப் பறக்க விடுவதற்குத் தேவையான 50 மீற்றரை விட நீளங்கூடிய விமான ஓடு பாதைகள் (Run-way) மூன்றும் வடபகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இவ்விமான ஓடுபாதைகளில் ஒன்று கிளிநொச்சியிலிருந்து சில மைல்கள் தொலைவில் வட திசையில் அமைந்துள்ளதாகத் தான் ஆகாயத்தை மேற்பார்வை செய்த போது கண்டதாக விமானப்படைப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப புலிகள் இயக்கத்திடம் விமானங்கள் உள்ளதாக நிச்சயமாகக் கூறமுடியாதுள்ளதாகக் கூறிய இவ்விமானப்படைப் பேச்சாளர், ஆனாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் விமானங்களை விலை கொடுத்து வாங்க முடியும் எனத்தான் நம்புவதாகவும் கூறினார். இக்கூற்றை உறுதிப்படுத்தும் இன்னொரு செய்தி வெளிநாட்டுச் செய்திப்பிரிவு பலவற்றிலிருந்து கடந்த வார இறுதியளவில் வெளியிடப்பட்டிருந்தன. அதன்படி கடந்த ஏப்ரல் மாதத்தினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெளிநாட்டுக் கிளைகள் பல மேற்கத்தைய நாடுகளிலிருந்து பாரமற்ற விமானங்களையும், பரஷுட்களையும் விலைகொடுத்து வாங்க முயற்சி செய்துள்ளன.

வாரம் முடியுமுன் இவ்விமானத்தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருப்பதற்குப் புறம்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் வடபகுதி இராணுவ முகாம்கள் பல மீது இறுதி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அவ் அறிவித்தலின்படி மே மாதம் 19ம் திகதிக்கு முன் காரைநகர், காங்கேசன்துறை, பலாலி, ஆனையிறவு, பூநகரி, முல்லைத்தீவு, வெற்றிலைக்கேணி முகாம்களிலிருந்து பாதுகாப்புப் படையினர் அகல வேண்டும். இது தொடர்பாக அரசாங்கத்தின் முடிவு எதுவானாலும் எதிர்வரும் சில தினங்களினுள் தம்மால் சரியான முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசின் பொருளாதார, யுத்த கேந்திர நிலையங்கள் மீது விமானத்தாக்குதல் நடத்தப்படும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

இதற்காகத் தம்மிடம் ஆர்.டீ.எக்ஸ் (RDX) வெடி மருந்தும் தற்கொலை விமானக்கெரில்லாப் படையினருக்குத் தேவையான அமெரிக்காவில் வாங்கப்பட்ட விமானத்தாக்குதல் தொகுதி (SET) கணிசமானளவும் இருப்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூறியுள்ளது. விமானத் தாக்குதலின் முதற் சுற்றில் அநேகமாக ஆனையிறவு முகாமும், பலாலி - மாதகல், பூநகரி - நாகதேவன்துறை முகாமும் தாக்கப்படலாம் என யுத்த வல்லுனர்கள் நம்புகின்றனர்.

ஆனாலும் கடந்த வாரமளவில் விமானப்படையினால் பரந்தன், பூநகரியிலிருந்து தெற்குப் பக்கமாக நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்கள் காரணமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதற்தாக்குதல் திட்டம் மாற்றப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. அதன்படி யுத்த வலயத்திற்கு வெளியேயுள்ள அரசின் பொருளாதார, யுத்த கேந்திர நிலையங்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விமானத் தாக்குதல் நடத்தலாம் என வார இறுதியளவில் தகவல்கள் கிடைத்துள்ளன. பொருளாதார கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களாகக் கொழும்புத் துறைமுகம், கட்டுநாயக்க விமான நிலையம், களனிதிஸ்ஸ மின்நிலையம், சப்புகஸ்கந்த மசகெண்ணை சுத்திகரிப்புத்தொகுதி (Complex) ஆகியவற்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவுசெய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இரத்மலான விமானப்படை முகாமும், பனாகொடை இராணுவ முகாமும் தமிழீழ விடுதலைப்புலிகளினால் விமானத் தாக்குதல் நடத்தப்படத் தெரிவு செய்யப்பட்டுள்ள யுத்த இலக்குகளாகும்.

இவ்வழிவு நிலைமையின் கீழ் முன்னைய, தற்போதைய அரசாங்கங்களினால் எடுக்கப்பட்ட தொலைநோக்கற்ற முடிவுகள் காரணமாகத் தவிர்க்க முடியாதபடி பாரதூரமான உயிர், சொத்து அழிவொன்று ஏற்படலாம் என அரசியல் விமர்சகர்கள் அபாய அறிவிப்புச் செய்துள்ளனர்.

# சந்திரிகா அரசில் தமிழர் சுத்திகரிப்பு!

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வசந்தராஜாவின் விலகல் நாடறிந்த விடம்.

அவரது விலகலுக்குப்பின்னால் அவரது தமிழ்ப் பின்னணியே காரணமாகவிருந்ததும் அதன் காரணமாகவே இராணுவத்தினராலும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு உள்ளிருந்தும், அரசாங்கத்திற்குள் இருந்தும் வசந்தராஜா புலிகளின் ஏஜென்ட் என இறுதிக்கட்டங்களில் பிரச்சாரமே மேற்கொள்ளப்பட்டது. இப்போது அவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருக்கிற போதும் இராஜினாமா செய்வதற்கு முழுஅளவில் வற்புறுத்தப்பட்டிருந்தார் என்பதே உண்மையானது.

இதற்கிடையில் ஜனாதிபதி சந்திரிகாவின் நெருங்கிய நண்பியும் ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளருமான பத்மா மகாராஜாவும் அப்பதவியிலிருந்து நீக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. இவரை நீக்குவதற்கான வற்புறுத்தல்கள் அரசாங்கத்திலிருக்கும் உயர் மட்டத்தவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிகிறது.

அதேபோல் தேசிய திறைசேரியில் நிதிக் கொள்ளை தொடர்பான பணிப்பாளர் பதவியிலிருக்கும் திருமதி காசிச்செட்டியையும் அவரது பதவியிலிருந்து நீக்க அரசு தீர்மானித்திருப்பதாகவும் தெரிகிறது. பொதுவாக தென்னிலங்கை சிங்கள அதிகாரவர்க்கம் அரசாங்கத்திற்கும் அரசாங்க பதவிகளிலும் சிங்களவரல்லாதோரை நியமிக்காமலிருக்க அதிக கவனம் எடுத்து வந்திருக்கிறது. விதிவிலக்காகவே சிங்களவரல்லாதோர் அவ்வாறான பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அந்த சிங்கள பௌத்த பேரினவாத கருத்துநிலையின் தொடர்ச்சியே இன்றைய இந்த செயற்பாடுகள். சந்திரிகா அரசாங்கம் பேரினவாதத்துக்கு அப்பாற்பட்டது என்று பிரச்சாரம் செய்த - நம்பிய நம்மவர்களுக்கு இது சமர்ப்பணம்.

# பொ.ஐ.முவுக்கு எதிராக ஐ.தே.க

பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வர ஐக்கிய தேசியக் கட்சி ஆயத்தமாகிறது. நாட்டினதும், மக்களதும் பாதுகாப்பை அபாயத்திற்குட்படுத்தியமை, களனிதிஸ்ஸ மின்சார நிலையத்திற்கு அண்மையில் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கும் ஒப்பந்தத்தை கேள்வி மனுக்கோராது இங்கிலாந்தின் மிட்லன்ட் (Midland) இலெக்றிசிற்றி நிறுவனத்திற்கு வழங்கியது ஆகிய இரண்டு விடயங்கள் மீது இந் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அறியக்கிடைக்கிறது.


# போட்டி

கொழும்பு விஞ்ஞானபீட மாணவர் சங்கத்தினால் இம்முறையும் கலை, இலக்கிய போட்டிகள் நடைபெறவுள்ளன. முதன் முறையாக கடந்த வருடம் சிங்கள, தமிழ் மாணவர்களுக்கு இடையில் இப்படியான போட்டிகளை நடாத்தியதுடன் தமிழ் எழுத்தாளரான கே.கணேஷும் இச்சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார்.

இப்போட்டியில் கலை, இலக்கிய ஆர்வமுள்ள பல்கலைக்கழ, பல்கலைக்கழகக் கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி, பாடசாலை மாணவ மாணவியர்கள் கலந்து கொள்ளலாம். போட்டிகள் தமிழ், சிங்கள மொழிகளில் நடாத்தப்படும். பாடசாலை மாணவ மாணவியரின் படைப்புக்கள் பாடசாலை அதிபரால் உறுதி செய்யப்பட வேண்டும். சிறுகதை, கவிதை, பாட்டு, கட்டுரை, சுவரொட்டி, கேலிச்சித்திரம் ஆகிய பிரிவுகளில் போட்டி நடாத்தப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும், விஞ்ஞானபீட இலக்கியக்குழு, விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு - 03 என்ற முகவரிக்கு மே 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்.

# திருமலை உயர்ந்தபாடு குடியேற்றம் அகற்றப்படுமா?



திருகோணமலை கோணேஸ்வரர் வீதியில் அமைந்துள்ளதும், இந்துமக்களின் தீர்த்தக்கரை என பக்தி பூர்வமாக அழைக்கப்படுவதும் மீனவர்களால் உயர்ந்தபாடு என பெயரிடப்பட்டுள்ளதுமான கடற்கரை பெரும்பான்மையோர் குடியேற்றத்தினால் தனது பொலிவை இழந்து 'சமுத்திரகம'வாக மாறியுள்ளது.

1987ல் அகதிகள் என்ற போர்வையில் கொட்டில்கள் போடுவதற்குத் தூண்டப்பட்ட மக்கள் இன்று நிரந்தர வீடுகளை அமைத்துக்கொண்டு எழும்ப மறுக்கிறார்கள். கடந்த ஆட்சிக்காலத்தில் இவர்களுக்கு அந்த இடத்தைப்பங்கிட்டு வீடு கட்டிக் கொடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் தமிழர்களின் பலமான எதிர்ப்புக் காரணமாகக் அம்முயற்சி கைவிடப்பட்டது.

மீனவர்களின் ''ஏலேலோ'' சத்தமும் ஸ்ரீ பத்திரகாளியம்பாளின் தீர்த்தோற்சவத் தினத்தில் ''அரோகரா'' கோஷமும் கேட்ட இடம் ஆக்கிரமிப்புக்குள்ளானது தமிழர்கள் நெஞ்சில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மாசிமகத் தீர்த்த நாளில் திருக்கோணமலை நகர ஆலயங்கள் அனைத்துக்கும் பொதுவான தீர்த்தக்கரை இவ்விடம். கடல் பெரிதோ மக்கள் பெரிதோ என்று வியக்குமளவுக்கு கண்கொள்ளாச் சிறப்புக் கொண்டு மிளிரும் காட்சி ஒவ்வொரு இந்துக்களின் நெஞ்சங்களிலும் நிறைந்திருக்கும்.

இன்று இங்கே 134 குடும்பங்கள் குடியிருக்கின்றன. இவர்கள் தங்களுக்கென்று சொந்த நிலமில்லை என்று கூறிக்கொண்டு இடத்தை விட்டு நகர மறுக்கிறார்கள். ஆனால் உண்மையில் இவர்களில் 69 குடும்பங்கள் சொந்த வீடு உள்ளவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டு புனர்வாழ்வு அட்டை வழங்கப்பட்டு மீள் குடியேற்றத்துக்குரிய நிவாரணங்களையும் பெற்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல இவர்களில் சுமார் இருபது குடும்பங்கள் திருக்கோணமலை மாவட்டத்தைச் சேராதவர்கள். இவர்கள் கூட இந்த நிலத்தில் நிரந்தரமாகக் குடியிருக்க விரும்புவதும், அதனை அதிகாரிகள் ஊக்குவிப்பதும் தான் வேடிக்கை. உண்மையில் இது ஒரு குடியேற்றத்திட்டமாக இருப்பினும்கூட அந்த மாவட்டத்தைச் சேராதவர்கள் காணி கோருவது அடாத்தான செயலாகும்.

1987க்கு முன்னர் எங்கே இருந்தோம் என்பதை மறந்து நாங்கள் கடவுளை நம்பி வாழ்கிறோம். வேறு இடத்துக்குச் சென்றால் தொழில் ரீதியில் பாதிக்கப்படுவோம் என்று இவர்கள் தங்கள் இருப்புக்கு நியாயம் கூற முற்படுகிறார்கள். ஆனால் இதே உயர்ந்தபாடுப் பகுதியில் முறைமாற்று வழியில் கரைவலைத் தொழில் செய்து காலாகாலமாக வாழ்ந்த தமிழ்க்குடும்பங்கள் 1983 வன்செயலின் போது தங்கள் தொழிலையும் இடத்தையும் இழந்து வாழவகையின்றி இருப்பது எந்த அதிகாரிகளுக்கும் தெரியாமலிருப்பது தான் வேதனை.

உயர்ந்தபாடு பரம்பரையாகத் தமிழர்கள் தொழில் செய்த இடம். லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள அவர்களது தொழில் உபகரணங்கள் எந்தவித பயமுமின்றி ஆங்காங்கே போடப்பட்டிருந்த காலம் ஒன்றிருந்தது. அந்தக் காலங்களில் தொழிலாளர்கள் வெயிலிலிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காகவும், உணவருந்துவதற்காகவும் என்று இரண்டொரு கிடுகுக்கொட்டில்கள் போட்டிருப்பார்கள். ஆனால் இன்று சிங்கள முதலாளிகளால் நிரந்தரச் கட்டிடங்களாக அமைக்கப்பட்ட 38 வாடிகள் இங்குள்ளன.

இந்த சட்டவிரோத வீடுகள், வாடிகளுக்கு மின்சாரச்சபை மின்சாரம் வழங்கியுள்ளது. வாடிகளுக்கு தொலைபேசித் திணைக்களம் தொலைபேசி வசதிகளை வழங்கியுள்ளது. நகரசபை வரிமதிப்பீட்டு இலக்கங்களை வழங்கியுள்ளது. இந்நடவடிக்கைகள் அத்துமீறல்காரரை மேலும் தட்டிக்கொடுப்பதாகவே அமைந்துள்ளன.

என்றாலும், இவர்கள் எழுப்பப்பட வேண்டியவர்கள் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது. 19.02.1995ல் இங்கு விஜயம் செய்த வீடமைப்பு அமைச்சரும் இதனைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

இவர்கள் அகற்றப்பட வேண்டும் என்பதை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் காட்டப்படுகிறது. உண்மையில் இந்நடவடிக்கைகள் வெற்றி பெறுமா, இவர்கள் அகற்றப்படுவார்களா என்பது அரசாங்கத்திற்குத்தான் வெளிச்சம்!

விவேகி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய புலனாய்வுத் துறை தலைவர் பதவி நீக்கப்படுவார்

தேசிய புலனாயவுத்துறை பணியகத்தின் N.I.B. தலைவரான ஷேர்ணி விஜேசூரியவை அப்பதவியிலிருந்து நீக்க அரசு முடிவெடுத்திருப்பதாக மிக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

வட - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடக்கையிலும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீறி மீண்டும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கிய பின்பும் தேசிய புலனாய்வுப் பணியகத்தினூடாக வழங்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் பொய்யானமையினாலும் குறிப்பாக மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைவிடப்பட்ட இறுதித் தினமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்திருந்த ஏப்ரல் 19. ஆம் திகதி புலிகள் எவ்விதமான தாக்குதலையும் நடத்தமாட்டார்கள் எனத்தேசிய புலனாய்வுப் பணியக அறிக்கையினாலும் அரசாங்கம் இந்நடவடிக்கையை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் ஏவுக்கணைத் தாக்குதலை முறியடிக்க ஆயுத உதவி

யுத்த உபகரணங்களை உற்பத்தி செய்யும் முன்னணி நாடுகள் இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஏவுகணைத் தாக்குதல்களை முறியடித்து வெற்றிபெறத்தேவையான யுத்த ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கத் தயாரெனத் தெரிவித்துள்ளன.

இந்நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு சிரேஷ்ட தூதரக அதிகாரிகள் முன்னணி அமைச்சரவை அமைச்சரொருவருடன் இரு கட்டப்பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர்.

மே முதலாம், இரண்டாம் திகதிசளில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாக அறியவருகிறது. முதற் கட்டப் பேச்சுவார்த்தைகள் மூன்று மணி நேரமும், இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் இரண்டு மணி நேரமும் முழுமையாக நடைபெற்றன. ராஜீவ் காந்தியைக் கூடப்படுகொலை செய்த புலிகள் இய்க்கம் போன்ற குழுவொன்றிடம் விமான எதிர்ப்பு ஆயுதம் இருப்பது பற்றி அத்தூதரக அதிகாரிகள் தமது மிகுந்த கவனத்தைச் செலுத்தினராம்.

→ 15

# தலைவர் கிழக்கிலாம்

முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு அண்மையில் பெருங்காட்டில் அதிக பேரைக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் படைப்பிரிவொன்று முகாமிட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிப்பதாக வடபகுதிப் பாதுகாப்புத் தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.

கிழக்குப் பகுதியின் பல இடங்களைக் குறி வைத்து புலிகளின் இராணுவம் இவ்வாறு முகாமிட்டிருப்பதாக அத்தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதே சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் தற்போது கிழக்கிற்கு வந்துள்ளதாக மட்டக்களப்புப் பகுதியில் தகவல் பரவிச் சென்றுள்ளது.

தமீழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் கிழக்கிற்கு வந்துள்ளது தனிப்பட்ட பாதுகாப்பிற்காகவோ அல்லது கிழக்கிலுள்ள பாதுகாப்பு படையினர் மீது புலிகளின் தாக்குதலொன்றை வழிநடத்தவோ எனத்தெளிவான தகவல் எதுவும் இல்லையென இராணுவப் பேச்சாளரொருவர் கூறினார்.

# கொழும்பில் இளைஞர் கைதுகள்: -சில உதாரணங்கள்

கொழும்பில் மிக வேகமாக அதிகரித்து வரும் தமிழர் கைதுகளைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருப்போரை வெளியே எடுத்துவிடும் தரகர்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

மிகவும் மோசமான முறையில் இளைஞர்களும், யவதிகளும் கைது செய்துவரும் பொலிஸார், தற்போது, எவர் அதிகமான தமிழர்களை கைது செய்கிறார்கள் எனும் போட்டியில் பொலிஸ் நிலையங்கள் பல ஈடுபட்டுவருவதாகவும் நம்பகமாகத் தெரிகிறது.

மேலும், கொழும்பு லொஜ்ஜுகளுக்கு புகுந்து தேடுதல், கைது ஆகிய இன்னோரன்ன வேட்டைகளை புரிந்துவரும் பொலிஸார் லொட்ஜ் உரிமையாளர்களிடம் 'தமிழர்கள் தங்குவதற்கு இனி இடம் கொட வேண்டாம்' என எச்சரித்துச் சென்றுள்ளதாகவும் தெரிகிறது

கல்கிஸ்ஸ, தெகிவளை, வெள்ளவத்தை பகுதிகளில் நடமாடித்திரிந்த 18 தமிழர்கள் கல்கிஸ்ஸ பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு மேலதிக மாவட்ட நீதிபதியான ஜயந்த பெரரேராவினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள்,

**பேலேறியன் நிஷாந்தன் - மட்டக்களப்பு**
**செல்வரத்தினம் பிரபாகரன் - வவுனியா**
**சபாபதி சிவகரம் - நுவரேலியா**
**மகாதேவன் மன்னன் - நுவரேலியா**
**ஏ.அழகரத்தினம் - யாழ்ப்பாணம்**
**விசுவாசம் பார்த்தீபன் - மட்டக்களப்பு**
**ராஜா பிரதீபன் - திருகோணமலை**
**எஸ்.ஜெகநாதன் - யாழ்ப்பாணம்**
**ஆர். செல்வராஜா- பதுளை**
**எம். பீலக்ஸ் - யாழ்ப்பாணம்**
**கே.சிவநேசன் - பருத்தித்துறை**
**கொலின் ப்ராங்க் - யாழ்ப்பாணம்**
**ஆர்.கணபதிப்பிள்ளை - யாழ்ப்பாணம்**
**ஜீ. நந்தன் - யாழ்ப்பாணம்**
**வீ.அல்மன் பெஞ்சமின் - யாழ்ப்பாணம்**
**கே.ராஜசிங்கம் - யாழ்ப்பாணம்**
**கந்தசாமி செல்வம் - யாழ்ப்பாணம்**
**ட.திருநாவுக்கரசு - யாழ்ப்பாணம்**

# முஸ்லிம்கள் மீது அரபாத் நகரில் அரச படையினர் வெறியாட்டம்!

மே 6ம் திகதி புல்மோட்டை அரபாத் நகரில் இடம் பெற்ற சம்பவம் கிழக்கு அரசியலில் குறிப்பாக முஸ்லீம் அரசியலில் ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளால் ஓடாமலை இராணுவமுகாம் தாக்கப்பட அங்கிருந்து ஒருகிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் அமைந்துள்ள ஆலடி இராணுவ முகாமிலிருந்து பொதுமக்களுக்கு இராணுவம் பதிலடி கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே இராணுவ அதிகாரிகளால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த மக்கள் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பகல் பன்னிரண்டு மணியளவில் புலிகள் ஓடாமலை முகாமைத் தாக்கியுள்ளார்கள், வெடிச்சத்தம் கேட்டதும் மக்கள் இராணுவ ஆலோசனையின் படி கதவுகளைத் தாளிட்டுக் கொண்டு வீடுகளுக்குள் இருந்திருக்கிறார்கள். ஆனால் ஆலடி முகாமிலிருந்து வந்த கோப்ரல் சில்வா என்பவரும் இன்னுமொரு இராணுவ வீரரும் ஒரு வீட்டை உடைத்து சகட்டு மேனிக்கு இரண்டு மகசின் தீரும்வரை வேட்டுக்களைத் தீர்த்திருக்கிறார்கள். இத்தனைக்கும் சில்வா அந்த. வீட்டில் தானாம் குளிப்பதற்காக வாளி எடுக்கும் பழக்கமுள்ளவர். அப்பாவிகளான எங்களை சில்வா இப்படிச் சுடுவார் என்று நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை என்று உயிர்தப்பியோர் ஓலமிடுகிறார்கள்.

துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பிள்ளைகள் உட்பட ஐவர் பலியாகியுள்ளனர். இதில் பலியான வல்கீஸ் உம்மா என்ற 26 வயதுப் பெண்ணின் கழுத்துச் சங்கிலியும் அறுக்கப்பட்டதோடு, பெறுமதியான தோடுகளுக்காக இரண்டு காதுகளும் வெட்டப்பட்டிருக்கின்றன. இந்தப் பெண்ணின் 3 மாதக் குழந்தையொன்று காயங்களுக்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றது.

புலிகளுக்கு உதவினார்கள் என்கிறது இராணுவம். எங்களுக்கும் புலிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்கிறது பலியானோர் குடும்பம்.

இந்தக் கொலைகளைப் புலிகளே செய்தனர் என்ற் தோரணையில் ஹஜ் கடமைக்குச் செல்லும் அரசாங்கத்தைச் சேர்ந்த முஸ்லீம் அரசியல்வாதிகள் அறிக்கை விட்டுள்ளனர். இல்லை இல்லை இராணுவம் தான் செய்தது என்கிறது முஸ்லீம் காங்கிரஸ்.

ஆனால் அங்குள்ள பொதுமக்களோ புல்மோட்டை அரசியல்வாதிகளை நம்பத் தயாரில்லை. கொழும்பிலும், பாதுகாப்பான இடங்களிலும் இருந்து கொண்டு அறிக்கைகள் விடும் அரசியல்வாதிகள் எங்களுக்குத் தேவையில்லை என்கிறார்கள் இந்த ஊர்ப் பிரமுகர்கள்.

சம்பவம் நடந்த இடத்துக்கு எந்த அரசியல் வாதிகளும் வரவில்லை என்பது இவர்களது கோபத்துக்குக் காரணம். சம்பவதினத்துக்கு அடுத்தநாள் மக்கள் ஆர்ப்பாட்டத்துடன் கூட்டமாக பொலிஸ்நிலையம் செல்ல அவர்களை சமாளித்து சமாதானம் செய்து அனுப்பியிருக்கிறார்கள் பொலீஸார்.

இதுபோன்ற சம்பவம் இனிமேல் நடக்க அனுமதிக்கமாட்டோம் என்று வழமை போல இராணுவ அதிகாரிகள் மக்களிடம் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். மொத்தத்தில் எந்த முஸ்லீம் அரசியல்வாதியும் புல்மோட்டைப் பக்கம் கால் வைக்கவில்லை. தமிழ் அரசியல்வாதிகளோ கண்டு கொள்ளவேயில்லை. அரசோ மோதலுக்கு இடையில் அகப்பட்டவர்கள் என்று திரிக்கிறது!

விவேகி

# நான் கைது செய்யப்பட காரணமென்ன?

-டொக்டர் சாந்தகுமார்



## - தடுப்புக் காவலிலிருந்து ஒரு கடிதம்

"என்ன காரணத்துக்காக நான் கைது செய்யப்பட்டேன் என்பதைக் கேட்கத்தான் உரிமை இல்லையென்றால் எனது வாக்குமூலத்தை எனது தாய்மொழியில் வழங்கக்கூட எனக்கு உரிமை இல்லையா?"

இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் டொக்டர் சாந்தகுமார், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். கடந்த வருடம் டிசம்பர் மாதமளவில் புலிகள் என்று குற்றஞ்சாட்டி மலையகத்தில் மேற்கொண்ட கண்மூடித்தனமான கைதுகளின் போது சாந்தகுமாரும் (டிசம்பர் 10ம் திகதி) கைது செய்யப்பட்டார்.

புதிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த இவர் கடந்த காலங்களில் ஜே.வி.பி. என்ற குற்றச்சாட்டின் பேரில் பூஸா, வெலிக்கடை, மெகஸீன் போன்ற சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர். இவர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கீழ்வருமாறு தெரிவித்துள்ளார்.

"தாங்கள் மார்ச் 20 திகதியிட்டு எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்களில் நம்பிக்கை வைத்தே நான் எனது விடுதலை தொடர்பாக மேற்கொண்டிருந்த உண்ணாவிரதத்தை கைவிட்டேன்..

உங்கள் கடிதத்தில் பாதுகாப்பு அமைச்சு கூடியவிரைவில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமென குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் ஒரு மாதத்திற்கு மேலாகியும் எந்த விதமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

1994 டிசம்பர் 24ம் திகதி என்னிடமிருந்து வாக்குமூலம் எடுத்தனர். எனது தாய்மொழியில் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. அதில் கையெழுத்திடும் போது 'என்ன அதில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது' என்ற போது 'நீ சொன்னவை தான் பதியப்பட்டுள்ளன கையெழுத்திடு' என வற்புறுத்தினர்... டிசம்பர் 23ம் திகதியிலிருந்து ஜனவரி முதலாம் திகதிவரை நான் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டேன்.... கடந்த காலத்தில் நான் அனுபவித்த சித்திரவ்தையில் ஏற்பட்ட வடுக்களை ஞாபகப்படுத்தியே வாக்கு மூலமும் பெறப்பட்டது. சிங்களத்தில் கையெழுத்திடுமாறும் என்னை வற்புறுத்தினர். இது தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்படுமானால் சித்திரவதை தொடர்பாக விபரமாக வாக்கு மூலமளிக்க நான் தயாராக உள்ளேன்....

என்னைப் பார்க்க வந்த எனது குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும் நான் சிங்களத்தில் கதைக்கும் படி வற்புறுத்தப்பட்டேன்.

1972 இல் இடதுசாரி அரசியலில் பிரவேசித்த நான் ஜனநாயகரீதியான நடவடிக்கைகளிலேயே இதுவரை ஈடுபட்டுவந்துள்ளேன். வேறு குறுகிய அரசியல் எனக்கு கிடையாது.

இது அவருடைய கடிதத்தின் சில பகுதிகள்

அரசியல் கைதிகள் தொடர்பாகவும், மனித உரிமைகள் மீறல் தொடர்பாகவும் தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வருமுன் சொன்ன உத்தரவாதங்களை ஞாபகப்படுத்துவோம். இந்த சமூக அமைப்பு முறைக்குள் எந்த அமைப்பு பதவியேற்றாலும் நிலைமை இதுதான் என்று கூறப்படுவது சரிதானா?

# புகைப்படம் பிடிக்கும் பொலிசார்

உண்மையான "பயங்கரவாதிகள்" யாரென அறிந்து கொள்வதற்காகப் பொலிஸ், இராணுவப் பிரிவுகள் மூலமாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் தமிழர்கள் அனைவரையும் புகைப்படம் பிடிக்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தனித்தனியாகப் புகைப்படம் பிடித்து அவர்களின் பெயர், ஊர், கைரேகை அடையாளங்கள், உடலிலுள்ள அடையாளங்களைப் பெற்றுக் கொண்டபின் பொலிஸ் குற்றச்சாட்டெதுவும் இல்லாதவர்கள் விடுவிக்கப்படுவர்.

வெளிநாடுகளில் இம்முறையினால் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கப்படும் எந்த நபரையும் ஒரு சில நிமிடங்களினுள் அடையாளங்காணக் கூடியதாயிருக்கும்.

கொழும்பு நகரில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடும் அனைத்துத் தமிழர்களையும் குற்றப் புலனாய்வுத் தலைமையகமும், ஏனைய பொலிஸ் நிலையங்களூடாகவும் புகைப்படமெடுப்பது தற்போது செயற்படுத்தப்படுவதாகப் பொலிஸ் கூறுகிறது.

கடந்த சில நாட்களில் கொழும்பில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றின் போது நேரில் கண்ட சாட்சியங்களிடம் இவ்வாறு பெறப்பட்ட புகைப்படங்களினூடாகச் சந்தேக நபரை அறிந்து கொள்ள முடிந்ததாகப் பாதுகாப்புப் பிரிவு கூறுகிது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் அனைத்து நபர்களும் புகைப்படமெடுத்ததன் பின்பு அவற்றைக் கைது செய்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் உட்பட வேறு தமிழ் இயக்கங்களின் உறுப்பினர்களிடம், பொலிஸ் இராணுவ புலனாய்வுப் பிரிவுகளினூடாகக் காட்டிப் புலிகள் யாரென அறிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத் திட்டத்தின்படி மே 6வரை வெள்ளவத்தையிலிருந்து முக்கிய கடற்புலியொருவரையும், மேலும் ஆயுதந்தாங்கிய புலிகள் நால்வரை முகத்துவாரத்திலிருந்தும் கைது செய்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்ட புலிப் 'பயங்கரவாதி'களின் படங்களை அவ் அவ் பொலிஸின் ஊடாக ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாவது ஈழப்போர் ஆரம்பம்! முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு?

## ஆர். எம். இம்தியாஸ்

மூன்றாம் ஈழப்போர் உத்தியோக பூர்வமற்ற முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிகவும் உற்சாகமாக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்ட சமாதான முயற்சிகள் கவலைமிகு அளவில் பின்னடைந்துள்ளன. வட கிழக்கு மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு முறை யுத்தப்பயங்கள் மீளெழுந்துள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்தில் வட, கிழக்கு முஸ்லீம்களின் நிகழ்கால இருப்பு கேள்விக்கிடமாகியுள்ளது.

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த ஒரு குறுகிய காலத்தில் வட, கிழக்கு முஸ்லீம் மக்கள் புலிகளின் குறுந்தேசியவாத நடவடிக்கைகளினால் மிக மோசமாகப் பாதிப்படைந்தனர் என்பது வெளிப்படையான அரசியல் சமாச்சாரமாகும். இதற்கு பதிலாய் முஸ்லீம் குறுங்குழுவாத பிரிவினர் அதேயளவு காட்டுமிராண்டித்தனத்தை தமிழ் மக்கள் மீது பிரயோகித்ததும் நிராகரிக்க முடியாததொரு வரலாற்று உண்மையாகும். இச்சம்பவங்களின் பின்னால் இன்றைய முஸ்லீம் காங்கிரஸின் சிரேஸ்ட உறுப்பினர்களும் வசதியா அமர்ந்ததும் குறிப்பிடத்தக்க விவகாரமேயாகும். இவ்வித அதிதீவிரவாத அல்லது குறுங்குழுவாத நடவடிக்கைகளினால் தமிழ் முஸ்லீம் இன ஒற்றுமை என்றுமில்லாதவாறு சிதைந்தது; பேரினவாத அரசியல் தலைமைகளும் வெற்றிகரமாய் சதிகளை ஒழுங்குபடுத்தியது.

இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் ஒழுங்குபடுத்தப்படுமாயின் அது இவ்விரு இனங்களுக்கிடையிலான ஒற்றுமையினை இன்னும் ஒரு ஐம்பது வருடங்களுக்காவது பின்னடையச் செய்யும். இவை எல்லாவற்றுக்கும் மேலாய் சந்தர்ப்பவாத இனத்தலைமைகள் தமது அதிகார இருப்பை அழகான முறையில் நிறுவனமயப்படுத்தும்.

புலிகள் சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிராய்ப் போராடுவது ஒன்றும் பிழையான சமாச்சாரம் அல்ல. சமாதானத்தினை நேர்மையாக விரும்பாத ஒரு அரசுடன், சிறுபான்மை மக்களது அடிப்படைப் பிரச்சினைகளை நிதானமாய் அணுகத் தவறும் அரசுடன், தேசியப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்க ஆளுமையற்ற ஒரு அரசுடன் தமிழர்கள் எனப்படுபதற்காய் அடக்கப்படும் ஒரு சமூகத்தின் தவிர்க்க முடியாத ஒரு பிரதிநிதித்தலைமை என்ற வகையில் புலிகளின் இன்றைய யுத்தத்திற்கு ஒரு நியாயத்தன்மை இருப்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், புலிகளின் முஸ்லீம் விரோத உணர்வுகள் மேற்சொன்ன காரணங்களுக்காய் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாதவை.

புலிகளின் முஸ்லீம்கள் விவகாரத்தில் சாதகமானதொரு நிலைப்பாட்டை மிக அண்மைக்காலம் முதலாய் கடைப்பிடித்துவருவதாக அறியவருகிறது. இந்நிலைப்பாடுகள் தொடர்பாக புலிகளின் தலைமைப்பீடம் இதுவரை உத்தியோக பூர்வமான அறிக்கைகளை வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடக்கூடிய விவகாரமாகும். இவ்வாறனதொரு சூழ்நிலையில் சாதாரண முஸ்லீம்கள் மத்தியில் தமிழ்ப்புலிகளின் மீதான சந்தேகம் மேலும், மேலும் தொடர்வது நியாயமானதே.

மூன்றாம் ஈழப்போர் முன்னெடுக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் அதிகமான அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு இனக்குழுவாக வட, கிழக்கு முஸ்லீம்கள் உள்ளனர். மீண்டும் ஒரு முறை தமிழ்ப்புலிகள் தமது பழைய வீர பிரதாப சம்பவங்களை விசாலமாக்குவார்களா என்றதொரு சந்தேகம் உருவாகிவருகிறது. அண்மைய மோதல் தவிர்ப்பு உடன்படிக்கைக் காலகட்டத்தில் நடந்த சில சம்பவங்கள் இதற்கு இன்னும் இன்னும் பலத்தைக் கொடுத்துள்ளன. (சாய்ந்தமருது, கல்முனை போன்ற அம்பாறை மாவட்ட முஸ்லீம் பகுதிகளில் புலிகள் என்று நம்பப்படும் நபர்கள் முஸ்லீம்களுக்கு சொந்தமான வாகனங்களை பலாத்காரமாய் பறித்துச் சென்றுள்ளமை இதற்கு சிறப்பான ஆதாரமாகும்.) ஆயின் மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் துயர்மிகு சம்பவங்கள் தொடர அனுமதிப்பது விவேகமானதல்ல.

கடந்தகால அனுபவங்களை எல்லாம் முற்றுமுழுதாக மறந்துவிட்டு மீண்டும் முஸ்லீம்களின் பொருளாதார வளங்களை அழித்தல், முஸ்லீம்களை கொலை செய்தல் போன்ற குறுங்குழு



வாத அல்லது காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது பிரச்சினைகளை மேலும்கூர்மையான தாக்கும்; இவற்றுடன் முஸ்லீம் காங்கிரஸ் போன்ற அரை வேக்காட்டு அரசியல் தலைமைகள் கதாநாயகப் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளவதை வசதியாக்கும்.

கடந்த கால இரு இன முரண்பாட்டு நிகழ்வுகளில் முஸ்லீம்களது பங்கும் கணிசமாகவுள்ளதனை நேர்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். வட, கிழக்கில் முஸ்லீம் மக்கள் மிகுந்த ஐக்கியத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர். ஆயின் மிகத்திட்டவட்டமான முறையிலேயே இங்கு இன ஐக்கியம் சிதைக்கப்பட்டுள்ளது. முஸ்லீம் அரசியல் தலைமைகளின் பேரினவாத சார்புநிலை இவ்வாறான முரண்பாடுகளுக்கு முக்கியமானதொரு காரணமாகும். சகோதர சிறுபான்மை சமூகம் உயிர்வாழ்வதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது அச்சிறுபான்மை சமூக இனக்கோரிக்கைகள் தொடர்பாக அசிரத்தையான அறிக்கைகள் விடுதல், சிங்களப் பேரினவாத அரசுக்கு நம்பகமாய் ஒத்துழைப்புக் கொடுத்தல் மற்றும் போராளிகளைக் காட்டிக்கொடுத்தல் போன்ற பிறபோக்குத்தனமான நடவடிக்கைகளை முஸ்லீம் அரசியல் தலைமைகள் வெற்றிகரமாய் நடாத்தி முடிதுள்ளன. இச்சம்பவங்களுக்கு வெறுமனே ஐ.தே.க. தலைமைகள் மட்டுமன்றி, முஸ்லீம் காங்கிரஸ் தலைமைகளும் பொறுப்பான பங்கை வகித்துள்ளன.

அரசியல் தலைமைகளின் இச்சம்பவங்களுக்கு அப்பால் முஸ்லீம் சமூகத்தின் போராளிக்குழுக்கள் என்று தங்களை தாமே அடையாளப்படுத்த முனைந்த சிறு, சிறு குழுக்களும் தமிழ் மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளன. இக்குழுக்களுக்கு சிங்கள அரசின் கூலிப்படைப் பிரிவினர் தாராளமாக ஆயுதங்களை வழங்கியதும் குறிப்பிடத்தக்கதே.

இவ்வாறான நிலைமைகள் இன்னும் ஒருமுறை வியூகமாகுமிடத்து நிகழ்கால சுமுகமான நிலையும் நிர்மூலமாகும் தமிழ்- முஸ்லீம் மக்கள் மத்தியில் இன்னொரு இன வெறுப்பினை ஏற்படுத்துவதில் உயர்மட்ட சக்திகள் கடுமையான ஆர்வத்தைப் பிரதிபலித்துவருகின்றன. இதனை இரு இனத்தலைமைகளும் மிக விழிப்பாய் அறிந்து கொள்ள வேண்டும். கடந்த கால இன அமைதியின்மைக்கு வெறுமனே புலிகளின் மீது மட்டுமோ அல்லது முஸ்லீம் தலைமைகள் மீது மட்டுமோ பொறுப்புக்களைச் சுமத்த முடியாது. பிழைகள் இரு தரப்பிலும் நிகழ்ந்துள்ளன என்பதை உணர்வுபூர்வமாக உணரல் வேண்டும்.

புலிகள் இன்றைய தமிழ்த்தேசியப் போராட்டகாலத்தில் தமது விருப்பு, வெறுப்புக்களுக்கு அப்பால் முன்னணிப் பார்த்திரத்தை வகித்து வருகின்றனர். ஆகையால், முஸ்லீம்கள் விவகாரத்தில் குறிப்பாய் அவர்களது பாதுகாப்பு விடயத்தில் நேர்மையான முறையில் நடந்து கொள்ள வேண்டும். மிகக் குறிப்பாக முஸ்லீம் கிராமங்களைத் தாக்குதல், மசூதிகளில் கொலை செய்தல், பொருளாதார வளத்தைச் சூறையாடுதல் போன்ற அருவருக்கத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் பிரிக்க முடியாத சகோதர அணியாக வட, கிழக்கு முஸ்லீம்கள் காணப்படுகின்றனர். தமிழ், முஸ்லீம் ஐக்கியம் பொது எதிரிக்கு எதிரான சிறப்பானதொரு அரசியல் ஒழுங்குபடுத்தலாகும். முஸ்லீம் காங்கிரஸ் போன்ற சந்தர்ப்பவாத தலைமைகளின் நடவடிக்கைகளைக் கொண்டு முஸ்லீம்களை குறைவாக அவதானிப்பதும், தமிழ்க் குழுக்களின் குறுங்குழுவாத நடவடிக்கைகளைக் கொண்டு தமிழர்களை அந்நியப்படுத்துவதும் அரசியல் ரீதியில் எவ்வகையான சாதகங்களையும் மிஞ்சவைக்காது என்பதனை பொதுவாக இரு இனத்தலைமைகளும் மிகக் குறிப்பாக புலிகளும் உணர்ந்து கொள்வது இன்றைய போராட்ட சூழலில் சிக்சலற்ற முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

# ''உள்நாட்டு கலைஞர்களை ஊக்குவிப்போம்''

# தொண்டாவின் மேதின 'தேசியம்'!

## -வேலுச்சாமி

இம்முறை மேதினம் முன்னரைப் போல மலையகத்தில் களை கட்டவில்லை. மலையக அமைப்புக்கள் மக்களைக் கவர்வதற்காக உள்ளூரிலும் இந்தியாவிலும் இருந்து பாடகர்களை வரவழைத்து இசைக்கச்சேரிகளை நடாத்திய போதும் மக்கள் தொகை முன்னரை விட மிகக் குறைவாகவே காணப்பட்டது. பொலிஸாரின் பாதுகாப்புக் கெடுபிடி ஒரு புறமிருக்க மலையக அமைப்புக்கள் மீது மக்களுக்குள்ள அவநம்பிக்கையும் இதற்கு ஒரு காரணமாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

அனைத்து அமைப்புக்களின் மேதின கூட்டங்களிலும் தலவாக்கலையில் நடைபெற்ற வி.பி.கணேசன் தலைமையிலான கூட்டத்திலேயே மக்கள் தொகை அதிகமாக காணப்பட்டது. சுமார் 10 ஆயிரம் வரையிலான மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதற்கு காரணம் ஜ.தொ.கா மலையக மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று விட்டது என்பதல்ல. இக்கூட்டத்திற்கென தமிழ் நாடடிலிருந்து பிரத்தியேகமாக அழைக்கப்பட்ட சௌந்தரராஜன் - சுசிலா குழுவினரின் இசைக்கச்சேரியே காரணமாகும். இசைக்கச்சேரியின் போது திரண்ட மக்களைப் பார்த்து புளகாங்கித்ததோடு சௌந்தரராஜன் பின்வருமாறு கூறினார். '' மலையகத்தில் இவ்வளவு ரசிகர்கள் எனக்கு இருக்கின்றார்கள் என்பது இப்பதான் எனக்குத் தெரியும்.''

இவ் இசைக்கச்சேரி பிரபல வர்த்தகரும் இந்திய சமுதாயப் பேரவை உறுப்பினருமான விஜயபாலனின் உபயத்தில் நடந்தது. இவர் முதலில் இ.தொ.கா.வின் விசுவாசியாக இருந்தார். அங்கு அவரை யாரும் கணக்கில் எடுக்கவில்லை. சந்திரசேகரனை நோக்கி ஓடிச்சென்றார். சென்ற தேர்தலில் பணத்தை தேவையானளவு கொட்டி அவரை வெற்றி பெறச் செய்தார். கட்சிக்குள் தனக்கு நல்ல இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். பலனில்லை. இப்போது ஜ.தொ.கா. பக்கம் முகம் திரும்பி இருக்கின்றார்.

இ.தொ.காவின் மேதினக்கூட்டம் இம்முறை பண்டாரவளையில் நடைபெற்றது. வழக்கமாக 30 ஆயிரம் - 40 ஆயிரம் பேர் வரையில் மக்கள் கலந்துகொள்கின்ற மேதினத்தில் இம்முறை வெறும் 7 ஆயிரம் வரையிலேயே மக்கள் கலந்து கொண்டனர். அதுவும் பெண்கள் தொகை 40 -50 வரையிலேயே காணப்பட்டது. பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சென்னனுக்கு பயந்து பெண்கள் வரவில்லை போல தெரிகின்றது. (அவரது அண்மைக்கால பெண் சேஷ்டைகள் ஊரறிந்த ரகசியம்)

வழக்கம் போலவே இம்முறையும் இசைக்கச்சேரியுடனேயே கூட்டம் நடைபெற்றது. ஒரு வித்தியாசம் இவ்வளவு காலமும் இந்தியாவிலிருந்து வந்து பாடகர்கள் கலந்து கொண்டனர். இதுவும் மக்கள் தொகைக் குறைவுக்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

தனது பழைய வழக்கத்தை சந்திரசேகரன் பி... ற்றிவிட்டார் (மலையக மக்கள் முன்னணி இந்தியாவிலிருந்து பாடகர்களை வரவழைத்திருந்தது) என்பதற்காக எரிச்சல் பட்டு தொண்டமான் கூட்டத்தில் பின்வருமாறு கூறினார். ''நாங்கள் மற்றவர்களைப் போல வெளியாட்களைக் கொண்டுவரவில்லை. உள்ளூர் கலைஞர்களின் திறமையை வெளிக்காட்டவே முனைந்திருக்கிறோம்''.

மலையக மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டம் இம்முறை நுவரேலியாவில் நடைபெற்றது. தான் தொண்டமானின் உண்மையான வாரிசு என்பதைக் காட்டும் வகையில் சந்திரசேகரன் முதன் முதலாக இந்தியாவிலிருந்து பாடகர்களை வரவழைத்து இசைக்கச்சேரியை நடாத்தினார். எனினும் ஏமாற்றம் தான் 3500 வரையிலேயே மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பதவியில் தொடர்ந்து ஒட்டிக் கொண்டே மலையக மக்களின் பிரச்சினையை அரசு தீர்க்க முன்வரா விட்டால் அரசுக்கு கொடுக்கும் ஆதரவையும் விலக்க பின்நிற்கமாட்டோம் என்று ஆக்ரோஷமாக பேசினார். இவரின் ஶ்ரீபாத கல்விக் கல்லூரிக் கோரிக்கை என்னாச்சு என்பது அவருக்குத்தான் வெளிச்சம்.

இ.தொ.கா.விலிருந்து விலக்கப்பட்ட செல்லச்சாமி தலைமையிலான தேசிய தொழிலாளர் காங்கிரசின் மேதினக் கூட்டம் ஹட்டனில் அன்று காலை நடைபெற்றது. செல்லச்சாமியும் அவரது மனைவி வேலம்மாளும் அவரது மத்திய மாகாண சபைச்சகாக்களான அண்ணாசாமி, தங்கவேல், ரங்கநாதன் என்போரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். சுமார் 2 ஆயிரம் பேர்வரை மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வேலம்மாள் பேசும் போது செல்லச்சாமியின் வாரிசு நானே என்றார். இதனால் செல்லச்சாமிக்கு பின்னர் நானே தலைவி என்றார். மாகாணசபை சகாக்களுக்கு வந்தது கோபம். வேலம்மாள் பேசிக்கொண்டிருக்கும் போதே ஆசனத்தை விட்டெழுந்த மூவரும் வீட்டிற்கு நடையைக்கட்டினர். கூட்டத்திலும் பேசவில்லை. செல்லச்சாமி ஒழுங்கு செய்திருந்த மதிய விருந்திலும் கலந்து கொள்ளவில்லை.

மத்திய மாகாண சபை உறுப்பினர் ஐயாத்துரை தலைமையிலான தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மேதினக் கூட்டம் டிக்கோயாவில் நடைபெற்றது. 5 ஆயிரம் பேர் வரையிலான மக்கள் கலந்து கொண்டனர்.

செங்கொடிச்சங்கம் மலையகத்தின் நிலைமை அறிந்தோ என்னவோ மலையகத்தில் மேதினத்தை நடாத்தும் எண்ணத்தை கைவிட்டிருந்தது. பிரதி அமைச்சர் கஜவீராவுடன் சேர்ந்து மாத்தறையில் மேதினத்தை நடாத்தியது.

மே 13ம் திகதி மலையக மண்ணுக்காக உயிர்நீத்த சிவனு - லெட்சுமணனின் ஞாபகார்த்த தினம் சினிமாப்பாட்டுக் கச்சேரியில் லயித்திருந்த மக்களும் அரசியல்வாதிகளும் இம்மேதினத்தில் அவரை மறந்தேவிட்டனர். எந்த ஒரு அமைப்பின் மேதினக்கூட்டத்திலும் அவர் நினைவு கூரப்பட்டதாகத் தெரியவில்லை.

மேதின சுலோகங்களிலும் பழைய பல்லவி தான். மலையக குடியேற்றத்தை எவ்வாறு நிறுத்துவது, வகை தொகையற்ற கைதை எவ்வாறு நிறுத்துவது, மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையை எவ்வாறு வென்றெடுப்பது என்பது பற்றி எந்த முழக்கங்களையும் மேதினத்தில் காணவில்லை.

இந்நிலையில் இசைக்கச்சேரியை வைத்து மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகளும் அதில் மயங்கித் திணறும் மக்கள் கூட்டமும் இருக்கின்ற மலையகத்தைப்பற்றி யாருக்கு சொல்லி அழுவது.

மலையக அரசியல்வாதிகள் இவ்வாறு மக்களை ஏமாற்றுவதை விட எல்லோரையும் உணவில் நஞ்சூட்டிக் கொன்றுவிடலாம், என்று சொன்னார் இந்த வேடிக்கைகளை பார்த்துக்கொண்டிருந்த ஒரு தொண்டர்.

''மக்கள் செத்துவிட்டால், பிறகு தலைவர்கள் எப்படி இருப்பது? வாக்குப் போடுவதற்கு சக்தியும், உண்மையை புரிந்து கொள்ளாத அளவுக்கு முட்டாள்தனமும் மக்களுக்கு இருந்தால் போதும். அதுமட்டும் தான் நம்ம தலைவர்களுக்கு தேவை!'' என்று இதற்குப் பதிலளித்தார் ஒருவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வசந்தராஜாவின் ராஜினாமா கடிதம்: அரசு போகும் திசை எது?

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த வசந்தராஜா அவர்கள் தமது பதவியிலிருந்து விலகியுள்ளார். தமது பதவி விலகல் கடிதத்தை அவர் தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா அவர்களிடம் கடந்த வாரம் கையளித்த போது அமைச்சர் பின்வருமாறு கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

'நீங்கள் தலைவராக நியமிக்கப்பட்டதும் எனக்குத் தெரியாது. இப்போது விலகுவதும் எனக்குத் தெரியாது''

உண்மையில் வசந்தராஜாவின் பதவி விலகலுக்கான காரணம், அவருக்கும் அவரது அமைச்சரான தர்மசிறி சேனநாயக்காவுக்கும் இடையிலான முரண்பாடு அல்ல; மாறாக அவருக்கும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் இடையிலான முரண்பாடு என்றே பேசப்படுகிறது. வசந்தராஜா (தமிழ் தெரியாத ஒருவர் இவர்; இவரது தகப்பனார் ஒரு தமிழர் என்ற போதும், இவர் பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாம் கம்பஹா மாவட்டத்தில். சிங்களத்தில் படித்துப் பட்டம் பெற்றதுடன் பி.பி.சியின் சிங்கள மொழி நிகழ்ச்சியான 'சந்தேசிய' நிகழ்ச்சிக்கு பொறுப்பானவராகவும் இவர் இருந்துவந்தார்) அவர்கள் பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்தபோது, அடுத்ததாக வரவிருந்த ஜனாதிபதி தேர்தலை நோக்காகக் கொண்டு அன்றைய பிரதமரான சந்திரிகா அவர்களால் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர். ஜனாதிபதி தேர்தலின் போதும், அதன் பிறகான சமாதான பேச்சுவார்த்தைக் காலத்திலும் அரசுக்கு சாதகமாக ரூபவாஹினியை பயன்படுத்த இவரது பங்களிப்பு நிறையவே பயன்பட்டதை யாவரும் அறிவர்.

ஆனால், அரசு திரும்பவும் யுத்தம் செய்வது என்ற முடிவுக்கு வந்த பின்னர் நிலைமை தலைகீழாக மாறிப்போயிற்று. தேசிய இனப் பிரச்சினை தொடர்பான அரசின் அணுகுமுறை தனது மனச்சாட்சிக்கு சாதகமாக இருந்ததால் தான் அப்போது தலைவராக இருக்க முடிந்ததென்றும், இப்போது அரசின் அணுகுமுறை மாறியுள்ளதால் தனக்கு அரசின் பல முக்கியஸ்தர்களுடன் முரண்பாடு தோன்றியுள்ளதாகவும் அதுவே தனது விலகலுக்கான காரணம் என்றும் வசந்தராஜா தமது விலகல் பற்றி கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்டுவிட்டு, வேலை முடிந்ததும் தூக்கி வீசப்பட்ட முதலாவது தொடர்பு சாதனத்துறையாளர் இவர்.

சுதந்திர பத்திரிகை, கருத்துச் சுதந்திரம் என்பவை தொடர்பாக, தேர்தல் கால அபிப்பிராயங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட - சரியாக சொல்வதானால் நேர் எதிரான கருத்துக்களை - அரசு அமைத்தபின் பொ.ஐ.முவினர் பேசத்தொடங்கிவிட்டனர். பத்திரிகைச் சுதந்திரத்தை காட்டுக் கழுதை சுதந்திரம் என்று ஏற்கெனவே ஜனாதிபதி அவர்கள் வேறு அறிவித்திருந்தது இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

வசந்தராஜா விவகாரம், வெறுமனே ஒரு தொடர்புசாதனவியலாளரை (Journalist) எவ்வாறு அரசு தனது நோக்கங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தியது என்பதற்கான உதாரணம் மட்டுமல்ல கொள்கைகளில் எவ்வாறு முன்னைய இனவாத அரசாங்களுக்கு தான் சற்றும் குறைவில்லாதது என்று காட்டியுள்ளது என்பதற்குமான ஒரு உதாரணமுமாகும்.

'அவ்ரோ' விமானங்கள் மீதான தாக்குதலை அடுத்து அரசாங்கம், வடக்கு கிழக்குக்கு புனருத்தாரணத்திற்காக ஒதுக்கிய நிதி, மற்றும் பிற நிதிகள் அனைத்தையும் அவசர அவசரமாக ஆயுதக் கொள்வனவுகட்காகவும், பாதுகாப்பு நிதிக்காகவும் திருப்பியுள்ளது. ஏற்கெனவே ஊழல், மோசடி என குற்றம் சாட்டப்பட்டு கைவிடப்பட்டிருந்த அனைத்து ஆயுதக் கொள்வனவு விடயங்களும் உடனடியாக திரும்பவும் கவனத்திலெடுக்கப்பட்டு, அவற்றை வாங்குவதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன. இந்தியா உட்பட ஒல்லாந்து, அவுஸ்ரேலியா, ஜேர்மனி, சீனா, அமெரிக்கா என்று பல நாடுகளிலிருந்து யுத்த தளபாடங்கள் வாங்கும் முயற்சிகளில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

இதுதவிர, புலிகளை அடக்குவதற்கு எம்மிடம் இரகசிய திட்டம் இருக்கிறது என்று வேறு பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இந்தியா ருடேக்கு அளித்த பேட்டியில் இரத்தவெறி பிடித்தவர்களான புலிகள் சமாதானத்துக்கு ஒரு போதும் வரமாட்டார்கள் என்று எமக்கு அப்போதே தெரியும் என்று ஜனாதிபதியும் கூறியுள்ளார்.

ஆக. மொத்தத்தில் யுத்தம் ஒன்றுதான் புலிகளுடன் பேசுவதற்கான மொழி என்பதனை அரசாங்கம் வெளிப்படையாகவே அறிவித்துவிட்டது. அதற்கு ஏற்றவிதத்தில் ரூபவாஹினியையும் அரசசார்பு பத்திரிகைகளையும் பயன்படுத்த தொடங்கிவிட்டது. போதாததற்கு தணிக்கை சட்டம் கொண்டுவருவதன் மூலமாக, மற்றப் பத்திரிகைகளையும் யுத்த சார்பு நிலையை எடுக்குமாறு - படையினர் மனோநிலையை பாதிக்காவண்ணம் செயற்படுமாறு செய்ய - நடவடிக்கை எடுத்துள்ளது. இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பது மட்டுமல்ல, யுத்தத்தினால் கசப்புற்றிருக்கும் படையினரது அபிப்பிராயங்களுக்கு வாய்ப்பூட்டு போட்டுவிட்டு அவர்கள் உற்சாகமாகவே உள்ளனர் என்ற பொய்யான பிம்பத்தை வெளியே காட்டவும் அரசு முயன்று வருகிறது.



அரசாங்கம் எவ்வளவு தூரத்திற்கு இராணுவத்திற்கு கீழ்ப்பட்டதாக - யுத்தத்துக்கு கீழ்ப்பட்டதாக - தன்னை மாற்றிவிட்டுள்ளது என்பதற்கு ஒரு நல்ல உதாரணம்; அரசாங்க கட்சி எம்.பிக்களான நீல் ரூபசிங்க, பீலிக்ஸ் பெரேரா, ரெஜி ரணதுங்க ஆகியோர் தாம் இராணுவத்தில் சேர விருப்பம் தெரிவித்துள்ளமையாகும். அரசியல் தலைமைத்துவம் இராணுவ போர்வீரனின் நடைமுறைக்கு கீழ்ப்படுத்தப்படும் ஒரு ஆபத்தான சிந்தனையின் தோற்றப்பாடுதான் இது. போகிற போக்கில் ஜனாதிபதியே போர்க்களத்துக்கு வரவேண்டும் என்றும் துப்பாக்கி தூக்கி சமர் புரிய வேண்டும் என்றும் கோரிக்கை எழுப்பப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆட்சியமைக்க முதல், இராணுவத்துக்கு எதிராக, அதன் அத்துமீறல்களுக்கு எதிராக பேசிய ஜனாதிபதியும் அவரது பொ.ஐ.மு.வும் இப்போது அவர்களுக்கும் அவர்களது தியாகங்களுக்கு வாழ்த்துப் பாடுகின்றனர். தமிழ் மக்களின் நலன்களை காக்கவெனக் கூறி திறந்துவிட்ட பொருளாதாரத்தடைகளை 'புலிகளுக்கு எதிரான' சண்டையின் காரணமாக திடீரென்று தடை செய்துவிட்டார்கள். இதுவும் இராணுவத்தின் கோரிக்கைளில் ஒன்று என்பது முக்கியமானது.

சுதந்திரப் பத்திரிகை, கருத்துச் சுதந்திரம் என்பவை தொடர்பாக, தேர்தல் கால அபிப்பிராயங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட - சரியாகச் சொல்வதானால் நேர் எதிரான கருத்துக்களை - அரசு அமைத்தபின் பொஜஐமுவினர் பேசத் தொடங்கி விட்டனர். பத்திரிகைச் சுதந்திரத்தை காட்டுக்கழுதைச் சுதந்திரம் என்று ஏற்கெனவே ஜனாதிபதி அவர்கள் அறிவித்திருந்தது இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள், படையினருக்கு அரசியலதிகாரத்தை வழங்குவதுடன், விரைவிலேயே அவர்களுக்கு சாதகமான விதத்தில் எல்லா நடைமுறைகளும் மாற்றப்பட்டுவிடும் என்பதைக் கட்டியம் கூறுகிறது. அவசரகால சட்டமும் மீண்டும் நாடுபூராவும் கொண்டுவரப்படவுள்ளதாக தெரிகிறது. எனவே இன்றைய 'காணாமல் போதல்' கமிசன்களை போல அடுத்த அரசாங்கங்களும் கமிசனர் நியமிக்க வேண்டி வருவதும்; புதைகுழிகளை தோண்ட வேண்டி வருவதும் தவிர்க்க முடியாமல் வந்தே தீரும்....

போர் வேண்டாம் சமாதானம் வேண்டும் என அரசாங்கம் உணராவிட்டால், இதுதான் நிலை!

ஆனால், சமாதானம் என்பது சந்திரிகா அவர்கள் சொல்வது போலவே ஓரிரு நாளில் சாதிக்கப்படக்கூடியது அல்ல என்பது உண்மைதான். ஆனால், யுத்தத்தை நோக்கி வைக்கப்படும் ஒவ்வொரு அடியும் சமாதானத்துக்கான பாதையில் மேலும் மேலும் அதிகளவு தடைகளை கொண்டு வந்து குவிக்கின்றது என்பதை அவர் கணிப்பதாகத் தெரியவில்லை.

யுத்த தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறியது புலிகள் தான் என்ற குற்றச்சாட்டு பலம் பெற்று பாராளுமன்றத்தில் எதிர்கட்சி தலைவர் ரணில் சுட்டிக் காட்டியது போல புலிகள் இரண்டு தடவை காலக்கெடு விதித்ததைப் பற்றி யாரும் அக்கறைப்படுவதாக தெரியவில்லை. புலிகளின் சார்பில் தொடர்ந்து யுத்தம் செய்வது எமது நோக்கமில்லை என்றும், பூநகரி முகாம் அகற்றப்பட்டால் தொடர்ந்து பேசலாம் என்று கூறப்படுவதும் யாரது காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

புலிகள் எப்போது தவறிழைப்பார்கள், அவர்களை மாட்டிவிடலாம் எனக் காத்திருந்தது போலவே அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

பேச்சுவார்த்தையில் ஈடுபடுபவர்களுக்கென சில அடிப்படை ஒழுக்க முறைகள் உண்டு. அதாவது இருதரப்பாரும் விட்டுக்கொடுத்து, இருதரப்பாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பொதுவான முடிவுக்கு வருவதாகும். ஆனால் இங்கு நடந்ததோ ஒருவரில் எவ்வாறு மற்றவர் குறைபிடிப்பது என்பதாகும். இந்தவகையிலேயே பேச்சுவார்த்தை தொடக்கத்திலிருந்து நடந்துவந்துள்ளது.

அரசாங்கம், போர் நிறுத்த ஒப்பந்த முறிவுக்குப் பின் நடந்து கொண்ட விதம் இதைத் தெளிவாக உணர்த்துகிறது.

இதேவேளை, அரசாங்கம் தனது தீர்வுத் திட்டத்தை அரசியல் கட்சிகளின் முன்வைப்பதாக அறிவித்துள்ளது. இதன்படி வடக்கு கிழக்கு இணைப்பு, அதிகாரப் பரவலாக்கம் என்பன சம்பந்தமாக தமிழ்க்கட்சிகளுடன் பேசவுள்ளதாகத் தெரியவருகிறது. புலிகளுடனான சமாதானப் பேச்சின்போது எப்படி இழுத்தடிப்புக்களை அரசு மேற்கொண்டதோ அதேமாதிரியான இழுத்தடிப்புக்களை இந்த விடயத்திலும் மேற்கொள்ளக்கூடாது என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.

தனது தீர்வுத்திட்டத்தை அரசு முன்வைக்கவுள்ள இந்த நேரத்தில், நாம் இப்பத்தியில் பல தடவை சுட்டிக்காட்டியபடி, பின்வரும் விடயங்களை அரசு கணக்கிலெடுத்து தனது அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூறுவது பொருத்தமெனக் கருதுகிறோம்.

1. வடகசு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசமென ஏற்றுக் கொள்ளல்.

2. வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனத்தவர்கள்; அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என ஏற்றுக் கொள்ளல்.

3. வடக்கு கிழக்கு முஸ்லீம் மக்கள் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட பிரதேசத்தில் சுயாட்சி அலகொன்றை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

4. இலங்கை அரசு ஒரு மதச்சார்பற்ற, இனச் சார்பற்ற அரசாக அறிவிக்கப்படல்.

தவிரவும், அரசால் முன்வைக்கப்படும் இந்த தீர்வு நடைமுறைக்கு போவதானால், தமிழ் அரசியல் கட்சிகளின் ஒப்புதல் மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அது ஒரு சிவில் வாழ்வு முறைக்கு வருவதற்கான நடைமுறை திட்டங்களையும் இத்தீர்வு உள்ளடக்கி இருக்க வேண்டும். அதிகாரப் பகிர்வுகள் அனைத்தும், தமிழ் மக்களை இந்த நாட்டின் சமத்துவமான சம உரிமை படைத்த இனமாக கருதும் விதத்தில் செய்யப்பட்டவையாக அமைய வேண்டும்.

இவ்வாறானதொரு நிலைமையை தோற்றுவிப்பதானால், தீர்வை அறிவித்தபின், திரும்பவும் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு அரசு தான் தயார் என்று போக வேண்டியிருக்கும்.

ஆனால், ஒரு புறத்தில் யுத்த முஸ்தீபுகளை தீவிரமாக மேற்கொண்டபடியே மறுபுறத்தில் அரசியல் தீர்வை முன்வைப்பதனால், யாருடைய நம்பிக்கையையும் பெற்றுவிட முடியாது. யார் (புலிகள்) எதிர்த்தாலும் பரவாயில்லை நாம் தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்பது ஒரு நல்ல முடிவு போலத் தென்பட்டாலும், அதை செய்வதானால், அரசு அமைத்தவுடன் செய்திருக்க வேண்டும். இப்போது காலம் கடந்துவிட்டது. யுத்தத்துக்காக தயார் செய்து கொண்டிருக்கையில் இது நடைமுறைச் சாத்தியமா என்பது கேள்விக்குறியே!

காலம் கனிந்துவந்து, முன்வைத்த முழக்கங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கையில் வரும்போது, அதைவிட்டு மெளனமாக நழுவி விடுவதுதான் தாராளவாத ஜனநாயகவாதிகளின் செயலாக இருந்துவந்துள்ளது. சாரத்தில் முதலாளிய ஜனநாயகமான இந்த தாராளவாத ஜனநாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இன்றைய அரசும், தனது கோரிக்கைகள் தோற்றுப் போவதற்காகவே வேலை செய்யப்போகிறதோ என்னவோ?

இன்னும் ஒரு சில நாட்களில் பதில் கிடைத்து விடும்.

**நாசமறுப்பான்**

வசந்தராஜா விவகாரம், வெறுமனே ஒரு தொடர்பு சாதனவியலாளரை எவ்வாறு அரசு தனது நோக்கங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தியது என்பதற்கான உதாரணம் மட்டுமல்ல, கொள்கைகளில் எவ்வாறு முன்னைய இனவாத அரசாங்கங்களுக்கு தான் சற்றும் குறைவில்லாதது என்று காட்டியுள்ளது என்பதற்குமான ஒரு உதாரணமுமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






1927ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி இலங்கை வந்த டொனமூர் குழுவினர் தங்களது விசாரணையை முடித்துக் கொண்டு 1928 பெப்ரவரி 4ம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டனர். இவர்கள் தங்களது முழு விசாரணை அறிக்கைகளையும் இங்கிலாந்திலேயே ஆராய்ந்ததன் பின்னர் 1928 யூன் 26ம் திகதியன்று இலங்கைக்கான குடியேற்ற நாட்டுச் செயலாளர் 'திரு.பி.ஏ.கிளற்றர் பாக்' இற்கு தங்களது அறிக்கையை அனுப்பி வைத்தனர். அன்றைய அரசாங்க காரியதரிசியான பேர்னார்ட் ஹென்றி போர்டில்லியன் என்பவரால் தேசாதிபதி 'சேர். கேர்பற்ஸ் ஸ்டேன்லி'க்கு விடுத்த சிபாரிசின் பேரில் 30வயது என்ற எல்லை, 21வயதுக்கு மேற்பட்ட எல்லா பிரஜைகளுக்கும் வாக்குரிமை என மாற்றிப் பின் அமுல்படுத்தப்பட்டது.

டொனமூர் அறிக்கையில் பெண்களின் வாக்குரிமை பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

**''பெண்கள் வாக்குரிமை பற்றிய கேள்வியை நாம் கருத்துடன் ஆராய்ந்துள்ளோம். அவர்கள் சார்பில் எடுத்துக் கூறப்படும் வழக்கமான வாதங்கள் ஆண் பெண் சமத்துவம் என்பவற்றை விட, இலங்கையில் குழந்தை இறப்பு, உயிர்விகிதம், வீடமைப்பில் சீர்திருத்தத் தேவை, குழந்தை நலம், மருத்துவம், கர்ப்பிணிகட்கான உதவி ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்பட வேண்டிய தேவை ஆகியன பற்றிக் குறிப்பிட்டிருந்தமை எம்மைக் கவர்ந்தன. இச் சிக்கல்கள் யாவற்றையும் தீர்ப்பதில் பெண்களின் ஆர்வமும், உதவியும் மிகுந்த பயனளிக்கும். மேலும் கீழைத்தேய நாடுகளில் அண்மையில் சில ஆண்டுகள் வரை பெண்கள் தங்கள் அரசியல் உரிமைகளைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கவில்லை. இருப்பினும் இந்நிலை இப்போது மாறிவருகிறது. இலங்கைப் பெண்களுள் பலவகையினரும் சேர்ந்த பெரும் குழு ஒன்று தங்களுக்கு வாக்குரிமை வேண்டும் என எம்மை வேண்டியது. வாக்கைப் பயன்படுத்துவதில் இந்தியப் பெண்களுக்குள்ள திறமை இலங்கைப் பெண்களுக்கும் உண்டு என்ற வாதத்தை மறுப்பது கடினமாயிற்று. இந்தியப் பெண்களுள் நியாயமான தொகையினர் ஏலவே வாக்குரிமை பெற்றுள்ளனர்''.**

(டொனமூர் யாப்பினை ஆய்ந்த சிறப்பாணைக்குழுவின் அறிக்கை - தமிழ் பதிப்பு - பக்கம் - 121,122)

1928 ஜனவரி 14ம் திகதி பெண்கள் வாக்குரிமைச் சங்கம் டொனமூர் ஆணைக்குழு முன்னர் சாட்சியமளித்தது. அவர்கள் காலை 11மணிக்கு வந்தனர். (சாட்சியம் இலக்கம் 141)

**டொனமூர்:**

நீங்கள் எங்களுக்கு டிசம்பர் 9ம் திகதியிட்டு அனுப்பிய கடிதம், அத்தோடு திகதியிடப்படாது அனுப்பிய கடிதங்களுக்கும் நாங்கள் வந்தனமளிக்கிறோம். 1919 இலிருந்த 1925 வரை செயற்பட்ட தேசிய காங்கிரஸ் தொடங்கியதிலிருந்து, சாட்சியத்தை ஆரம்பிப்பீர்கள் என நம்புகிறோம்.

**திருமதி.குணசேகர:**

எங்களுள் நன்ருக பேசக்கூடியவர்கள் வந்திருக்கிறார்கள். முதலில் நீங்கள் எங்களது குறைகளைக் கேட்டுக் கொள்ள இசைந்த பிறகு நாங்கள் எங்கள் மனமார்ந்த வணக்கத்தை தெரிவிக்கிறோம். இப்போது எமது வாக்குமூலத்தை வாசிக்கும்படி நான் திருமதி ஜியோ டி சில்வா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி.ஜியோ டி சில்வா:**

''எங்கள் சங்கமானது சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும். நாங்கள், முதலில் எங்களுக்குள் இதனைப்பற்றி பேச அவசியம் இல்லை என்று நினைத்திருந்தோம். ஏனெனில் உங்களுக்கு முன் வாக்குமூலம் அளிக்க நியமிக்கப்பட்ட ஆடவர் சிலர் எங்களுடைய நலன்களைப் பற்றி பேசுவார்கள் என்று நாங்கள் நம்பி இருந்தோம். இது விசயத்தில் நாங்கள் எதிர்பார்த்தது பொய்யாகவில்லை. ஆடவர் சிலர் எங்களுக்கான உரிமைக்கெதிராக பேசியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் சில ஆடவர் எங்களுக்கான வாக்குரிமை கொடுப்பதற்கு தயாராகவும் உள்ளனர். பெண்களுக்கான வாக்குரிமையைப்பற்றிக் கதைக்க யாரும் இல்லாததனாலேயே அந்த சிலர் எங்களுக்காக கதைக்க முன்வந்திருக்கிறார்கள். எனவேதான் நாங்களும் எங்களுக்காக வாக்குரிமை தொடர்பாக தொழிற்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் டிசம்பர் 7 ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தோம். அன்று தான் எங்கள் சங்கத்தை ஸ்தாபித்தோம். அனேகமான யோசனைகளை அன்று நாங்கள் தீர்மானித்தோம். அவை எங்கள் குறிப்புப் புத்தகத்தில் இருக்கின்றன.

பெண்களின் பிரச்சினை எல்லா நாடுகளிலும் இப்போது கவனத்திற்கு எடுக்கப்படுகிறது. பிரித்தானியா, கனடா, நியூசிலாந்து, ஆஸ்திரியா, அமெரிக்கா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, ஹங்கேரி, நோர்வே, சுவீடன், இந்தியா, பர்மா முதலியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

அமெரிக்கா, பிரித்தானியா, டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, ஒல்லாந்து, ரூமேனியா, சேர்பியா, போலந்து, பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் பெண்களுக்கு இதுவரை வாக்குரிமை வழங்கப்பட்டுவிட்டது.

'வாக்குரிமையானது ஐரோப்பிய பெண்களுக்கே பொருந்தும் கிழக்கே உள்ள பெண்களுக்கு பொருந்தாது' என எங்களுக்கு முன்னர் சாட்சியம் அளித்த சிலர் சொல்லியிருந்தார்கள். ஆனால் இந்தியாவிலும், பர்மாவிலும் எப்படி வழங்கப்பட்டது. இந்திய, பர்மிய சகோதரிகள் எல்லோரும் வாக்குரிமை பெற்றிருக்கின்ற போது எங்களுடைய வாக்குரிமையை தடுக்க முயற்சிப்பவர்களை நாங்கள் சந்தேகிக்கிறோம். ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் இந்தியாவில் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்திப் பெண்கள் சங்கத்தினரால் 1926 - 1927 இல் வெளியிடப்பட்ட அறிக்கையிலிருந்த அவர்களது கஷ்டங்கள் தெரியவருகிறது. இந்தியாவில் இந்தப் பெண்கள் சங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக ஆணுக்கு நிகராக பெண்களும் வாக்குரிமை பெற்றார்கள். சட்டசபைத் தேர்தலில் பெண்கள் ஆர்வத்தோடு ஈடுபடுகிறார்கள். தங்களுடைய வாக்குகளை ஒழுங்காகப் பிரயோகிக்கிறார்கள்.

## டொனமூர் கொமிஷன் முன்னால் பெண்கள்:

**''இந்திய பர்மிய சகோதரிகள் எல்லோரும் வாக்குரிமை பெற்றிருக்கின்ற போது எங்களுடைய வாக்குரிமையை தடுக்க முயற்சிப்பவர்களை நாங்கள் சந்தேகிக்கிறோம்''**

இப்போது இந்தியாவில் பெண்கள்; சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், வங்காளம், அஸ்ஸாம், பர்மா, பஞ்சாப், டில்லி, மத்திய மாகாணம் முதலிய இடங்களில் வாக்குரிமையை பெற்றிருக்கிறார்கள். பெண்கள் சட்டசபையில் அங்கத்தினர் ஆகலாம் என்று இந்திய அரசாங்கத்தில் சென்ற வருடம் ஏப்ரல் மாதம் தான் அனுமதிக்கப்பட்டது. இலங்கையில் பெண்கள், வாக்குரிமை பெறுவதற்கான நல்ல சூழ்நிலை இருக்கிறது. இலங்கையில் 'பெண்கள் கல்வி' இந்தியாவைவிட சிறந்திருக்கிறது. இந்தியாவில் 100க்கு 2 பெண்களே கல்விஅறிவு படைத்தவர்கள். ஆனால் 1921ம் ஆண்டு இலங்கையின் அறிக்கையில் இருந்து இலங்கைப் பெண்களின் கல்வி அறிவு 100க்கு 21 எனத் தெரியவருகிறது.

எனவே இந்தியாவிலிருக்கும் சகோதரிகளுக்கு நிகராக நாங்களும் வாக்குரிமை பெற தகுதிபடைத்தவர்களாவோம்.

கல்வி தொடர்பான அதிகாரி 1923ல் தெரிவித்த அறிக்கையில் இருந்து ஒரு வருடத்தில் 12,789 பெண்கள் என்கின்ற ரீதியில் அரசாங்க பள்ளிக்கூடங்களில் அனுமதி அதிகரிக்கப்படுவதாக தெரிகிறது. அரசாங்க உதவியின்றி நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் 1130 பெண்கள் ஒரு வருடத்தில் அதிகரிக்கப்படுகிறார்கள்.

நாங்கள் அரச நிர்வாகத் துறைகளில் ஆர்வமில்லாததாக சிலர் கூறியுள்ளனர். எங்களை அத்துறைகளில் அறிமுகம் செய்வது எவ்வாறெனில் எங்களுக்கு வாக்குரிமை கொடுப்பதனாலேயே. அப்படிச் செய்வதன் மூலமே அறிந்து கொள்ள களம் கிடைக்கிறது.

இப்போது சட்டத்தில் ஒருவன் சட்டசபை அங்கத்தினனாக வேண்டுமானால் தன்னிடமோ அல்லது மனைவி பேரிலோ 600/= ரூபா பெறுமதியான சொத்து இருக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது. தன் மனைவிக்கு சொத்திருந்தால் கூட ஆணுக்கு வாக்குரிமை கிடைக்கும். ஆனால் அப்பெண்ணின் சொத்து பெண்ணுக்கே வாக்குரிமை வழங்கப்படாமல் செய்கிறது. (சபையில் சிரிப்பு) இதை நாங்கள் அநியாயம் என நினைக்கிறோம். ஒருவர் தனது மனைவியின் பேரில் 1500/= பெறுமதியான சொத்து இருந்தால் வாக்காளனாகி விடலாம்.

இங்குள்ள பெரும்பாலான பத்திரிகைகள் வாக்குரிமையை ஆதரிக்கின்றன.

நாங்கள் 'டெயிலி நியூஸ், டைம்ஸ்' முதலான பத்திரிகைகள் கூறியிருப்பதை காண்பிக்கிறோம்.

எங்களுக்கு வாக்குரிமை கொடுப்பதற்கு இன்னொரு தடை என்னவென்றால்; நாங்கள் வாக்குரிமை பெற்று விட்டால் எங்கள் குழந்தைகளையும், வீடுகளையும் பற்றி நாங்கள் கவலை கொள்ள மாட்டோம் என்பது இன்று உலகில் பெண்களுக்கு 29 நாடுகளில் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இத்தேசங்களிலெல்லாம் மேற்படி நிலைமை பிரச்சினைக்குரிய ஒன்றாக இல்லையே.



டொனமூர் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த பெண்கள் வாக்குரிமைச் சங்க பெண்கள்

வாக்குரிமை பெற்றுவிட்டாள் என்பதற்காக ஒரு பெண் வீட்டைப்பற்றியும், குழந்தைகளைப் பற்றியும் நினைக்க மறந்து விடப்போவதில்லை.

வீட்டிற்கு வெளியில் நடக்கும் விடயங்களில் ஈடுபடுவதன் மூலம் பெண்களின் அறிவு விசாலமாகின்றது. அது அவர்களுக்கு நன்மையையே பயக்கும்.

இலங்கை பெனல் கோர்ட் 294வது பிரிவை மாற்றுவதற்கு நாங்களே பொறுப்பாளியாக இருந்தோம் என்பதை நாங்கள் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். சிறை இன்ஸ்பெக்டர், சப்ஜெனரல் அவர்களுக்கும், மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களுக்கும் இலங்கையிலுள்ள அதிகமான பெண்களால் கையொப்பமிடப்பட்ட இரண்டு மனுக்களை அனுப்பியிருந்தோம். அதனால் தான் அந்தச் சட்டப்பிரிவு மாற்றப்பட்டது. இதற்கு முன்பு 'கருச்சிதைவு' செய்பவர்களுக்கு மரணதண்டனையே வழங்கப்பட்டது.

நாங்கள்; கருச்சிதைவு செய்து கொண்ட மேலும் எட்டு பெண்களையும் விடுதலை செய்யுமாறும் மனுக் கொடுத்திருந்தோம்.

இது ஒரு முக்கிய விடயமாக இருந்ததால் அரசும் கவனத்திற்கெடுத்தது. இதில் குறிப்பாக ஒரு 16 வயது சிறுமி 'கருச்சிதைவு' செய்து கொண்டதற்காக மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு, பின் 20 வருடங்களுக்கு சிறைத்தண்டனையாக மாற்றப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டாள். நாங்கள் ஐந்து வருடங்களுக்குப்பின் அச்சிறுமியையும் இன்னும் மூன்று பெண்களையும் விடுதலை பெறுமாறு செய்தோம்.

இன்னும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். பெண்களுக்கான வாக்குரிமை பெறும் ஆர்வம் சமீபத்தில் கிளம்பியதல்ல. 1919இல் நடைபெற்ற காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது; ''சட்டசபையானது ஐம்பது அங்கத்தினர்களுடன் கூடியிருக்க வேண்டும். அதில் 5இல் 4பங்கு அங்கத்தினர்கள் எல்லைக்குத்தக்கபடி அதில் ஆண்களாலும் குறிக்கப்பட்ட பெண் வாக்காளர்களாலும் தெரிவு செய்யப்பட வேண்டும். அந்த சட்டசபையில் ஒரு உத்தியோகத்தர் மிகுதியாக இருக்க வேண்டும். இவர்கள் அனைவரும் சேர்ந்து சபைக்கு தலைவரை தெரிவு செய்ய வேண்டும்'' என்று கூறப்பட்டது.

இந்த தீர்மானத்தை பிரேரித்தவர் யார் என்பதை அறிய விரும்புகிறீர்களா? அது சேர். பொன்னம்பலம் இராமனாதனாலேயே பிரேரிக்கப்பட்டது. அவர் இதற்கு முன்னர் உங்களுக்கு முன்பு வந்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதைக் கண்டித்துப் பேசியிருந்தார். அதை சேர்.மத்தேயுகாதன், அவை மரியாதையற்ற வார்த்தைகள் என்றும் அவர் அப்படி பேசலாகாதென்றும் எதிர்த்துப் பேசியிருந்தார் (சிரிப்பு).

அவர் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டால் வீட்டில் சமாதானமும், சீர்திருத்தமும் பாதிக்குமென கூறினார். இந்திய, பர்மிய சகோதரிகள் தம்முடைய வாக்குகளை பாவிப்பதனால் வீட்டில் சமாதானமில்லாமலும், சீர்திருத்தமில்லாமலும் போய்விட்டது என அவர் அபிப்பிராயப்படுகிறாரா?

1919இல் பெண்களின் வாக்குரிமையை ஆதரித்தும், இரண்டு வாரங்களுக்கு முன் உங்கள் முன்னிலையில் வாக்குரிமை அளிக்கப்படக் கூடாது என்றும் கூறியதைப் பார்த்தால் 'பன்றியின் முன் நல்ல இரத்தினங்கள் சிதறி இருப்பதைப் போல்' இருக்கிறது. அவருடைய வாக்குமூலத்தின் பாதிப்பின் காரணமாகவே நாங்கள் எங்கள் நிலைமையை பலப்படுத்த ஆரம்பித்தோம். அதனாலேயே எங்கள் கூட்டமும் அதிகரித்தது. **நாங்கள் திருமணம் செய்யப்பட்டவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.**

1911ல் பெண்கள் கல்வி 100க்கு 12ஆக இருந்தது. பத்து வருடங்களுக்குப்பின் (இரட்டிப்பு) அது 100க்கு 21ஆக ஆகிவிட்டது. இதுவே கட்டாயக்கல்வி வந்திருப்பின் 100க்கு 75ஆக அதிகரிக்கப்படலாம். கொழும்பில் ஒரு பள்ளிக்கூடத்தில் 900 சிறுமிகள் படிக்கின்றனர். 10,000 சிறுமிகள் படிப்பில்லாமல் திரிகின்றனர். பள்ளிக்கூடங்களில் இலவசமாகப் படிக்கலாம். ஆனால் ஏழை ஜனங்கள் தம் குழந்தைகளுக்கு வாசிக்கப் புத்தகங்களையும் சாப்பாட்டையும் எவ்வாறு வாங்கிக் கொடுப்பர். பள்ளிக்கூடங்களில் சிறுமிகளுக்கு புத்தகங்கள் இலவசமாகவும், ஒரு வேளை சாப்பாடு இலவசமாகவும் கொடுக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு நல்ல தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு மேற்கு தேசங்களில் உள்ள சமையல் வேலைகள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

இன்று 100க்கு 65பெண்கள் வேலை செய்து வருகிறார்கள்.

வரும்

**என்.சரவணன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசியவாதத்தின் ஜனநாயக விரோதப் போக்கு!

ராம் மாணிக்கலிங்கம்

சென்ற இதழ் தொடர்ச்சி.

சுயாட்சிக்கான தேசியவாத நியாயம் என்பது ஒவ்வோர் இனத்திற்கும் தமது சாராம்சத்தை பேணிவளர்க்கவென சிறப்பான அரசியல் அலகு தேவை. ஒவ்வோர் இனத்திற்கும் தனியான அரசு வேண்டும் என்பது இவ்வாதத்தின் தீவிரமான வடிவமாகும். ஓர் தேசியவாதிக்கு அவ்வினத்தின் வரலாற்று ரீதியான கலாசார விழுமியங்களும், மொழி பண்பாடுகளுமே அரசியல் அலகின் அடிப்படையாகின்றன.

தீவிர தேசியவாத அணுகுமுறையைப் பொறுத்தவரை அத்தேசியவாதிகள் குறிப்பிடும் அரசியல் அலகுக்குள் பிற இனங்களின் அல்லது கலாசாரங்களின் இருப்பு என்பது ஓர் பாரிய அபாயமானதாகக் கொள்ளப்படுகின்றது. ஏனெனில் அரசியல் அலகுக்கு இனமே அடிப்படை என்றால், அதே அலகுக்குள் வாழும் ஏனைய இனங்கட்கும் இவ்வாதம் பொருந்தும். எனவே ஓர் தேசியவாதிக்கு அவர் குறிப்பிடும் அலகுக்குள் வாழும் ஏனைய இனத்தவர்கள் அவ்வரசியல் அலகின் இறையாண்மையைப் பலவீனப்படுத்தும் என்ற பயம் எப்போதும் இருக்கும். இதற்குத்தீர்வுகாண அவருக்கு இரண்டு வழிகளே உண்டு. 1. அல்வலகினுள் வாழும் ஏனைய தேசிய இனங்களைத் தமக்குள் உள்வாங்கிக்கொள்வது அல்லது அத்தேசிய இனங்களை அவ்வலகிலிருந்து விரட்டி வெளியேற்றுவது. சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தமிழ் மக்கள் தொடர்பான அணுகுமுறையும், தமிழ்த்தேசியவாதத்தின் முஸ்லீம் மக்கள் தொடர்பான அணுகுமுறையும் இவ்வடிப்படையிலானதே. தமிழ்த்தேசியவாதம் பற்றிச் சரிநிகரில் நடந்த விவாதத்தில் முஸ்லீம் மக்கள் தொடர்பான புலிகளின் நடவடிக்கைகளைப் பலர் கண்டித்துள்ளனர். இந்நடவடிக்கையைச் சிலர் தமிழ் இனவாதம் என்றும், வேறு சிலர் தமிழ் தேசியவாதத்தின் ஒரே ஒரு பிழையான பக்கம் என்றுமே பார்த்தனர். ஆனால் இது தமிழ்த்தேசியவாதத்தில் இலகுவில் மறந்துவிடக்கூடிய அல்லது சாதாரணமாக அலட்சியம் செய்துவிடக்கூடிய விடயமல்ல. இது தமிழ்த்தேசியவாத நியாயத்தின் அடிப்படையிலிருந்தே எழுகின்ற விளைவு என்பதனை நுஃமானைத் தவிர்த்த இவ்விவாதத்தில் கலந்துகொண்ட எவரும் காணத்தவறிவிட்டனர்.

ஆகவே சுயாட்சிக்கான தேசியவாத நியாயத்தை முன்வைக்கும் தேசியவாதிகள் அத்தேசியவாத நியாயத்தினுள்ளேயே அடங்கியிருக்கும் பிற இனங்களின் சமத்துவத்தை நிராகரிக்கும் போக்குக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

தேசியவாதிகள் தாம் கோரும் அரசியல் அலகுக்குள் பிற இனங்களின் சமத்துவத்தை ஏற்றுக்கொள்வதாயின் அவர்கள் ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்வதெனின் அவ்வரசியல் அலகினுள் வாழும் தனிநபர் சமத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் தேசியவாதம் தனிநபர் சமத்துவத்தை அங்கீகரிக்கும் விதம் ஜனநாயகம் தனிநபர் சமத்துவத்தை அங்கீகரிக்கும் விதத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தேசியவாதம் குறிப்பிடும் சமத்துவமானது தேசியவாத நியாயத்தை முன்வைக்கும் ஓர் தேசிய இனத்தின் உறுப்பினர்கள், அவர்கள் பல்வேறு அடிப்படையில் ஏற்றத்தாழ்வோ, வேறுபாடோ உடையவர்களாக இருந்தாலும், அத்தேசிய இனத்தின் அங்கம் என்ற அடிப்படையில் அவர்கள் சமமானவர்கள் எனக்கருதப்படுகின்றனர். இதிலிருந்து தேசியவாதமானது முறைமுகமாக அத்தேசிய இனத்தினுள் காணப்படும் எல்லாவகை ஏற்றத்தாழ்வுகளையும், பாகுபாடுகளையும் ஏற்றுக்கொள்கிறது என்பதைக்காணலாம்.

மேலும் தேசியவாதமானது இன்னோர் அடிப்படையிலும் தனிநபர் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நிராகரிக்கின்றது.

அதாவது தேசியவாத நியாயமானது ஓர் அரசியல் அலகுக்குள் வாழும் மக்களின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் பிரதான நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக தேசிய இனத்தின் சாராம்சத்தைப் பேணி வளர்ப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டது. ஆனால் எந்த ஓர் இனத்தின் அங்கத்தவர்கள் மத்தியிலும் கருத்து வேறுபாடுகட் தோன்றுவது இயல்பு. இவ்வேறுபாடுகள் அவ்வினத்தின் சாராம்சத்தைப் பாதுகாப்பது தொடர்பான அணுகுமுறையில் இருக்கலாம், அல்லது சமூக பொருளாதார விடயங்கள் சம்பந்தமானவையாயும் இருக்கலாம். எவ்வாறெனினும் இவ்வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு தேசியவாதத்தில் வழிகூறப்படவில்லை. அதனால் பலமுள்ள ஓர் சர்வாதிகாரி அல்லது ஓர் குழு தேசியவாத நியாயத்தைப் பயன்படுத்தி, தாம் மட்டுமே இத்தேசியவாதத்தின் சாராம்சத்தை உண்மையில் புரிந்துள்ளவர்கள் எனக்கோரிக்கொண்டு அவ்வடிப்படையில் தாமே உண்மையான பிரதிநிதிகள் என்று கூறி ஏனையோரின் உரிமைகளைப் பறித்தெடுக்கக்கூடிய சந்தர்ப்பம் தேசியவாத நியாயத்தில் காணப்படுகிறது. தேசியவாதத்தின் இந்த ஜனநாயக விரோதப் போக்கை சரிநிகர் விவாதத்தில் எவரும் தெளிவாகச் சுட்டிக்காட்டவில்லை.

> தேசியவாதமானது அடிப்படையில் ஓர் அரசியற் சமூகத்தின் அரசியல் அலகின் எல்லைகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதைக்கூறும் ஒரு கோட்பாடாகும். தேசியவாதியைப் பொறுத்தவரை அரசியல் அலகின் எல்லை அவ்வினத்தின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும். ஆனால் அவ்வரசியல் அலகினுள் வாழும் இனத்தின் அங்கத்தவர்கள் எவ்வாறு ஆளப்பட வேண்டும் என்பது பற்றிய எந்தவிதக்கருத்துக்களும் இக்கோட்பாட்டில் இல்லை. ஆகவே, ஓர் தேசியவாதி ஜனநாயகத்திற்காகவும் வாதாடலாம், சர்வாதிகாரத்திற்காகவும் வாதாடலாம்.

இனவாதத்தில் தமிழ்த் தேசியவாதத்தின் பிரதி கூலமான முகமென்று முஸ்லீம்களுக்கெதிரான நடவடிக்கை மட்டுமே சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் வடக்குக்கிழக்கில் முஸ்லீம் மக்கள் வாழவில்லை என நாம் எடுத்துக்கொண்டாலும் கூட தமிழ்த்தேசியவாதத்தில் வேறு பிரதிகூலமான பக்கமும் உண்டு.

ஏனைய தேசியவாதங்களைப் போலவே தமிழ்த்தேசியவாதமும் ஜனநாயகவிரோதப் போக்கை உட்கிடக்கையாக கொண்டுள்ளது. தேசியவாதம் உக்கிரமடையும் போது இவ்வுட்கிடக்கையான ஜனநாயகவிரோதப் போக்கு வெளிப்பட்டு, அவ்வினத்தின் ஏனைய கருத்துக்களையும் போக்குகளையும் அழிக்கலாம். இதுவே புலிகளின் தமிழ்த் தேசியவாத நடைமுறையாகும்.

தேசியவாதமானது அடிப்படையில் ஓர் அரசியற் சமூகத்தின் அரசியல் அலகின் எல்லைகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதைக்கூறும் ஒரு கோட்பாடாகும். தேசியவாதியைப் பொறுத்தவரை அரசியல் அலகின் எல்லை அவ்வினத்தின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும். ஆனால் அவ்வரசியல் அலகினுள் வாழும் இனத்தின் அங்கத்தவர்கள் எவ்வாறு ஆளப்பட வேண்டும் என்பது பற்றிய எந்தவிதக்கருத்துக்களும் இக்கோட்பாட்டில் இல்லை. ஆகவே, ஓர் தேசியவாதி ஜனநாயகத்திற்காகவும் வாதாடலாம், சர்வாதிகாரத்திற்காகவும் வாதாடலாம்.

இதுவரை இக்கட்டுரையில் சுயாட்சிக்கான இரு நியாயங்களான - தேசியவாத நியாயம், ஜனநாயக நியாயம் - இரண்டைப்பற்றியும் ஆராய்ந்தோம். ஒனறு அரசியல் அலகையும் மற்றையது அவ்வலகினுள் இருக்க வேண்டிய அரசியல் அமைப்பைப் பற்றியும் கூறுகிறது. இனி இவ்விரு நியாயங்களும் சுயநிர்ணய உரிமை என்ற கோரிக்கையில் வரலாற்று ரீதியாக எவ்வாறு சேர்த்துக்குழப்பப்பட்டுள்ளது என்பதை நோக்குவோம்.

### தேசிய சுயநிர்ணய உரிமை

''தாராணமைவாதத் தேசியவாதம்'' என்ற நூலில் ''யூலி தமிர்'' என்ற தத்துவஞானி (Liberal Nationalism by yoel Tamir) பிரான்சியப் புரட்சியில் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை முன்வைத்த பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் எவ்வாறு சுயாட்சிக்கான இவ்விரு நியாயங்களையும் சேர்த்துக் குழப்பியுள்ளனர் என்பதை விளக்குகிறார்.

16ம் லூயி மன்னனின் ஆடசிக்கெதிராகவே பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றது. இப்புரட்சியாளர்கள் மன்னராட்சியைக் கவிழ்த்து ஓர் ஜனநாயக ஆட்சிமுறையைக் கொண்டுவந்தனர். ஜனநாயக ஆட்சி என்பது மக்களாட்சியே. அதாவது 16ம் லூயின் ஆட்சியின் கீழ் வர்க்கத்துக்கேற்ற சலுகைளை அனுபவிக்கவும், கடமைகளை நிறைவேற்றவும் பணிக்கப்பட்ட பூர்ஷ்வாக்கள், பிரபுக்கள், தொழிலாளர் குடிமக்கள் அனைவரும், பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் சமவுரிமை அனுபவிக்கக்கூடிய பிரஜைகளாக மாற்றப்பட்டனர். பல வர்க்கங்களையும், பல கலாசாரங்களையும் கொண்ட இப்பிரஜைகளை இணைக்கும் ஒரே ஒரு அம்சம் அவர்கள் அனைவரும் கவிழ்க்கப்பட்ட 16ம் லூயின் ஆட்சியின் கீழ் வாழ்ந்த குடிமக்கள் என்பதே. பிரெஞ்சுப்புரட்சியின் கோசங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றில் ''சகோதரத்துவம்'' என்ற பதத்தின் அடிநாதமாக இருந்தது 16ம் லூயி இன் ஆட்சி. ஆனால் புரட்சியாளர்கள் தமது குடியரசின் பிரஜைகள் யார் என்ற கேள்விக்கு மேற்கண்ட பதிலைக்கொடுக்க மறுத்தனர். புரட்சிகர ஆட்சியினர் அந்நாட்டின் இறைமை 16ம் லூயி மன்னிடமிருந்தே தமக்கு வந்தது என்ற உண்மையைத்தவிர்க்க விரும்பினர். ஏனெனில் அது தமது நியாயாதிக்கத்திற்கு ஓர் அபாயமாகும் என்று கருதினர்.

அதாவது அவர்கள் எதிர்நோக்கிய முரண்பாடு என்னவெனில் அவர்களது ஆட்சிக்கான நியாயாதிக்கம் என்பது மக்களிடமிலிருந்து வருகிறது. ஆனால் அவர்கள் குறிப்பிட்ட மக்களின் ஊற்றுக்கண் மன்னராட்சியே. இம்முரண்பாட்டிலிருந்து வெளிவருவதற்கே பிரெஞ்சுத் தேசம் என்ற எண்ணக்கருவை நிர்மாணித்தனர். இதை அவர்கள் இவ்வாறு விளங்கினர்; ஜனநாயகம் என்பது மக்களாட்சி, மக்கள் என்பதே தேசம் எனவே ஜனநாயகம் என்பது. தேசத்தின் சுயாட்சி. இங்கு சுயாட்சிக்கான தேசியவாத நியாயமும், சுயாட்சிக்கான ஜனநாயக நியாயமும் சேர்த்துக்குழப்பப்படுவதை நாம் காணலாம். இருந்த போதும் இங்கு பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் ஜனநாயகத்தை நியாயப்படுத்த சுயாட்சிக்கான தேசியவாத தர்க்கத்தைப் பயன்படுத்தினர். ஆனால் தற்போதைய தேசியவாதிகள் தேசியவாதத்தை நியாயப்படுத்த சுயாட்சிக்கான ஜனநாயகத் தர்க்கத்தை முன்வைக்கின்றனர்.

இவ்விவாதத்தில் நுஃமான அவர்களின் கட்டுரையில் காலனித்துவத்தின் கீழ் இருந்த தேசியவாதத்திற்கும் காலனித்துவத்திற்குப் பின் எழுந்த தேசியவாதங்கட்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்ட முதல்வகைத் தேசியவாதத்திற்கு 'தேசியவாதம்' என்றும், இரண்டாவது வகைக்கு 'இனத்தேசியவாதம்' என்ற பதத்தையும் வழங்கினார். துரதிர்ஷ்ட வசமாக அதற்குப்பின் எழுதப்பட்ட கட்டுரைகள் நுஃமான் சுட்டிக்காட்டிய இவ் வேறுபாட்டை முழுமைப்படுத்தாமல் மறுத்தே உள்ளன. ஆனால் நுஃமான் சுட்டிக்காட்டிய இரு தேசியவாதங்களினதும் வேறுபாடுகளின் ஊற்றுக்கண் என்பது நாம் மேலே விவாதித்த சுயாட்சிக்கான தேசியவாத நியாயத்திற்கும், சுயாட்சிக்கான ஜனநாயக நியாயத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடேயாகும்.

பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த இந்தியாவை எடுத்துக்கொள்வோம். இந்தியாவிலும், இங்கிலாந்திலும் வாழ்ந்தவர்கள், பிரித்தானிய அரசனின் குடிமக்களே எனினும் இங்கிலாந்தில் வாழ்ந்த பிரித்தானிய குடிமக்களுக்கு இந்தியாவில் வாழ்ந்த குடிமக்களை விடக்கூடிய உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. ஜனநாயக ரீதியில் சம உரிமை வழங்கப்பட்டிருந்தால் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பிரதமராக ''காந்தியோ'', ''நேருவோ'' தெரிவு செய்யப்பட்டிருக்கலாம். ஏனெனில் அச்சாம்ராஜ்யத்தின் பெரும்பான்மை மக்கள் தொகை இந்தியாவிலேயே இருந்தது. பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் பெரிய பிரித்தானியாவை விட ஏனைய காலனித்துவ நாடுகளில் வாழ்ந்த குடிமக்களுக்கு ஜனநாயக சமத்துவம் வழங்கப்படவில்லை.

இந்திய சுதந்திரப்போராட்டத்தின் இரு அடிப்படைகளான தேசியவாதம், ஜனநாயகம் என்ற நியாயங்களில் ஜனநாயக நியாயமே அழுத்தம் பெற்றதாக இருக்கிறது. சுதந்திரத்துக்குப் பின்னைய இந்தியாவில் சீக்கியர் போராட்டத்தை எடுத்துக்கொண்டால் இங்கு சுயாட்சிக்கான தேசியவாத நியாயமே அழுத்தம் பெற்றும் ஜனநாயக நியாயம் பின் தள்ளப்பட்டும் இருப்பதைக் காணலாம். அதாவது பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ''நாம் அனைவரும் இந்தியர்'' என்ற அடிப்படையிலும் நமக்கு ஜனநாயக சமத்துவம் தேவை என்ற அடிப்படையிலுமே போராடினர். ஆனால் சுதந்திர இந்தியாவில் சீக்கியர் போராட்டமானது நாம் சீக்கியர் என்பதினாலேயே சுதந்திரம் வேண்டும் என்ற போராட்டத்திற்கு வந்துள்ளனர். இங்கு இந்தியாவின் ஜனநாயகம் சரியானதா, குறைபாடுடையதா என்பதைப் பார்ப்பதோ சீக்கியர் போராட்டம் சரியா பிழையா என்று பார்ப்பதோ முக்கியமல்ல. முக்கியம் எதுவெனில் காலனித்துவத்தின் கீழ் நடைபெற்ற போராட்டம் ஜனநாயகத்திற்கு அழுத்தம் கொடுப்பதையும் சுதந்திரத்திற்குப் பின்னான இனத் தேசியவாதங்களில் ஜனநாயக நியாயம் பின் தள்ளப்பட்டு தேசியவாத நியாயமே மேலோங்கி நிற்பதையும் அவதானிக்க வேண்டும்.

நுஃமான் அவர்கள் கூறிய முற்போக்கான தேசியவாதத்திற்கும் பிற்போக்கான தேசியவாதத்திற்கு மிடையில் நாம் பார்த்த வித்தியாசம் முன்னையது ஜனநாயகத்தை முக்கியப்படுத்துவதையும், பின்னையது அதனை நிராகரித்துவரும் போக்குமேயாகும். இது இன்று நிலவிவரும் இனத்தேசியவாதங்களில் நல்ல தேசியவாதம், கூடாத தேசியவாதம் என்பவற்றை வேறுபடுத்த ஜனநாயகவாதம் என்ற அளவுகோல் உபயோகிக்கப்படலாம் என்பதை அறிவுறுத்துகிறது. இது எந்தளவிற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதை அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.

அடுத்த இதழில் முடியும்'

## ஒட்டுதலின்மை


நான் சென்றும் கொண்டும்
உறங்கிக் கொண்டும்
இருக்கும் பொழுது
மைம்மல் அப்பிய
நேரங்களிலும்
புகார் மேகங்கள்
கரையும் பொழுதிலும்
என்னை தேடிக்கொண்டு
இருப்பேன்
அன்று போலவோ
நாளை போலவோ
சூரியன்
இன்று விடிந்துகொள்ளும்
என்றோ அல்லது
அது பற்றியோ
நான் எண்ணுவதில்லை
மீன் வாங்கப் போவதும்
அறுந்த செருப்பை
தைக்க போவது பற்றியும்,
அல்லது
பஸ்ஸில் எனக்கு
சீட் கிடைக்குமா
என்பது பற்றியும்
அதிகமாக சிந்தித்து
கொண்டு;
மெலிந்தும்
உருக்குலைந்தும்
இருப்பேன்.

அ.றஜீவன்

www.tamilarangam.net



கடந்த ஏப்பிரல் 19ம் திகதிய தாக்குதலுடன் மீண்டும் ஆரம்பமாகிவிட்ட யுத்தம் தொடர்பாக பலவிதமான உணர்வலைகள் தெற்கில் எழுந்துள்ளன. யுத்த தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறியவர்கள் என்ற குற்றச்சாட்டு புலிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. 'புலிகள் ஒரு போதுமே சமாதானத்துக்கு வரமாட்டார்கள்' என்பதை இத்தாக்குதல் தொடக்கம் நிரூபித்துவிட்டதாகவும் பேசப்படுகிறது.



யுத்தம் ஆரம்பமானவுடன் ஆக்கிரோஷமான தாக்குதலை அரசு தொடங்கிய போதும் புலிகளின் 'அவ்ரோ' விமானங்கள் மீதான ஏவுகணைத் தாக்குதல்கள் இந்த ஆக்கிரோசத்தை தணித்துள்ளன. ஆயினும் இத்தாக்குதல் நடவடிக்கையின் பின், நிராயுதபாணிகளான மக்கள் மீது குண்டுகளையும் ஷெல்களையும் வீசி மனிதப் படுகொலைகளை ஆயுதப்படைகள் செய்து கொண்டிருந்த போதும் சரி, அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற பயங்கரவாத அரசுகளுடன் நட்புக்கொண்டாடி ஆயுதங்களும் பயிற்சிளும் பெற்றுக் கொண்ட போதும்சரி, 'ஏகாதிபத்தியச்சதி' குறித்து மௌனம் சாதித்த பலர் புலிகளின் கையில் ஏவுகணைகள் இருப்பதாக அறிந்ததும் அதனை ஏகாதிபத்திய சதி என்றும் பிராந்திய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் என்று கூறத் தொடங்கியுள்ளனர்.

இந்த வரிசையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 'இடதுசாரி' கட்சிகளும் சேர்ந்துள்ளன.

ரூபவாஹினி தலைவர் வசந்த ராஜா ஒரு தமிழர் என்பதற்காக (அவருக்கு தமிழே தெரியாது என்பது வேறு விடயம்) புலி எனக்குற்றம் சாட்ட கம்யூனிஸ்ட் கட்சி கூடத்தயங்கவில்லை என்றால், வாசு அரசாங்கத்தை நியாயப்படுத்தி ஏகாதிபத்திய சதி பற்றிப் பேசுகின்றார்.

வாசு அவர்கள் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் இங்கு அப்படியே பிரசுரமாகிறது. இதனை தென்னிலங்கையின் பாரம்பரிய இடதுசாரிகளின் போலித்தனத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து முறித்துக்கொண்டது சரியா தவறா என்பதைவிட, புலிகள் அவ்வாறு முறித்துக் கொள்ள வேண்டுமென்ற உள்நோக்குடனேயே அரசு இயங்கியது என்ற உண்மை முக்கியமானது. இது, அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதாலோ என்னவோ நமது மதிப்புக்குரிய வாசு அவர்களுக்குப் புரியாமல் போனது து திர்ஷ்டமே!

ஆ-ர்

# புலிகளுக்கோர் பகிரங்கக் கடிதம்!

வாசுதேவ நாணயக்கார
103 C, கப்பற்றிப் பொல மாவத்தை,
கொழும்பு -05
மே , 3, 1995.

**திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கட்கு,**
**த்லைவர்: தமிழீழ விடுதலைப் புலிகள்**

*1.* நீங்களும் உங்களது இயக்கமும் ஈழ அரசொன்றை உருவாக்குவதற்காக இலங்கை ஆயுதப்படைகளுடன் நீண்டதும் கடினமானதுமான ஒரு யுத்தத்தில் ஈடுபட்டு வருகிறீர்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரத்தில் கீழ் தமிழ் மக்கள் சுதந்திரத்தை வென்றெடுப்பதனை நோக்கமாகக் கொண்டு நீங்கள் இயங்கிவருவதாகக் கூறி வருகிறீர்கள்.

*2.* யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வந்து இந்த நாட்டில் சமாதானத்தை கொண்டு வரவும், இரு இனங்களுக்கு மிடையில் ஐக்கியத்தையும் சமத்துவத்தையும் உருவாக்கவும் என பொ.ஜ.மு. அரசாங்கத்திற்கு மக்கள் வாக்களித்துள்ளனர். இது முன்னெப்போதும் இல்லாதவாறான ஒரு மிகப்பெரிய முன்னோக்கிய நடவடிக்கை என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நினைக்கிறேன். சிங்களத்தலைவர்கள் எப்போதும் தமிழ் எதிர்ப்பாளர்களாகவும், இனவாதிகளாகவும், சிங்கள மேலாதிக்கத்தை தொடர்பவர்களாகவும் இருப்பார்கள் என்ற உங்கள் உறுதியான கருத்தின் காரணமாக இந்நடவடிக்கைகள் உங்களுக்கு சில சிக்கல்களை தந்திருக்கும் என நான் நினைக்கிறேன்.

*3.* அரசதரப்பில் பலவிதமான குறைகள் இருந்த போதும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து பேச்சுவார்த்தையை சுமுகமாக நடாத்துவதற்கான ஒரு நிலைமையை தோற்றுவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் உண்மைத்தன்மையை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.



யாழ்ப்பாணத்துக்கு நாம் வந்திருந்த போது, உங்களது பிரதிநிதிகளை சந்தித்து பேசிய சந்தர்ப்பத்தில் யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் தொடர்வது, அது ஒரு நிரந்தர யுத்த நிறுத்தமாக மாற்றப்படுவதும் அவசியமானது என்பவை தொடர்பாக ஏக மனதான முடிவு எடுக்கப்பட்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள். சமாதான முயற்சிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் எத்தகைய நிபந்தனைகளையும் முன்வைக்க வேண்டாமென்றும், பேச்சுவார்த்தைக்கு எத்தகைய முன்நிபந்தனைகளையும் போட வேண்டாம் என்றும் நாம் உங்களை கேட்டிருந்தோம். இது தொடர்பாக எம்மிடையே எத்தகைய மாறுபாடான கருத்துக்களும் அப்போது ஏற்பட்டிருக்கவில்லை. தாக்குதலை முதலில் தொடங்கும் செயலை ஒரு போதும் செய்ய வேண்டாம் என்றும் நாங்கள் உங்களிடம் கேட்டிருந்தோம். ஆனால் எமது எதிர்பார்ப்புகட்கு நேர் விரோதமாக உங்கள் ஸ்தாபனம் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. எமது நாட்டில் தமிழ் மக்களின் சுதந்திரத்தை உள்ளடக்கிய சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் கொண்டு வருவதில் ஆர்வம் கொண்ட எங்கள் ஒவ்வொருவருக்கும் அதிர்ச்சியையும், கவலையையும் இது ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக உங்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு நீங்கள் பதிலளித்து ஆகவேண்டும்.

5. ஏதாவது தத்துவார்த்த அல்லது செயல்திட்ட காரணங்களுக்காக நீங்கள் இந்த சமாதான முயற்சிகளை உடைத்தீர்களோ என்னவோ எங்களுக்கு தெரியாது. எனவே, இந்த ஒப்பந்த மீறலுக்காக உங்களால் வழங்கப்பட்ட காரணங்களை அரசியல் ரீதியாக போதுமான காரணங்களாக எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். பூநகரி விவகாரத்தை ஒரு நிபந்தனையாக அல்லாமல் ஒரு வேண்டுகோளாக நீங்கள் வைத்துள்ளதாகவே யாழ்ப்பாணத்தில் எங்களுக்கு கூறப்பட்டது. ஆனாலும், இந்த விடயத்தில் கூட, ஒரு உடன்பாடு காணப்பட்டிருந்ததாக நான் இப்போது அறிகிறேன். மேலும், கோட்பாட்டளவில், எரிபொருட்களை வழங்கவும், மீன்பிடித்தடையை நீக்கவும் அரசு உடன்பட்டிருந்தது. ஆனாலும் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் சில தாமதங்களும், குறைபாடுகளும் இருந்தன என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் யுத்த தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறி யுத்தத்தை தொடங்கியதை, உங்கள் முடிவை, எப்படி உங்களால் நியாயப்படுத்த முடியும்?

*6.* யுத்தம் உடல் உள ரீதியில் பெருமளவு பாதிப்பையும் அழிவையும் தான் பெருமளவிலான மக்களுக்கு தரும் என்பதை நீங்கள் ஒப்பக்கொள்வீர்கள் என்று நம்புகிறோம். அதேவேளை, முடிவேயில்லாத நீண்ட காலம் எடுக்கின்ற சமாதான பேச்சுவார்த்தைகளை நடாத்த மிகவும் அதிகளவிலான அமைதியையும், துணிவையும் கொண்ட மனோபலம் அவசியம் என்பதையும் இது ஒரு யுத்தத்தை நடாத்துவதை விடவும் கடினமானதும் சவால் மிக்கதுமாகும் என்பதையும் நாம் அறிவோம். இந்த முயற்சி ஒரு தலைவர் என்ற முறையில் மட்டுமீறிய சுயநம்பிக்கையையும் மக்கள் மீதான நம்பிக்கையையும் கோரி நிற்கின்றது. இது தொடர்பாக நீங்கள் எம்முடன் ஒத்துப்போவீர்களோ தெரியவில்லை. பிரச்சினையை தீர்ப்பதற்கான எல்லா வழிகளும் சாத்தியமற்றும் போய்விடவில்லை என்பது மட்டுமல்ல, ஒரு அரசியல் தீர்வுக்கு சிங்கள பெரும்பான்மை ஆதரவாகவும் இருக்கிறது.

*7.* நாம் யாழ்ப்பாணம் வந்தபோது, அங்குள்ள மக்கள் பிரச்சினைகளை தீர்த்து, தமிழ் மக்களது உரிமைகளை பேச்சுவார்த்தை மூலம் வென்றெடுப்பதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் காட்டியிருந்தார்கள். எனது காதுகளில் அவர்களது குரல்கள் இன்னமும் ஒலிக்கின்றன. தங்களது உயிர்கள் குண்டுகளுக்கும் ஷெல்களுக்கும் இனிமேலும் பலியாகிப் போய்விட மாட்டாவோ என்று அறிவதற்கான ஆவலுடன், கண்களில் நம்பிக்கை சுடர்விட அவர்கள் எம்மை எதிர்கொண்டது எனது இதயத்தில் இன்னமும் ஒளிர்கிறது. இப்படியிருக்கையில் நீங்கள் யுத்தத்துக்கு போவதென தவறாக முடிவெடுத்ததையும், அதற்கு பதிலாக அரசு தானும் யுத்தத்தில் இறங்கியுள்ளதும், எதிர்ப்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் எமது கரங்களைப் பற்றி பேசிய அம்மக்களுக்கு என்ன சொல்வது என்று அறியாமல் அவர்களைப் பாதுகாப்பது எப்படி என்று தெரியாழல் எமது இதயங்கள் தவிக்கின்றன.

*8.* யுத்தம் தொடங்கியபின் யுத்தத்தை நிறுத்துமாறு கோரியும் உங்களது நடவடிக்கைகளை கண்டித்தும் நாம் இருதடவை ஆர்ப்பாட்டம் செய்தோம். அவ்வரறே அரசையும் எதிர்ப்பு யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்று கோரினோம். வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வை முன்வைப்பதில் காலத்தைக் கடத்தும் அரசாங்கத்தையும் நாம் விமர்சித்தோம். விமானத் தாக்குதல் மற்றும் ஷெல்லடிகளால் அங்குள்ள அப்பாவி மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்றும் நாம் கோரினோம். இதற்கு ஆதரவாக சிங்கள பெரும்பான்மையினரை வென்றெடுப்பதற்கு நாம் முயன்று வருகிறோம். ஒப்பந்தத்தை மீறியமைக்காக உங்களது மக்களிடமிருந்து ஒரு ஆர்வமிக்க ஆதரவை நீங்கள் பெற்றுக்கொள்வது உங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும் என்றே நாம் நம்புகிறோம். இந்த நாட்டின் சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் அனைவரும் ஒருமித்த குரலில் 'யுத்தத்தை நிறுத்து, பேச்சவார்த்தையை தொடங்கு' என்று கூறுவார்கள் என்றே நாம் நம்புகிறோம். எனவே உங்களது ஸ்தாபனமோ அல்லது அரசாங்கமோ இதை எதிர்க்க முடியாது. இது எமது உறுதியான நம்பிக்கை.

உங்களது ஒப்பந்த மீறலை அடுத்து, யுத்தவாதிகளும், சிங்கள இனவாதிகளும், இராணுவவாதிகளும் தமது அசிங்கமான முகங்களை உயர்த்தி அரசியலிலும், அரசாங்கத்திலும் ஆதிக்கம் செலுத்த முயல்வார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே. இதை நீங்கள் அறிவீர்களோ அல்லது ஒருவேளை உங்கள் யுத்த தந்திரங்களுக்கு இது அவசியமான ஒன்று என்று கருதுகிறீர்களோ நான் அறியேன். இப்போது அடங்கியுள்ள சிங்கள பேரினவாதம் திரும்பவும் உங்கள் நடவடிக்கைகளால் மீளப்பற்றிக் கொள்ளும் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறான அழிவு முயற்சிகள் இலகுவில் எழுந்துவிடக்கூடியவை . அத்துடன், இவ்வாறு செய்ததன் மூலம் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களது விருப்பத்தை - சமாதான மற்றும் தேசிய ஐக்கியம் மீதான விருப்பத்தை - உதாசீனம் செய்துவிட்டீர்கள். தமிழ் மக்களது சமத்துவத்தையும், உரிமைகளையும், தேசிய ஒருமைப்பாட்டையும் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு நீங்கள் அவர்களிடமிருந்து அந்நியமாகி செல்லவேண்டியிருக்கும். நாட்டின் (சமாதானத்துக்கு ஆர்வமான) இந்த நிலையை மேலும் பலப்படுத்துவது எமது கடமை என்று நம்புகிறோம். உங்களது முடிவால் நாம் சிங்கள இனவாதிகளதும், யுத்த விரும்பிகளதும் நெருக்குதலுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. ஆயினும் சிங்கள பெரும்பான்மை மக்கள் சரியான உறுதியான தமிழ் மக்களது எதிர்பார்ப்புக்களான அமைதி, சுதந்திரம் என்பவை தொடர்பான உறுதியான முடிவை எடுப்பதற்காக எமது உயிரையும் துச்சமாக மதித்து தொடர்ந்து இயங்குவோம்.


*10.* இறுதியாக, ஏகாதிபத்தியங்களாலும், தேசிய ஒடுக்கமுறையாளர்களாலும் வைக்கப்பட்ட பொறிக்குள் நீங்கள் கால்வைத்துள்ளீர்கள் என்பதை மிகுந்த கவனத்துடன் உங்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். இதன் பின் விளைவுகள் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, தென்னாசியப்பிராந்தியத்தினது ஒருமைப்பாட்டிற்கும், சுதந்திரத்திற்குமே அச்சுறுத்தலாக அமையும் என்று நாம் நினைக்கிறோம். எனவே, இது தொடர்பாக தீவிரமாக சிந்தித்து உங்களது முடிவை மாற்றுமாறும், பேச்சுவார்த்தையை உறுதியாக மீளத்தொடருவதற்கான நிலைமைகளை உருவாக்குமாறும் கோருகின்றோம். அல்லாவிடின் நீங்கள் சாதாரண சிங்கள மக்களை ஏகாதிபத்திய சக்திகளின் கரங்களை நோக்கி தள்ளுபவராக ஆகுவீர்கள்!.

தேசிய விடுதலைக்கான உங்களது நடவடிக்கையானது, இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு வழிதிறந்துவிட முயல்வது மிகவும் முரண்நகைமிக்கதாகும்.

வரலாறு உங்களை மறக்கக்கூடாதா, மன்னிக்கக்கூடாதா என்பது உங்களது முடிவில்தான் தங்கியுள்ளது.

**உண்மையுள்ள**
**வாசுதேவ நாணயக்கார.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சமாதான பேச்சுவார்த்தை முறிவு தொடர்பாக விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்கள் பலர் விமர்சித்தார்கள். எனினும் நீங்கள் நீதியாக நடந்து கொண்டதாக அவர்கள் ஒரு போதும் கருதவில்லை. எனினும் நீங்களும் தமிழருக்கு சமாதானம் என்பது மேலதிக அரசியும் பருப்பும் பெறுகிற விடயமல்ல. இதற்காகவல்ல அவர்கள் ஐம்பது வருடங்களாக சரணாகதியடையாமல் போராடிவருவது. உங்கள் முன்னவர்களோ பட்டினி போட்டால் தமிழர்கள் அரசிக்கும் பருப்புக்குமாக சரணடைவார்கள் எனக்கருதினார்கள். நீங்கள் அவர்களிடமிருந்து எவ்வகையில் வேறுபட்டீர்கள் என்பதை, பிரேமதாசா புலிகள் பேச்சுவார்த்தைச் சூழலைவிட தங்களது அரசும் புலிகளும் பேசிய சூழல் எவ்வகையில் சமாதானத்துக்கு உகந்த சூழலாக இருந்தது என்பதை விளங்கப்படுத்துவீர்களா?

இருந்தும் விடுதலைப் புலிகள் இன்னமும் சற்றுக்காலம் பொறுமையுடன் இருந்திருக்கலாம் என்பதாக தமிழர்கள் பலரது விமர்சனம் இருந்தது. போர் நிறுத்தம் முடிந்து 72 மணிநேர கால அவகாசம் கொடுக்காமல் தாக்குதலை ஆரம்பித்தது தொடர்பாக விடுதலைப் புலிகளை பலரும் கண்டித்தார்கள்.

மேல்வர்க்க சிங்கள பௌத்த பேரினவாதிகளின் தலைவர்களான உங்கள் தந்தையார், உங்கள் தாயார், ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாசா போன்றவர்களது பாதையிலேயே இழுபட்டு போகிறீர்கள் என்பதை அந்த நூறுநாட்களுக்குள் அவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள்.

அரச பயங்கரவாதத்துக்குப் பணியாமல் ஐம்பது வருடங்களுக்கு மேலாக போராடிவருகிற மக்களை வெறும் அலங்கார வார்த்தைகளால் சரணாகதி அடைய வைத்திட முடியாது. நீங்கள் இந்தியா ருடே பேட்டியில் 'தமிழர்கள் உங்களை அம்மனாக உருவகித்துத்தொழுதார்கள்' என்று கூறி தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஆதரித்து வருகின்றனவே, ஏன் இதுவரை மேற்படி அரசுகள் இவர்களோடு பேசி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை அமுலாக்கவில்லை என்று கேட்கிறார்கள். ஏன் மேற்படி இயக்கங்களுக்கும் அரசுக்குமிடையில் 5 வருடங்களாகவே சுமுகமான உறவு உள்ளபோதும் இன்னமும் பொருளாதாரத்தடை நீடிக்கிறது என்று கேட்கிறார்கள். ஏன் விடுதலைப் புலிகளுக்களோடு பேசப்படுகிற போது மட்டும் தான் அரசினால் பொருளாதார தடைநீக்கப்படுகிறது. கொழும்பிலும் தென்னிலங்கையிலும் இலங்கைத் தமிழ் இளைஞர்களை பெண்களை கைது செய்வதும் அவமானப்படுத்துவதும், அடிமைகள் விடுதலை போல பணயக்காசுக்கு பேர பேசுவதும் நிறுத்தப்படுகிறது என்று கேட்கிறார்கள். உங்கள் நடத்தையில் இருந்தே தமிழர்களில் பெரும்பாலானோர் தங்களது அரசியலை தீர்மானிக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?

சமாதான முயற்சிகள் நூறு நாட்கள் கூட நீடிக்கவில்லை. வசந்தம் வந்து குயில்கள் பாட்டுக்கு கொன்றை மரங்கள் மஞ்சள் தோரணம் கட்டி தென்றல் காற்றோடு ஆடிய போது மீண்டும் தமிழ் ஏழைச்சிங்கள மக்களது கனவுகள் மீது போர் திணிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அவசரமும் உங்களது பொறுப்பின்மையுமே இன்று இடம்பெறுகிற இந்த யுத்தத்தின் காரணமாகும். வார்த்தைகளால் மட்டும் ஒருவர் சமாதான தேவதையாகிவிட முடியாது. உங்கள் நாவிலிருந்து வெண்புறாக்கள் பறந்தன. உங்கள் செயலில் அவற்றை கண்டு கொள்ள முடியவில்லை. வரலாற்றில் தமிழர்களால் மிகவும் வெறுக்கப்படுகின்ற இரண்டு சிங்கள பௌத்த பேரினவாதிகள் என உங்கள் தந்தையாரையும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவையும் குறிப்பிடுவேன். 1950களில் எதிரும் புதிருமாக போராடிய இருவரும் பந்தகாக உழைத்து உரமாகிப் போன மக்களை..

1950களில் தங்கள் தந்தையாருடன் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் வேசம் போட்டு இனவாத அரசியல் நாடகத்தைத் தொடர்ந்தார். அதே பழைய கதை ஏழைச் சிங்களவரையும் ஏழைச் சிங்களப் பாதுகாப்பு படையினரையும் தமிழர்களையும் மோதவிடுகிறகதை. அப்போது தமிழர்கள் காந்திய வழியில் தங்கள் தந்தையாரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் தலைமை தாங்கிய மேல் வர்க்க சிங்கள பௌத்தர்களின் பேரினவாத மிலேச்சத்தனத்தை எதிர்த்துப் போராடினார்கள். 1915இல் தமது முன்னோர் தென்னிலங்கை முஸ்லீம்களை அடித்து அடித்துப் பணிய வைத்தது போல தமிழ் மக்களையும் அடித்துப் பணியவைத்து விட முடியுமென நம்பினார்கள். 1956ல் காட்டுமிராண்டித்தனமான சிங்களம் மட்டும் சட்டம் அமுலாக்கப்பட்ட போது காலிமுகத்திடலில் காந்திய அடிப்படையில் திரு. செல்வநாயகம்,, வன்னியசிங்கம் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்தவர்களை உங்கள் தந்தையரின் ஆட்கள் அடித்து நொருக்கினார்கள். தந்தையாரின் அரசு இதைத்தடுக்கவில்லை. உங்கள் தந்தையார் ஒரு காட்டுமிராண்டியைப் போல இரத்தம் காயம் பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பார்த்து 'வீரர்களின் விழுப்புண்' என்று ஜோக்கடித்தார். இதுதான் உங்கள் தந்தையார்.

1958ம் ஆண்டு கலவரத்துக்கு உங்கள் தந்தையாரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுமே பொறுப்பு. தமிழர்கள் கொன்று எரியூட்டப்பட்டு கொண்டிருந்த வேளைகளில் பிடில் வாசித்துக் கொண்டிருந்தவர் உங்கள் தந்தையார். ஏழைச்சிங்கள மக்களை தூண்டிவிட்டு கலவுரத்தை பரவவைபபதறகாக பொய் பேசியது அவரது அரசின் வானொலி. கலவரத்தின் நடுவில் "Let them taste " என்று

சிங்கள அரச படைகளதும் தலைகளில் சதுரங்கம் ஆடுகிற விளையாட்டே இந்த நாட்டில் தொடர்ந்து வருகிறது.

பிரேமதாசா கடும் மனோதத்துவ மருத்துவம் தேவைப்பட்ட இன்னொரு நபர் என இந்தியா ருடே பத்திரிகையில் குறிப்பிட்டீர்கள். பிரேமதாசா மனநோயாளர் என்றால் அவருக்கு வழிகாட்டியவர்களை எப்படிச் சொல்வது?

நான் எனது கடிதத்தை முடிக்க முன் உங்களிடம் கோருவது இதுதான்; தமிழர்களையும் ஏழைச் சிங்களவர்களையும், படைவீரர்களையும் மோதவிடுகிற இந்த சேவல் போரை உடனடியாக நிறுத்துங்கள். இலங்கையின் எல்லாட்! பயங்கரவாதத்துக்கும் தாயான அரசு பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்துங்கள். சமாதானத்துக்கு ஆதரவாக 62.5% மான மக்கள் வாக்களித்த பின்னும் வடகிழக்கு இணைப்பு அடிப்படையிலான தீர்வுக்கு ஆதரவாக 53%மான மக்கள் (Research International அபிப்பிராய வாக்கெடுப்பு) கிழக்குமாகாண முஸ்லீம்களின் முன்னணித் தலைமையான முஸ்லீம் காங்கிரஸ் சமஷ்டியை ஆதரித்த பின்னும், சமஷ்டி அமைப்பை பரிசீலிக்கத் தயார் என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒப்புக்கொண்ட பின்னும் நீங்கள் வட கிழக்கு மாகாண இணைப்புப் பற்றிப் பேசவில்லை. இது ஜே.ஆரும் பிரேமதாசாவும், இந்திய இலங்கை ஒப்பந்தமும் எடுத்த நிலைப்பாட்டை விட பிற்போக்கான நிலைப்பாடாகும். நீங்கள் பேசுகிற பேரினவாத அடிப்படையிலான வடகிழக்கு மாகாண எல்லை மாற்ற தீர்மானத்திற்கு 16.7% வாக்குகளே அபிப்பிராய வாக்கெடுப்பில் கிடைத்தது உண்மையில் சமாதானத்திற்கு எதிராக இருக்கின்ற பெரும் தடைக்கற்களில் முக்கியமான ஒன்று உங்களது இந்த அணுகுமுறை

# ஜனாதிபதிக்கு ஓர் பகிரங்கக் கடிதம்!

ஜனாதிபதி

கு மு... ார்வே
லோவில் சிறிதுநே
சிய ஒரு தமிழ்க்க
ிருக்கக் கூடும்.
ததும், முஸ்லீம்கள
ைகள் உறுதிப்படுத்
கிழக்கு மாகாண
றக்கணிக்கப்பட்ட
ாமவாசிகளுக்கும்,
ளுக்கும் சமூக நீதி
ரமான சமாதானத்
ப விலையாகும்
ாய்ப்புக்களையும்
ள்ளைகள் அனுப
ற்காக தமிழ்ப்பிள்
ாப் பிள்ளைகளும்
ுக் கொல்ல வேண்
ர்வை வைப்பதை
யைப் பிரகடனப்ப
னுப்பி தமிழ் பிள்
னிலங்கைச் சிங்க
ழ சிங்கள படைவீ
இந்த நாட்டை
வர்க்க சிங்களவ
ருந்தது.
களப் பிள்ளைகள்
க்காவிலும் படிப்ப
ழைச் சிங்களவர
ாம் மாறமுன்னமே
க ஓட வேண்டியி
ாக வேண்டியிருந்
கஞ்சா வளர்க்க
வின் சீகல கனவுக
ு இருண்ட கண்க
நெஞ்சத்துடனும்
ஆண் பெண் விப

சாரிகளாகவும் தெருக்களிலும் உல்லாசப் பயணிகளது விடுதிகளிலும் நிற்க நேர்ந்தது. நீங்கள் என்னவிலை கொடுத்தும் சமாதானத்தை பெறத்தயாரில்லை என்று வீம்பு பேசுகிறீர்கள். தமிழர்களும் ஏழைச் சிங்களவருமே என்னவிலை கொடுத்தும் மேல்வர்க்க சிங்களவரது வீம்புக்கும் பேராசைகளுக்கும் தீனிபோட வேண்டியிருக்கிறது.

நீங்கள் பதவிக்கு வந்தீர்கள். என்னவிலை கொடுத்தும் சமாதானத்தையும் சமூகநீதியையும் பெற விரும்பிய, ஜனாதிபதிமுறை சர்வாதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாத ஏழைச் சிங்கள மக்களிடமிருந்தும், அர்த்தமற்ற போர்க்களத்தில் தொடர்ந்தும் தமது பிள்ளைகள் கொல்லப்படுவதை விரும்பாத தமிழ சிங்கள தாய்மார்களிடமிருந்தும் கடனாக நீங்கள் பெற்றதே இந்த பதவி. ஒன்றில் என்னவிலை கொடுத்தும் இந்த கடனை நீங்கள் மக்களுக்குத் திருப்பிதரலாம். அல்லது பேராசைபிடித்த உங்கள் முன்னோரைப் போல நீங்கள் மக்களை ஏமாற்றி அவர்களை போரிட்டு அழிய வைக்கலாம். இரண்டுக்கும் நடுவே ஒரு பாதையில்லை.

நமது கனவுகளில் வெண்புறாக்களை நீங்கள் பறக்கவிட்டீர்கள். எனினும் யுத்த நிறுத்த முயற்சி நூறுநாள் கூட நீடிக்கவில்லை. பேச்சுவார்த்தைகளின் போதும் கூட பொருளாதார யுத்தத்தையும் கலாசார யுத்தத்தையும் நீங்கள் ஒரு போதும் கைவிடவில்லை. தமிழ் மீனவர்கள் தங்கள் கடலில் சுதந்திரமாக இறங்கி மீன்பிடிக்க உங்களது அனுமதி தேவைப்பட்டது. இலங்கைத் தமிழருக்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களான முஸ்லீம்களுக்கும் மலையகத்தமிழருக்குமாக தொலைக்காட்சியில் ஒரு தமிழ் அலைவரிசை கொடுப்பதற்குக் கூட நீங்கள் தயாராக இருக்கவில்லை என்பதை மக்கள் சுட்டிக் காட்டினர். ரூபவாஹினி தலைவர் வசந்தராஜாவின் பதவி துறப்பு தங்கள் அரசினது தமிழரக்கு எதிரான கலாசார யுத்தத்துக்கு விழுந்த ஒரு அடியாகும்.

களை இழிவு செய்திருக்கிறீர்கள். தயவு செய்து இது எங்கு நடந்தது என்று எங்களுக்கு கூறமுடியுமா? உங்களது அரசவை விதூஷகர்கள் சிலரது வெறும் வார்த்தைகளுக்கு உலகளவு அர்த்தம் உள்ளதாக கருதுவது உங்கள் குறைபாடாகிவிட்டது.

உங்கள் அரசவை சிங்கள அறிஞர்கள் பலரும் தமிழர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை தாங்களே தீர்மானிக்க விரும்புகிறார்கள். அவர்கள் பலரது நோக்கம் உங்களை உண்மைக்குள் வைத்திருப்பதல்ல. தங்களை பதவிக்குள் வைத்திருப்பது மட்டுமே. இதற்கு சாட்சி சொல்ல அவர்களுக்கு ஓரிரு மேல்வர்க்க பட்டதாரித் தமிழர்கள் இல்லாமலில்லை.

தமிழர்கள் மனநிலை தொடர்பாக தமிழர்கள் பேசினாலோ, எழுதினாலோ பயங்கரவாதிகள் என்ற லேபிள் ஒட்ட வகுப்புவாத பத்திரிகைகள் எப்போதும் தயாராகவே உள்ளன. இதனால் தமிழர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிப்பதில்லை.

சில வேளைகளில் மௌனமாக இருக்கவும், தவிர்க்க இயலாத தருணங்களில் ஆமாம் சாமி போடவும் கூட அவர்கள் கற்றிருக்கிறார்கள். ஆனால் செயல் என்று வருகிற போது ஆதரவு நிலைபாடு என்று வரும் போது தமது சொந்த கருத்துக்களின் அடிப்படையில் மட்டுமே அவர்கள் துணிச்சலாக செயல்படுகிறார்கள்.

பேச்சில் பயந்தாங்கொள்ளிகள் போல தெரிபடுகின்ற இந்த மக்கள் நடைமுறையில் அரச அல்லது இயக்க பயங்கரவாதத்துக்கு தலை பணிகிறவர்களல்ல. இந்த மக்களை வாய்திறந்து பேசவிடாமல் மிரட்டி வைத்துக் கொண்டு சமாதானத்துக்கு வழிகாண்கிறது சாத்தியமில்லை. இவர்களில் பலர், விடுதலை புலிகளைத் தவிர ஏனைய முக்கிய இயக்கங்கள் யாவும் கடந்த ஐந்து வருடங்களாக மேல்வர்க்க சிங்கள அரசுகளை யச்சேவல்களைப் போல தமிழரையும் ஏழை சிங்களவரையும் மோதவிட்டு பதவிகளை பரிசுகளாக தட்டிச் சென்றார்கள்.

எங்கள் பிள்ளைகள் தெருவில் மோதிச் செத்தபோது அவர்களது பிள்ளைகள் ராசாராணிக் கனவுகளோடு இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பிரான்சிலும் கல்விகற்றுக்கொண்டிருந்தார்கள். இது தொடர்பாக உங்கள் குற்றம் எதுவுமில்லை. இதற்காக 'நீங்கள் வருந்த வேண்டியதுமில்லை. உங்களது கணவன் உண்மையான ஒரு மனிதனாக இருந்தார். ஆனால் நீங்கள் மிக மோசமான சிங்கள பௌத்த பேரினவாதியான' உங்கள் 'தந்தையாரின் பாதையில்' போவதாக அடிக்கடி குறிப்பிட்டீர்கள். அப்போதெல்லாம் உங்கள் மீது நம்பிக்கை வைத்ததற்காக நாம் வெட்கப்பட நேர்ந்தது.

வரலாற்றை நீங்கள் கற்றிருப்பீர்கள். நீங்கள் சிறுமியாக இருந்த போது நமது அயலில் உள்ள மற்றொரு பல்தேசிய நாடான இந்தியாவில் அப்போதைய பிரதமர் நேரு அரசியல் நாகரீகத்துடன் மொழிவாரி மாநில அடிப்படையிலான அரைச்சமஷ்டி அமைப்பை புகுத்திய போது பல்தேசிய நாடான எமது இலங்கையில் உங்கள் தந்தையால் காட்டுமிராண்டித்தனமான பேரினவாத நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டார். இதற்கு மூன்னமே 1930களில் கண்டி உள்ளூராட்சித் தேர்தலில் மலையகத் தமிழர்களது வாக்குரிமையைப் பறித்தார். பின்னர் டி.எஸ்.சேனநாயக்கவும் தங்கள் தந்தையாரும் தலைமைதாங்கிய முதலாவது சுதந்திர அரசு காட்டு மிராண்டித்தனமாக மலையக தமிழர்களை நாடற்றவர்கள் ஆக்கியது. பிரான்ஸ், நோர்வே, போன்ற பல நாகரீகமான நாடுகள் பத்து வருடம் வாழ்ந்த அந்நியர்களையே தமது குடிமக்களாக அரவணைப்பதை நீங்கள் அறிவீர்கள். டி.எஸ்.சும் தங்கள் தந்தையும் நாடற்றவர்களாக்கியதோ நூறு வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டுக்

சொன்னாராம் அவர். தமிழர்கள் சரணாகதி அடையவில்லை. வன்முறையை நாடாமல் தொடர்ந்தும் காந்திய வழியில் போராடினார்கள்.

இம்முறை பதவிக்கு வர தாங்கள் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை முன்வைப்பதாகக் கூறியது போலவே, 1960களின் ஆரம்பத்தில் தமிழ் அரசுக்கட்சியின் ஆதரவைப் பெற்று குறும் காலமே வாழ்ந்த ஐ.தே.க. அரசை தோற்கடிக்கவும், பின் 1960 ஜூலை தேர்தல்களில் வென்றிடவுமாக தங்கள் அன்னையார் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் தமிழர்களுக்கு மாவட்ட சபை அடிப்படையில் நீதி வழங்குவதாக வாக்குறுதி தந்தார். அவரது நாவில் இருந்தும் வெண்புறாக்கள் பறந்தன. எல்லாம் பதவிக்கு வரும்வரையில் தான். பதவிக்கு வந்த பின் 1961ல் நடந்த தமிழர்களுடைய அகிம்சைப் போராட்டத்தை ஒடுகக யாழபபாணத்துக்கு இராணுவத்தை அனுப்பினார். உங்களது அன்னையார் தான் இலங்கையில் இன்று வரை தொடரும் அரசபயங்கரவாதத்தின் அன்னையாரும் ஆவார். அவரது படைகள் சத்தியாக்கிரகிகளை நையப்புடைத்த போதே வன்முறையின் பக்கம் தமிழ் இளைஞர்களை தள்ளிவிட்டது. பின்னர் 1971ல் அரச பயங்கரவாதத்தை புறக்கணிக்கப்பட்ட ஏழைச்சிங்களவர்கள் மீது முதன் முதலில் பிரயோகித்தவரும் உங்கள் அன்னையார்தான். ஏழைச்சிங்கள இளைஞர்களை கைதுசெய்தும் கடத்தியும் சென்று கொன்று வீதிகளிலும் ஆறுகளிலும் எறிகிற அரச பயங்கரவாதத்தின் பாடத்தை திரு.பிரேமதாசா உங்கள் அன்னையாரிடம் இருந்தும் கற்றிருக்கக்கூடும். அதன் பின் இளைஞர்களதும், தமிழர்களதும், ஏழைச் சிங்களவர்களினதும், ஏழைச்

தான். நீங்கள் ஜனாதிபதி முறையைக் காப்பாற்றிட சமாதானத்தை பலியிட விரும்பிகிறீர்களா? இக்கடிதத்தில் நான் கூறுவது இது தான். இளைய தலைமுறை தமிழ் மக்களையும், ஏழைச்சிங்கள மக்களையும், படைவீரர்களையும் , போராளிகளையும் அவர்களது கனவுகளோடு கொன்று புதைக்கிற இந்தப் பயங்கரமான யுத்தத்துக்கு முடிவைக் கொண்டுவாருங்கள். முழுமையான வடகிழக்கு இணைப்பு, முஸ்லீம், சிங்கள மக்களும் அரசியல் சட்டப்பாதுகாப்பு என்கிற வகையிலான சமஷ்டி அமைப்பை பிரகடனப்படுத்துங்கள். தங்கள் அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் உடனடியாக ஒரு யுத்த நிறுத்தத்திற்கு வந்தாக வேண்டும். தங்கள் அரசு பிரகடனப்படுத்துகிற, முழுமையாக வடகிழக்கு மாகாணம் இணைந்த, சமஷ்டி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட சமாதானப் பேச்சை நீங்களும் விடுதலைப் புலிகள் அமைப்பும் ஆரம்பிக்க வேண்டும்.

புறக்கணிக்கப்பட்ட தென்னிலங்கைச் சிங்கள கிராமத்து மக்களோடும் மலையக முஸ்லீம் மக்களோடும் சமத்துவம் சமூகநீதி தொடர்பான அரசியல் பேச்சுவார்த்தையை தங்கள் அரசு ஆரம்பிக்கவேண்டும் இதுவே எனது கோரிக்கை. தங்களுக்கு எனது நல் வாழ்த்துக்கள்.

**வ.ஐ.ச.ஜெயபாலன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை: அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும் — 4

## மலையகத் தமிழரது வாக்குரிமையை கட்டுப்படுத்த செய்த சதி!

சென்ற இதழ் தொடர்ச்சி

டொனமூர் அரசியலமைப்பு இனப்பிளவை மேலும் பரவலாக்கியது. மேல்தட்டு வர்க்கத்தின் மத்தியிலிருந்த இப்பிளவை கீழ்மட்டத்திற்கும் பல்வேறு சமூகங்களிடையேயும் கொண்டு சென்றது.

அதுவரை இனவாதிகளின் இலக்காக ஆகாமல் இருந்த மலையக தமிழரும் இப்போது இந்த விஷச்சுழிக்குள் இழுத்து வரப்பட்டார்கள். சர்வசன வாக்குரிமை வழங்க டொனமூர் ஆணைக்குழு முற்பட்ட போதுதான் மலையக தமிழருக்கெதிராக இனவாதம் முதற்தடவையாக திரும்பியது.

ஆரம்பத்தில் பெண்களுக்கும், கீழ்மட்ட மக்களுக்கும் வாக்குரிமை வழங்குவதை மேல்தட்டு வர்க்க தலைவர்கள் அனைவரும் எதிர்த்தனர். இவ்விடயத்தில் தமிழ் - சிங்கள தலைவர்கள் அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்தனர். ஏ.ஈ.குணசிங்க மாத்திரமே சர்வஜன வாக்குரிமைக்கு சாதகமாக இருந்தார்.

பின்னர் சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவது நிச்சயமாகிவிட்ட போது "தோட்ட தொழிலாளருக்கு" வாக்குரிமை வழங்குவதை தடுத்து நிறுத்தும் முயற்சிகள் பிரதான இடத்தைப் பிடித்தன. இவ்விடயத்திலும் சிங்கள- தமிழ் தலைவர்கள் ஒருமித்த கருத்தையே கொண்டிருந்தனர். அப்போதைய தமிழ் தலைவர்களின் இம்மனோபாவத்திற்கு அவர்கள் கொண்டிருந்த சாதி - வர்க்க கண்ணோட்டம் காரணமாகக் கூறப்படுகிறது. இதனை விடவும் ஒரு காரணம் இருந்தது. அப்போது இலங்கைத் தமிழர்களை விட மலையக தமிழர்களே சனத்தொகையில் அதிகமாக இருந்தனர். இவர்கள் வாக்குரிமை பெற்றால் தமது அரசியல் ஆதிக்கம் வலுவிழந்து போகும் என அவர்கள் கருதியிருக்கக்கூடும். 1993 ஆம் ஆண்டு வரையிலான புள்ளி விபரம் மலையக தமிழரே இலங்கையில் இரண்டாவது பெரும்பான்மை சமூகமாக இருந்து வந்துள்ளமையைக் காட்டுகிறது. (1911 முதலே இந்திய தமிழர் என்ற சொற்பதமும் தனியான கணக்கெடுப்பும் புள்ளிவிபர திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது)

**மலையக தமிழர் - சனத்தொகை**

| ஆண்டு | இல.தமிழர் | வீதம் | இந்திய தமிழர் | வீதம் |
|---|---|---|---|---|
| 1911 | 528.0 ஆயிரம் | 12.8 % | 531.0 ஆயிரம் | 12.9 % |
| 1921 | 517.3 ஆயிரம் | 11.5 % | 602.7 ஆயிரம் | 12.9 % |
| 1931 | 598.9 ஆயிரம் | 11.3 % | 818.5 ஆயிரம் | 15.4 % |
| 1946 | 733.7 ஆயிரம் | 11.0 % | 780.6 ஆயிரம் | 11.7 % |
| 1953 | 884.7 ஆயிரம் | 10.9 % | 974.1 ஆயிரம் | 12.0 % |
| 1963 | 1,164.7 ஆயிரம் | 11.1 % | 1,123.0 ஆயிரம் | 10.6 % |

சட்டசபையிலே டொனமூர் சீர்திருத்தம் தொடர்பான விவாதத்தில் பல சிங்கள தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் அக்கால சிங்கள தலைவர்களின் மலையக மக்கள் தொடர்பான மனோபாவத்தை வெளிக்காட்டுகிறது.

இவற்றுள் டி.எஸ். சேனநாயக்கவின் கருத்து பிரதானமானது. "சிங்களவர்கள் துரதிர்ஷ்டசாலிகள்....... அவர்கள் தவறாக விளங்கப்பட்டிருக்கிறார்கள்.... அவர்களது பரோபகார சிந்தனை மறக்கப்பட்டுள்ளது...... இந்தியர்களுக்கு விசாலமான ஒரு நாடு இருக்கிறது. எமக்கென இருப்பது இச்சிறுதுண்டு நிலம் மாத்திரமே. எமக்கென இந்நாடு இருத்தல் வேண்டும்! என அவர் முழங்கினார். (மூலம்: ஹன்சார்ட் 8.11.1928)

பிரான்சிஸ் மொலமூர் "இது எதிர்காலத்தைப் பற்றி எதிர்வு கூறும் பிரச்சினையாகும்..... கடந்த காலத்தில் இலங்கை லிப்டனின் தேயிலைத் தோட்டம் என்றழைக்கப்பட்டது. எதிர்காலத்தில் அது இந்திய ஆலமரம் என்றழைக்கப்படும்" என்றார். (மூலம்: ஹன்சார்ட் 15.11.1928)

சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர இந்திய தொழிலாளர் இலங்கையின் நிரந்தர குடிகளை மூழ்கடித்து விடுவர் என்றும் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்குவதை எதிர்க்காதவர்கள் துரோகிகளே என்றும் கூறினார். (ஹன்சார்ட் 8.11.1928)

வீ.டி.எஸ்.விக்ரமநாயக்கவின் உரை குமாரி ஜயவர்த்தன கூறுவதைப் போல ஒரு வர்க்க கோணத்தைக் கொண்டிருந்தது. "நான் கொழும்பில் வாழும் இந்தியர்களை விட தோட்டங்களில் வாழும் இந்திய கூலிகளைப் பற்றியே அஞ்சுகிறேன். இந்திய தொழிலாளி காலை ஆறு மணிக்கு வேலைக்குப் போய் இரவு ஆறுமணிக்கே தனது கூலி லைன்களுக்குத் திரும்புகின்றான்.... நாட்டு நடப்புக்கள் இவனுக்கு என்ன தெரியும்?.... ஆகவே அரசியல் விவகாரங்களில் வாக்களிக்கும் தகுதியும் அருகதையும் அவனுக்கில்லை......" எனக்கூறினார். (ஹன்சார்ட் 2.11.1928)

அப்போதைய இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர் கலாநிதி டபிள்யூ.ஏ.டி. சில்வா உரையாற்றும் போது இந்நாட்டின் தலைவிதியை இங்கு நிரந்தர நலன்கள் எதுவுமில்லாத இந்தியர்களின் கையில் ஒப்படைக்கப் போகிறோம் என்ற விடயத்தை மக்களிடம் நாம் கூறினால் அவர்கள் கொதித்தெழுவார்கள் என்றார்.

**பீ.ஏ.காதர்**

மலையக தமிழருக்கெதிராக "இந்திய பீதி" பற்றி சட்டசபையில் பலமாக ஒலித்த வேளை ஒரு சில குரல்கள் ஆதரவாகவும் கேட்கத்தான் செய்தன. ஏ.ஈ.குணசிங்கவின் தொழிற்கட்சியைச் சேர்ந்த சீ.எச்.இசட்.பெர்ணாண்டோ இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவரின் கூற்றை எதிர்த்து "அவ்வாறு நீங்கள் மக்களிடம் சென்று முழங்குவீர்கள் என்றால் மக்கள் கொதித்தெழுவார்கள் என்பது உண்மைதான். ஆனால் உங்களது அந்த முழக்கம் நேர்மையான ஒன்றாக இராது... மக்களை தூண்டிவிடுவது ஒன்றும் பெரிய காரியமல்ல" எனப் பதிலளித்தார்.

அப்போது பலம் வாய்ந்த தொழிற்சங்க தலைவராயிருந்த ஏ.ஈ.குணசிங்க காந்தி சங்கம் நடத்திய கூட்டமொன்றுக்கு 1928ல் தலைமை தாங்கி உரையாற்றும் போது "இப்போது சில தனவந்த அரசியல்வாதிகள் இந்திய பீதிபற்றியும் உழைப்பாளர் பற்றியும் பேசுகிறார்கள்..... உழைப்பாளர்கள் துயரத்தில் வாடிக்கொண்டிருந்த போது இந்த தேசபக்தர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்.... அவர்களை அவர்களது நிலத்தை விட்டு விரட்டுவதற்கு தமது சக்தியை பிரயோகித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென சிங்கள மக்களுக்காக பேசும் இந்த தேசபக்தர்கள் தான் ஆணைக்குழு முன்னால் சென்று சர்வஜன வாக்குரிமையை எதிர்த்தவர்கள்..... அம்முயற்சியில் தோல்வியுற்ற பின்னரே இப்போது இலங்கையில் வாழும் இந்தியர்களின் வாக்குரிமையை பறிப்பது பற்றி பேசுகிறார்கள்" என்று குறிப்பிட்டார். (டெயிலி நியூஸ் 10.09.1928)

டி.பி.ஜாயா அவர்களும் தோட்ட தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்குவதை ஆதரித்தார். நடேச ஐயரும், ஏ.மகாதேவாவும் "....... எமக்கு இந்தியர் வேண்டும்... அவர்கள் இலங்கையரோடு சமதையாக இருத்தல் வேண்டும் " என முழங்கினர். ( ஹன்சார்ட் 8.11.1928)


எனினும், மலையக தமிழருக்கு வாக்குரிமை வழங்குவதற்கு சட்டசபையில் கடும் எதிர்ப்பு மேலோங்கி இருந்த காரணத்தால் இலங்கையின் சர்வஜன வாக்கு அடிப்படையில் நடைபெற்ற முதலாவது 1931 தேர்தலில் கூட மலையக மக்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டது. மலையக மக்கள் வாக்குரிமை பெறுவதற்கு புதிய நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தும் பாரபட்சமான சட்டமொன்று கொண்டுவரப்பட்டது. இதன்படி வாக்குரிமை பெறுவதற்கு ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து நிரந்தரமாக குடியேறியவர் என சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது கல்வித்தகைமை, சொத்துடமை, வருமானத்தகைமை அடிப்படையில் தமது தகுதியை நிரூபிக்க வேண்டும். இந்தச் சட்டம் கெடுபிடியான முறையில் பிரயோகிக்கப்பட்டதால் மலையக தமிழரது வாக்கு கட்டுப்படுத்தப்பட்டதுடன் குறைக்கவும் பட்டது என்பதை கீழே தரப்பட்டுள்ள அட்டவணை காட்டுகிறது.

**இந்திய வாக்காளர் தொகை**

| ஆண்டு | வாக்குகள் | அரசியல்யாப்பு |
|---|---|---|
| 1921 - 24 | 13,000 | மானிங் |
| 1931 | 100,000 | டொனமூர் |
| 1936 | 145,000 | டொனமூர் |
| 1939 | 225,000 | டொனமூர் |
| 1943 | 168,000 | டொனமூர் |

வரும்

# அ-காலத்தின் சொற்கள்



– ஞான சௌந்தர்யன்

தடிமனும் சளியும் சற்று அதிகமாக இருப்பதாலும்
சமாதான ஒப்பந்தம் முறியப் போவது பற்றி
தன் மூக்கு நுனி வியர்ப்பதில் இருந்து முன்னுணர்வதாக
என் நண்பன் கூறியதாலும்
அந்தக் கடைசி இரவை வீணாக்காமல் இருக்க மட்டுமே
நாங்கள் மதுவருந்தப் போனோம்.

அன்றிரவு எந்த இலக்கியவாதியும்
என் நண்பனின் வசவுக்குத் தப்பவில்லை
இலக்கியத்தின் உச்சாணிக் கொப்பில் நின்று
தன் சளி அவ்வளவையும் காறித்துப்பினான்

அடே இலக்கியவாதியே
என் கேள்விகளுக்கு நீ மட்டும் பதில் சொன்னால்
இன்னுமொரு போத்தல் மதுவினால்
உச்சாணிக் கொப்புக்கு மேல் உனக்கொரு சொர்க்கம்
உருவாக்கித் தருகிறேன்.
பொரி கடலையும் பற்களும் நெரிபட
விழியுருட்டி 'கேள்' என்றான்.

இடியும் மின்னலும் மழையும் மிகைபடப் பொழியும்
இரவில் உன் மடியுள் முடங்கும் பிள்ளையின்
முகத்தில் தெரிவது?

"அச்சம்"

வீசும் பிரம்பொடு மூசும் குருவின் முன்னே
விதிர்க்கும் சிறுவன் மூக்கில்
உதிர்வது?

"வியர்வை"

உன் காலுள் சிக்கிய எறும்பின் வாழ்வு?

"அவலம்"

மனிதனை மௌனமாக்குவது?

"மரணம்"

'முடிந்ததா' - நண்பன்

உச்சாணிக்கொப்பில் இருந்து நீ சொர்க்கத்துக்குப் பாய
இன்னும் ஒரேயொரு கேள்வியே உள்ளது
"சொல்லிவை மதுவுக்கு" - நண்பன்
உன் எல்லாச் சொற்களும்
ஒரே ஒரு அர்த்தத்தை மட்டுமே கொள்ளும் காலம் எது?

"என்ன!

ஒரு சொல்லுக்கு பல பொருளும்
பல சொற் கொரு பொருளும்
உண்டென் மொழியில் - உண்மை.
ஆனால் மேற்சொன்ன சொற்களில் ஒன்றேனும் ஒன்றுக்கும்
எக்காலமும் பொருந்தாதே!"
"என்னடா!
முட்டாள் கவிஞன் ஒருவன் தன் புலம்பல் தொகுப்புக்கு
வைத்த தலைப்போ உன் கேள்வி.
போடா! உன் மதுவும் சொர்க்கமும்!!
இரவு தள்ளாடிப் போக,
நாங்கள் கலைந்தோம்.

அதிகாலை என் தொலைபேசி அடித்தது
கலங்கித் தழும்பி உடையும் குரலில் நண்பன்,
"எல்லாச் சொற்களும் ஒரே ஒரு அர்த்தத்தை மட்டுமே கொள்ளும்
காலத்தை நான் பெற்றேனப்பா... அப்பா....
நள்ளிரவு STF* என் பிள்ளையை....
என்றவன் அழத்தொடங்கினான்...

அச்சம் வியர்வை அவலம் மரணம்

★ விசேட அதிரடிப்படை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1993இல் வெளிவந்த இலங்கைத் தமிழ் நாவல்கள்

## - ஒரு மதிப்பீடு

எம்.ஏ.நுஃமான்

**வீபவீ மாற்றுக் கலாசார நிறுவனம் நடாத்திய 3வது சுதந்திர இலக்கிய விழாவில் நிகழ்த்திய மதிப்பீட்டுரையின் சுருக்கம் இது**

1993ஆம் ஆண்டில் வெளிவந்த நாவல்களை மதிப்பீடு செய்ய முன்னர் இலங்கைத் தமிழ் நாவல்களில் காணப்படும் சில பொதுப்பண்புகளை இங்கு சுருக்கமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அவை பின்வருமாறு,

1. உண்மையான - யதார்த்த பூர்வமான - வாழ்க்கை அனுபவத்தைவிட நாவலாசிரியனின் கருத்துநிலை (Ideology) முதன்மை பெறுவது ஈழத்துத் தமிழ் நாவல்களின் ஒரு பிரதான பண்பு எனக்கூறலாம். மார்க்சிய வர்க்கவியல், சாதியம், தமிழ்த்தேசியம், பெண்ணிலைவாதம் முதலிய கருத்துநிலைகளில் ஒன்றோ பலவோ இந்நாவல்களின் கருத்துநிலையாக அமைகின்றன. நாவலாசிரியன் தான் வலியுறுத்த விரும்பும் கருத்து நிலைக்கேற்ப ஒரு கதையைப் பின்னுகிறான். அந்நிலையில் நாவல்கள் நாவலாசிரியனின் வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடாக அன்றி, அவனது கருத்துநிலை வெளிப்பாடாகவே அமைகின்றன. எமது பெரும்பாலான நாவல்கள் கருத்துப் பிரச்சாரமாகக் காணப்படுவதன் அடிப்படை இதுதான்.

2. ஈழத்துத்தமிழ் நாவல்களைப் பொறுத்தவரை அவை சித்திரிக்கும் வாழ்க்கை யதார்த்தமும் (Real) நாவலாசிரியன் வெளிப்படுத்தவிரும்பும் இலட்சியமும் (ideal) ஒன்றுடன் ஒன்று இயைபு பெறாமல் தனித்தனியே நிற்கின்றன. முதலாவது அம்சத்துடன் தொடர்புடைய இது நாவல் கலையின் பலவீனமான பண்பு ஆகும். எந்த ஒரு சிறந்த நாவலிலும் சமூக யதார்த்தமும் நாவலாசிரியனின் இலட்சியமும் ஒருங்கியைபு பெற்றிருக்கும். இத்தகைய படைப்பே சிறந்த படைப்பாக அமையும். உதாரணமாக மார்க்சியக் கருத்துநிலையை அடிப்படையாகக் கொண்ட கார்க்கியின் தாயும், கிறிஸ்தவ தார்மீகவாதத்தை அடிப்படையாகக் கொண்ட டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பும் கருத்து நிலையைப் பொறுத்தவரை எதிரெதிரானவை எனினும், அந்த நாவல்கள் சித்திரிக்கும் சமூக யதார்த்தமும் அந்த நாவலாசிரியர்கள் முன்மொழியும் இலட்சியமும் பிரிக்கமுடியாதபடி ஒருங்கியைபு பெற்றுள்ளன. இதனாலேயே அவை இரண்டும் உலகின் சிறந்த நாவல்களாகக் கருதப்படுகின்றன.

3. அளவில் நீண்ட ஒரு கதை இங்கு நாவலாகக் கருதப்படுகின்றது. அவ்வகையில் நீண்ட கதை எழுதுபவர்கள் எல்லாரும் நாவலாசிரியர்களாகவும் கருதப்படுகின்றனர். ஆனால் சிறந்த மேலை விமர்சகர்கள் கதையையும் (Fiction) நாவலையும் (Novel) வேறுபடுத்துவர். எல்லாச் சிறந்த நாவல்களும் ஏதோ ஒருவகையில் ஒரு கதையை அடித்தளமாகக் கொண்டுள்ளன என்பது உண்மையே. ஆனால் எல்லா நெடுங்கதைகளும் நாவல்கள் ஆவதில்லை - இலங்கையில் நாவலாசிரியர்கள் என்று புகழ்பெற்ற பலர் வெறும் கதாசிரியர்களே' என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

4. பொதுவாக, இந்தியத்தமிழ் நாவல்களுடன் ஒப்பிடுகையில் இலங்கைத்தமிழ் நாவல்- ஒரு கலை என்றவகையில் இன்னும் தவழ் நிலையிலேயே இருக்கிறது எனலாம். எனினும் எமது எழுத்தாளர்கள் இதனைச் சீரணித்துக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் உணரமுடிகின்றது.

இந்தக் குறிப்புக்களின் பின்னணியிலேயே 1993ல் வெளிவந்த நாவல்களை நான் இங்கு மதிப்பீடு செய்ய முயல்கிறேன். 1993ல் இலங்கை எழுத்தாளர்களின் 14 நாவல்கள் வெளிவந்துள்ளன. அவை வருமாறு: **செ.யோகநாதனின்** 1. அரசு, 2. சிறுபொறி பெருந்தீ, 3. நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே. **செ. கணேசலிங்கனின்** 4. இரண்டாவது சாதி, 5. ஒரு குடும்பத்தின் கதை, **கே.டானியலின்** 6. பஞ்ச கோணங்கள், **நா.பாலேஸ்வரியின்** 7. மாது என்னை மன்னித்து விடு, 8. எங்கே நீயோ அங்கே நானும் உன்னோடு, **நந்தியின்** 9. தங்கச்சியம்மா, **ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின்** 10. பனி பெய்யும் இரவுகள், **சோமகாந்தனின்** 11. விடிவெள்ளி பூத்தது, **சோ.ராமேஸ்வரனின்** 12. இவர்களும் வாழ்கிறார்கள், **வ.அ.இராசரத்தினத்தின்** 13. ஒரு வெண்மணற்கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது, **தாமரைச் செல்வியின்** 14. தாகம். இவற்றுள் 4 நாவல்களே இலங்கையில் அச்சிடப்பட்டன என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும். ஏனையவை தமிழகத்தில் அச்சிடப்பட்டன. இங்கு தமிழ் நூல் வெளியீட்டுத்துறை போதிய வளர்ச்சியடையவில்லை. இது இலங்கைத் தமிழ் நாவல் வளர்ச்சியைப் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாகும்.

1993ல் வெளிவந்த 14 நாவல்களுள் பின்வரும் 5 நாவல்களே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளத்தகுதி படைத்தவையாகின்றன.

1. நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே
2. பனி பெய்யும் இரவுகள்
3. ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது
4. பஞ்ச கோணங்கள்
5. தாகம்

இவற்றோடு சோமகாந்தனின் விடிவெள்ளி பூத்தது, நந்தியின் தங்கச்சியம்மா ஆகிய இரண்டும் பரிசீலனைக்கு உகந்தவைதான் எனினும், அவை ஏற்கெனவே 1980களின் நடுப்பகுதியில் இலங்கையில் அச்சிடப்பட்டு இப்போது இந்தியாவில் மீண்டும் முதல்பதிப்பாக வெளிவந்துள்ளன என்ற வகையில் தவிர்க்கப்பட்டன. செ. கணேசலிங்கன் மிக முக்கியமான ஈழத்து நாவலாசிரியராகக் கருதப்படுபவர். எனினும், அவரது இரண்டு புத்தகங்களும் வெறும் கருத்து விளக்கக் கதைகள் என்ற வகையில் பரிசீலிக்கத் தகுதியற்றவையாகின. இனி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 5 நூல்களைப் பற்றி இங்கு சுருக்கமாக நோக்கலாம்.





**தாகம்:**
**"மரணத்துள் வாழ்வு நடாத்தும் சாதாரண மனிதர்களைப் பற்றிய நாவல் இது"**




**பஞ்ச கோணங்கள்:**
**"சாதி முரண்பாட்டை வர்க்க முரண்பாடாகக் காணும் டானியல் பாணி மற்றுமொரு நாவல் எனினும் தமிழ் தேசியவாதம் பற்றிய ஒரு தீவிரமான விமர்சனத்தை முன்வைக்கிறது"**

**ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது:**
**"ஒரு சாதாரண குடும்ப-காதல் கதை"**




**பனி பெய்யும் இரவுகள்:**
**"தமிழ் சினிமாத்தனம் சற்று மேலோங்கிய மிகை உணர்ச்சிப் பாங்கான கதை"**




**நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே:**
**"இன்றைய அனுபவத்தை 19ம் நூற்றாண்டுக்கு காவிச் செல்லும் ஒரு வரலாற்றுப் பொய்மை"**

### நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே

செ.யோகநாதன் மிகச் சிறந்த ஈழத்து நாவலாசிரியராகப் புகழ்பெற்றவர். பல பாராட்டுக்களும் பரிசுகளும் பெற்றவர். 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' தமிழ்நாட்டில் பிரசுரமாகி அங்கு பரிசும் பாராட்டுக்களும் பெற்ற நாவல். இது ஒரு சமகால வரலாற்று நாவல் எனக் கூறப்படுகின்றது. ஒன்பது பாகங்களைக் கொண்ட 'அசுரவித்து' என்ற நாவல் தொடரில் முதலாவது பாகம் இது என ஆசிரியர் கூறுகிறார்.

19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இன்றுவரையுள்ள யாழ்ப்பாணச் சமூக வரலாற்றைக் கூறுவது இந்த நாவல் தொடரின் நோக்கம் எனப்படுகிறது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து இந்த நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகள் (1902) வரையுள்ள காலப்பகுதியை இந்த நாவல் உள்ளடக்குகின்றது. அதாவது, யாழ்ப்பாணத்தை நோக்கி புகையிரப்பாதை அமைக்கப்பட்ட காலம் இதன் பின்னணி. 500 பக்கங்களுக்கு அதிகமாக நீளும் இந்த நாவலின் அடிப்படையான பலவீனம், அது இன்றைய யாழ்ப்பாண நிலைமையை - இளைஞர்களின் விடுதலைப் போராட்டத்தை - 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பொருத்திக்காட்டுவதாகும். தமிழ்த் தேசியவாதக் கருத்தியல் - இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் சைவத் தமிழ்த்தேசியவாதம் இந்த நாவலின் அடிப்படையாகும். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, அவர்கள் புகுத்திய கிறிஸ்தவத்துக்கு எதிராக, அவர்கள் புகையிரதப் பாதை திறப்பதற்கு எதிராக ஒரு யாழ்பாணக் கிராமத்துத் தமிழ் இளைஞர்கள் வன்முறைப் போராட்டத்தில் குதிப்பதை இந்த நாவல் விபரிக்கின்றது. இது இன்றைய அனுபவத்தை 19ம் நூற்றாண்டுக்குக் காவிச்செல்லும் ஒரு வரலாற்றுப் பொய்மையாகும். அன்றைய யாழ்ப்பாணத்தின் உண்மை வரலாறு - அன்றைய வர்க்க முரண்பாடு, சாதி முரண்பாடு, எதுவும் நாவலில் இல்லை. ( டானியல் இந்த நாவலைப் படித்தால் ஏளனமாகக் கொடுப்புக்குள் சிரித்துக் கொள்வார்.) பதிலாக, பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கும் யாழ்ப்பாண இளைஞர்களுக்கும் (இது சிங்கள - தமிழ் முரண்பாட்டின் பிரதி) இடையிலான முரண்பாடே அல்றைய பிரதான முரண்பாடாகச் சித்திரிக்கப்படுகின்றது.

நாவலின் பிற்பகுதியில் மளமளவென்று கொலைகள் விழுகின்றன. இதற்கு மேலாக இளைஞர்களதும் யுவதிகளதும் காதல் லீலைகள் விரிவாக விபரிக்கப்படுகின்றன. அவ்வகையில் பேரும், புணர்ச்சியும் இந்நாவலில் நிரம்பி வழிகின்றன. இது பண்டைத் தமிழரின் அகம்; புறம் என்ற பண்பாட்டின் பிரதிபலிப்புப் போலும். உதாரணமாக பதின்மூன்றே வயது நிரம்பிய ருக்குமணி முரட்டுக்காளை மாட்டின் கழுத்தைக் கட்டிப்பிடித்து அடக்குவதும் அவளது காதலன் ஆறுமுகத்தை கொவ்வம் பற்றைக்குள் வலிந்து இழுத்துச் சென்று புணர்வதும் பற்றிக் குறிப்பிடலாம் (பக்: 217, 225). இவ்விதமாக ஆசிரியர் மனம்போன போக்கில் எல்லாம் தன் கற்பனைக் குதிரையில் சவாரி செய்கிறார். இது எவ்வாறாயினும் ஒரு வரலாற்றுப்பொய்மை என்ற வகையில் இந்த நாவல் பரிசுக்குத் தகுதியற்றதாகின்றது. (தமிழ்நாட்டில் பரிசு வழங்கிக் கௌரவித்தவர்கள் மன்னிக்கவேண்டும்).

### பனிபெய்யும் இரவுகள்

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் குறிப்பிடத்தகுந்த ஒரு ஈழத்து நாவலாசிரியையாக வளர்ச்சியடைந்திருக்கிறார். கடந்த சுமார் 25 ஆண்டுகளாக லண்டனில் வாழ்ந்து வருபவர். இவரது மூன்று நாவல்கள் - உலகமெல்லாம் வியாபாரிகள், தேம்ஸ் நதிக்கரையில், பனி பெய்யும் இரவுகள் - லண்டன் வாழ் இலங்கைத்தமிழர் வாழ்வைப் பகைப்புலமாகக் கொண்டவை. கடந்த ஆண்டு சுதந்திர இலக்கிய விழாவில் இவரது 'தேம்ஸ் நதிக்கரையில்' என்ற நாவல் 1992ல் வெளியான சிறந்த நாவலுக்கான பரிசு பெற்றது.

ராஜேஸ்வரி ஏனைய ஈழத்து எழுத்தாளர்களைப் போலவே கதையம்சத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவர். எனினும் அந்நிய கலாசாரச் சூழலில் இலங்கைத் தமிழர் எதிர்நோக்கும் கலாசாரப் பிரச்சினைகளைத் தீவிரமாக எதிர்நோக்குபவர். பனிபெய்யும் இரவுகளிலும் இதனைக் காணலாம். எனினும் இது ஒரு மிகை உணர்ச்சிப் பாங்கான கதைப்பின்னல் கொண்டது. காதல், தியாகம் என்ற இரண்டு அம்சங்களைச் சுற்றியே கதை நகர்கின்றது. தமிழ் சினிமாத்தனம் கதையில் சற்று மேலோங்கித் தெரிகின்றது. அதனால் இதுவும் பரிசுக்குரிய தகுதியை இழந்துவிடுகின்றது.

### ஒரு வெண்மணற்கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது

வ.அ. இராசரத்தினம் இலங்கையின் மிகச்சிறந்த சிறுகதையாசிரியர்களுள் ஒருவர். அவரது 'தோணி' சிறுகதைத் தொகுப்பு கடந்த 40 ஆண்டுகளில் இலங்கையில் வெளிவந்த தரமான சிறுகதைத் தொகுதிகளுள் ஒன்றாக இன்றும் மதிக்கப்படுகின்றது. அவர் சில நாவல்களும் எழுதியுள்ளார். ஆயினும், ஒரு நல்ல நாவலாசிரியராக அவர் தன்னை நிலைநாட்டிக்கொள்ளவில்லை. 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கின்றது' 1960 களில் திருகோணமலை மாவட்டத்தின் ஆலங்கேணி என்ற சிறு கிராமத்தைக் களமாகக் கொண்டது. நவீன கல்விவாய்ப்பின் மூலம் புதிய உலகில் காலடி எடுத்து வைக்க முயலும் அக்குக்கிராமத்தின் இளைய தலைமுறையை முதன்மைப்படுத்தும் கதை. ஆயினும் சாதாரண குடும்ப - காதல் கதையாகவே நாவல் அமைந்துள்ளது. இன்றைய இனப்பிரச்சினையில் அக்கிராமம் முழுமையாக இடம் பெயர்ந்து அகதி முகாமில் வாழ்வது ஒரு பின்னுரையாகக் கூறப்படுகின்றது. ஆயினும், நாவலின் தலைப்பு பின்னுரையையே அடிப்படையாகக் கொண்டது. ஆனால் பின்னுரைக்கும் நாவலுக்கும் தொடர்பில்லை. அவ்வகையில் இது ஒருங்கியைபற்றது. பரிசுக்குத் தகுதியற்றதாகியது.

### பஞ்ச கோணங்கள்

டானியல் இலங்கையின் முக்கியமான நாவலாசிரியர்களுள் ஒருவர். யாழ்ப்பாணச் சாதி அமைப்பும், சாதி ஒடுக்குமுறையுமே இவரது நாவல்களின் பிரதான கருப்பொருள். இவ்வகையில் இவரது பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், தண்ணீர், பஞ்ச கோணங்கள் ஆகிய ஆறு நாவல்கள் இதே கருப்பொருளை மையமாகக் கொண்டவை. தாழ்த்தப்பட்ட சாதியினரே யாழ்ப்பாணத்தின் பிரதான ஒடுக்கப்படும் வர்க்கம் என்பதும் அவர்களது விடுதலைப் போராட்டம் சோசலிசப் புரட்சியின் பிரிக்கமுடியாத அங்கம் என்பதும் இவரது கருத்துநிலை அடிப்படையாகும்.

பஞ்சகோணங்கள் 1980 களின் தொடக்கம் வரை வளர்ச்சியடைந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின்னணியில் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான அரசியல் போராட்டத்தைச் சித்திரிக்கின்றது. டானியல் தமிழ்த் தேசியவாதத்தை நிராகரித்தவர். உயர்சாதித் தமிழர்களின் கருத்துநிலையாகவே அதனை அவர் இனங்கண்டார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை இல்லாமல் தமிழர்களுக்கு விடுதலை இல்லை என்பதனையும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலையைக் கொண்டுவராது என்பதையும் வலியுறுத்துவதாகவே பஞ்ச கோணங்கள் அமைந்துள்ளது. அவ்வகையில் டானியல் இந்த நாவலில் தமிழ்த் தேசியவாதம் பற்றிய ஒரு தீவிரமான விமர்சனத்தை முன்வைக்கின்றார். இவ்விமர்சனத்தின் ஏற்புடைமை பற்றிய பிரச்சினைகள் எவ்வாறிருப்பினும் இந்நாவலின் கட்டுக்கோப்பு டானியலின் நாவல்களுக்கே உரிய வாய்ப்பாட்டு முறையிலேயே அமைந்துள்ளது. அந்த வாய்ப்பாடு பின்வருமாறு:

உயர்சாதியினரே உற்பத்தி சாதனங்களின் உடைமையாளராக இருத்தல். அவர்களிடம் கூலி அடிமைகளாக இருக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினர் தங்கள் ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்காக ஒன்றிணைந்து வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களில் ஈடுபடுதல், உயர்சாதியைச் சேர்ந்த இரண்டொரு புத்திஜீவிகள் அவர்களுக்கு ஆதரவாக இருத்தல், உடமையாளர் வன்முறையைப் பயன்படுத்துதல், சில கொலைகள் நிகழ்தல், தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களை உயர்சாதியினர் தங்கள் பாலியல் தேவைகளுக்குப் பயன்படுத்துதல், உயர்சாதிப் பெண்கள் சோரம் போதல், பஞ்ச கோணங்களின் ஒரு பிரத்தியேக அம்சம் ஈழவிடுதலைப் போராளிகளின் பிரசன்னமாகும். மற்றும்படி சாதி முரண்பாட்டையே வர்க்க முரண்பாடாகக் காணும் மற்றுமொரு டானியல் பாணி நாவல் இது. ஆயினும் தாமரைச் செல்வியின் தாகம் இவ்வாண்டில் வெளிவந்திராவிட்டால் 1993ல் வெளிவந்த சிறந்த நாவலாக டானியலின் பஞ்சகோணங்களே சிலவேளை தெரிவு செய்யப்பட்டிருக்கலாம்.

### தாகம்

தாமரைச் செல்வி தமிழ் நாவல் உலகுக்குப் புதியவர். பரவலாக அறியப்பட்டவர் அல்ல. இது அவரது மூன்றாவது நாவல். அவரது ஏனைய நாவல்களை எனக்குப் படிக்கக் கிடைக்கவில்லை. பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாவல்களுள் அளவில் மிகவும் சிறியது இது. 94 பக்கங்கள் மட்டும்தான். ஆர்ப்பாட்டமான பிரகடனங்களோடு வெளிவந்த நாவல் அல்ல. ஆசிரியர் முக்கால் பக்கத்தில் ஒரு சிறு முன்னுரை எழுதியிருக்கிறார். அதில் இருந்து சில பகுதிகளை இங்கு தருகின்றேன்.

"போராட்டம் கூர்மை அடைந்துள்ள காலம் இது. இந்தப் போராட்டக் காலத்தில் மக்கள் பல இழப்புக்களுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கு ஏற்படுகின்ற இழப்புக்களையும் துன்பங்களையும் அவரே தாங்கிக்கொள்ள வேண்டும் என்பது கசப்பான உண்மையாகும். வீடு இழந்து, வாசல் இழந்து அனாதரவாக அலைகின்ற நிலைக்கு பலர் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் கதைதான் இந்த நாவலில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது."

உண்மைதான். போராட்டத்தை அன்றி போராட்டத்தால்

→ 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வந்தவள் வராமல் வந்தால்...



(ஜேர்மனி) பார்த்திபன்

*முதல் பாகம்*

"ஹலோ "

..........

"ஹலோ "

இரைச்சல் உடனான கசமுச தொடர்ந்து...

"ஹலோ"

"நான் ஜேமனிலையிருந்து செல்வம் கதைக்கிறன். மைதிலியோட கதைக்கலாமோ?"

"நான் இஞ்ச மார்க்கண்டு கதைக்கிறன். என்ன மாதிரி? காசலுவலுகள் முடிஞ்சுதோ?"

"அண்ணை ... ஏற்கெனவே பன்ரண்டுதான் பேசிமுடிச்சது. பிறகு சிங்கப்பூரிலை நிண்டு கொண்டு ரண்டனுப்பச் சொன்னியள் அனுப் பினன். இப்ப மொஸ்கோவில நிண்டு கொண்டு திருப்பியும் ரண்டு கேக்கிறியள் நான் எங்கை யண்ணை போறது?"

"எனக்கு விளக்கங்கள் வேண்டாம். நான் தொண்டு செய்யேல்ல. ஏஜென்சி வேலை செய்யிறன். காசை தந்தா வாற வெள்ளி வெளிக்கிடுற குறூப்பில உம்மட தங்கச்சியை அனுப்பிவிடலாம். இல்லை யெண்டால் அவவை இஞ்ச விட்டிட்டு நாங்கள் வெளிக் கிட்டிடுவம் என்ன மாதிரி...?"

பொங்கிய ஆத்திரத்தை பற்களுக்கு இறக்கி....கடித்தான் செல்வம்; காட்ட முடிய வில்லை. அவன் பணயக் கைதியை வைச்சி ருக்கிறான். ஒண்டுமே செய்யேலாது.

"அண்ணை கோவியாதையுங்கோ. ஒண்டஞ்சு மாறிட் போட்டன். எப்பிடியும் மிச்சத்தை சாமத் துக்கிடையில மாறி விடிய ஃபக்ஸ் பண்ணுறன். தங்கச்சியைக் கெதியிலை அனுபபி விடுங்கோ"

"நாளைக்கிரவுக்கிடையிலை எனக்கு காசு கிடைக்க வேணும்."

"ஓமண்ணை கட்டாயம் கிடைக்கும் தங்கச்சியோட ஒருக்காக் கதைக்கலாமோ?"

"அண்ணா...."

"மைதிலி"

மொஸ்கோவில் மைதிலி அழ இங்கே செல் வத்துக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. கதைக்க கஷ்ரமாயிருந்தது. போனில் காசு மட்டம் படு வேகமாய் குறைந்து கொண்டிருந்தது. கெதியில கூவப் போகுது.

"மைதிலி.... அழாமை கதை "

"அண்ணை..." விம்மல்தான்.

"என்ன மைதிலி...? ஏதேன் பிரச்சினையே? என்னெண்டு சொல்லன் சாப்பாடு தாறாங்க ளில்லையே..?"

"சாப்பாடில்லாட்டியும் பரவாயில்லையண்ணை ஆனா... இஞ்சை நிக்கிற பெடியள் சேட்டை விடுறாங்க அண்ணை, அரியண்டப் படுத்துறாங் கள் காசு தரலாம் வா, வெளியில நியூஸ் போகாது வாவெண்டு..."மேலே தொடரமுடியாமல் விம்மி வெடித்தாள் மைதிலி.

செல்வம் மீண்டும் ஆத்திரமானான் எளிய நாயள் பொம்பிளைச் சகோதரங்களோட பிறக்காத நாயள் அவங்களைகண்ட துண்டமா......

போனில் காசு மட்டம் மிகமிக குறைந்திருந்தது.

"நான் சிலோனுக்குத் திரும்பிப் போறன். இந்த நரகத்துக்கை இருக்கேலாதண்ணை" அழுதாள்.

"மைதிலி, பயப்பிடாதை. வாற வெள்ளி உன்னை அனுப்புறதா ஏஜென்சிக்காரன் இப்பதான் சொன் னவன். பிறகு என்னோட தான் இருக்கப்போறாய் என்ன. உங்கை வேறை பொம்பிளையள் இருக் கினம் தானே?"

"ஒரு அக்கா தான் நிக்கிறா. அவவையும் நாளைக்கிரவு அனுப்பிப் போடுவாங்கள். பிறகு நான் தனியத்தான் எனக்குப் பயமாயிருக் கண்ணா" அழுதாள்.

"ஒண்டுக்கும் யோசியாதை. நல்லவங்களும் இல்லாமலே போகப்போறாங்கள் ஏதேன் நடந்தா நான் செத்....."

ரெலிபோன் கூவி தொடர்பு அறுந்து விட்டது. காலியாய் போன ரெலிகாட் வெளியே விழுந்தது. செல்வத்திடம் வேறு காட்டோ சில்லறையோ இல்லை.

கண்ணில் படிந்த ஈரத்தைத் துடைத்துக் கொண்டு பூத் கதவைத்திறந்து வெளியே வநதான். இதமான ஈரக்காற்று உடல் சூட்டுடன் மோதியது. கிளிசலான கறுப்புத் துணிக்குள்ளிருந்து வெளிச்சம் பாய்வது போல நட்சத்திரங்கள் மிக மிக நீண்ட இடைவெளி விட்டு மின்னின. கீழே தெருவிளக்குகள் மஞ்சள் பூசின. வேகமாய் பாய்ந்து வந்த கார்கள் சிவப்புக் காட்டி மறைந்தன. மற்றப்படி சுத்தமாய் இருள்.

றெஸ்ரோறன்ட் பின் கதவைத் திறந்து கொண்டு செல்வம் உள்ளே நுழைகையில் இவனையே எதிர்பார்த்து செவ்.....

"வெளியில் எப்படி நல்ல காலநிலையா?"

"அவசரமாக மொஸ்கோவுக்குத் தொலை பேசியில் தொடர்பு கொள்ள வேண்டியிருந்த தால்....."

"நான் உனக்குச் சம்பளம் தருவது இங்கே பிர்ஸா போடுவதற்கு"

"என்னுடைய தங்கை மொஸ்கோவில் நிற்கின்றாள். அவளுடன்......"

"வாயை மூடு. நாளை உன் தம்பி வந்து பாகிஸ்தானில் நிற்பான். அவர்களுடன் கதைப்பது தான் முக்கியம் என்றால் செய்த வேலைக்கு சம்ப ளம் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப்போ. இப்போது கூப்பிடாலும் இங்கு வந்து வேலை செய்ய நூறு தமிழர்கள் காத்திருக்கின்றார்கள்."

செல்வம் மறுபடி ஆத்திரமானான். ஏஜென்சிக் காரன் காசைத்தின்னுறான். இவன் ஆளையே தின்னுறான். இந்தாடா நீயும் உன்ரை வேலையும். இத்தினை வருசம் இதுக்கையே கிடந்து அவியி றதைக் கொஞ்சங் கூட யோசிச்சுப்பாக்காம நாய் மாதிரி குலைக்கிற உன்னட்டை ஒரு மனுஷன் வேலை செய்வானோ பேசாம ரோட்டிலையிருந்து பிச்சையெடுக்கலாம். நீயும் உன்ரை வேலையும். இத்தனையும் வந்து தொண்டையுடன் நின்றுவிட் டன. இவனோடை கொழுவி வேலையை விட்டா பதினையாயிரம் கடனை எப்படி அடைக்கிறது? ரெலிபோன் பில் என்னெண்டு கட்டிறது? வீட்டு வாடகை..? கரன்ட்?

"மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் வேலை நேரத்தில் இப்படி வெளியே போக மாட்டேன். இது தான் கடைசித் தடவை" கெஞ்சும் குரலில் சொல்லி விட்டு, திடீர் வேகமெடுத்து மாவை உருட்டி தட்டை யாக்கி, தட்டில் போட்டு, ரொமாற்றன் சோஸ் உற்றி கேஸ தூவி.....

செவ் அவ்வளவு கெதியில் விடுவதாயில்லை இத்தாலியிலும் டொச்சிலும் முடிந்தளவு கோபமாய் திட்டி தான் செவ் எண்டதை இன்னொரு முறை நிரூ பித்து விட்டுத்தான் போனான். செல்வத்துக்கு கண்களில் நீர் முட்டியது".

"நான் அப்பவும் சொன்னனான். செவ்வன் வந்தா கத்துவனெண்டு. நீயும் நல்ல நேரம் பார்த்துத்தான் போனடிக்கப் போயிருக்கிறாய்" என்று இப்போது தான் வாயைத் திறந்தான் அடுத்த மூலையில் நூடில்ஸ் தயாரித்துக் கொண்டிருந்த மணி.

"நாநென்ன செய்ய தங்கச்சியோடை கதைக்க ஏஜென்சிக்காரன் இப்பதான் நேரம் தந்தவன். அவள் அங்க பயந்து கொண்டிருக்கிறாள். நான் போனும் பண்ணாட்டி...."

"டேய் இப்பேன்ராப்பா அழுராய். செவ்வன் வந்தா திருப்பிக் குலைக்கப் போறான். வேலை யைக்கவனி".

செல்வம் எல்லாத்துக்குமாய் சத்தமில்லாமல் அழுதான். பிர்ஸாவுக்கு உப்பு கண்டபடி கூடியது.

"எப்பவாம் தங்கச்சியை அனுப்பிறது?" கேட்டபடி மணி செய்த நூடிலசைச் சோடித்து முன்னுக்கு அனுப்பினான். வாற வெள்ளியாம்"

"சரிகண்ணைத்துடை".

இருவரும் வேலையுடன் ஒன்றித்தார்கள். அடுத்த நாள் விடுமுறையாதலால் நிறைய டொச்சுக்காரர் நேரம் தப்பியும் சாப்பிட வந்து கொண் டேயிருந் தார்கள். பித்ஸாக்களும், நூடில்ஸ்களும் இடை வெளி யில்லாமல் பறந்து கொண்டிருந்தன. ஸிமி, சிக்கின், ஆட்டி சொக்கன் பப்பிறிக்கா... அயிட் டங்கள் மாற மாகிரெற்றா, கல்ஸோனா, பிராட்டா.... என்று பிர்ஸாவுக்கும் பெயர்கள் மாற...செல் வம் குசினியில் ஒரே மாவைத்தான் உருட்டி தட்டையாக்கி....

ஒரு மணியளவில் தான் வேலை முடிந்தது. செல்வமும் உடுப்பு மாற்றி வெளியில் வந்தபோது ஆரவாரம் கொஞ்சமாக அடங்கியிருந்தது. இளசு கள் பால்மாறிக் கட்டியணைத்துக் கொண்டு டிஸ் கோவுக்குப் போக,புகையடித்து மிதந்தபடி சிலது கள் திரும்பிக் கொண்டிருந்தன. அரசாங்கத்துக்குப் பிரச்சினை குடுக்காத இளம் சமுதாயம்.

"என்னடாப்பா கடுமையா யோசிக்கிறாய்?" கேட்டபடி மணி ஒரு சிகரெட்டை பற்றவைத் தான்.

"இல்லையடாப்பா..... உவ்வளவு தொகையா காசு மாறியாச்சு எப்படி திருப்பியடைக்கப் போறனோ?

"உனக்கென்னடாப்பா தங்கச்சி வாறதுக்கு முந்தியே சன்னுக்கு பேசி முடிச்சிட்டாய். உன்ரை சிநேகிதன் உன்னட்ட சீதனமே கேக்கப் போறான். பக்றியிலை வேலை செய்யிற இமிக்கிரேசன் மாப் பிள்ளை கலியாண வீட்டையும் தன்ரை செலவிலை தான் எப்படியும் நடத்துவான்- பிறகென்ன.?" புகை வளையங்களாகிய மேலேறி மறைந்தது.

" எல்லாம் சரியடாப்பா. மாறின காசை நான்தான் கட்டியாக வேணும். ஏஜென்சிக்காரன் இன்னும் என்னை விடுகிற மாதிரித் தெரியேலை.ம்...

"வீடு சேர்ந்ததும் முதல் நாளையான் சோறையும் கறியையும் ஆளாளுக்கு பிரட்டி அடித்துவிட்டு. படுக்கைக்குப் போகையில் விடியத் தொடங்கி விட்டது. இரண்டு நாள் கழித்து செல்வத்துக்கு போன் வந்தது.

"உம்மிட தங்கச்சிதான மொஸ்கோவில நிண்டவா?"

"ஓமண்ணை "

ஆளை யூகோவுக்கு கொண்ணந்திட்டம். நாளைக்கிரவு எப்படியும் ஆளை ஜேமனிக் குள்ளை கொண்டந்திடுவம். அதுக்கிடையில நீர் நான்தாற அட்ரசுக்கு போய் ஐந்நூறு டொலர் குடுத்து விடும்.

"அண்ணை நான் எல்லாக் காசும் கட்டியிட்டன். ரண்டு நாள் முந்திக்கூடி ரண்டாயிரம்மார்க் ஃபக்ஸில மொஸ்கோ வுக்கு அனுப்பினனான் ".

"அது மார்க்கண்டுவுக்கு. யூகோவுக்கு கொண்டு வந்தது மட்டுத்தான் அவர். இஞ்சையிருந்து ஜேம னிக்கு நான்தான் ஆக்களை அனுப்புறனான்.

"அண்ணை எல்லாத்துக்கும் சேர்த்து தானே மொத்தமாய் கட்டினது. இப்ப ஒவ்வொரு நாட்டி லயும் வந்து நிண்டு கொண்டு...."

"எனக்கும் உம்மோடை கதைச்சு மினக்கெட நேரமில்லை. கன இடங்களுக்குப் போன் அடிக்க வேணும். என்ன மாதிரி...? காசு கொண்டு போய் குடுக்கிறீரோ அல்லாட்டி...."

"கொண்டேக் குடுடக்கிறன்".

"நான் ஒருக்கா தங்கச்சியோடை கதைக்கலா மோ? "

"இப்ப கதைக்கேலாது. ஆள் வேறை றூமிலை நிக்குது.நீர் வேணுமெண்டா ஒரு பதினொரு மணிபோல நான்தார நம்பருக்கு அடியும்".

செல்வம் நம்பரைக் குறித்துக் கொண்டான். தலை வெடித்தது. ஏஜென்சிக்காரங்கள் எல்லா ரையும் நிக்க வைச்சுச் சுட வேணும். எளிய ராஸ்கலுகள். ரத்தம் வாற மாதிரி காசு கறக்கி றாங்கள். இப்ப உடன காசுக்கெங்கை போறது? போனில் கை வைத்தான்."

"அண்ணை நான் செல்வம் கதைக்கிறன். அவசரமாக கொஞ்சக் காசு மாறலாமோ?"

"அட சைஸ. ஒரு அஞ்சு நிமிஷம் முந்தி அடிக்காதையேன். இப்ப தான் சிவநாத் வந்து இருந்ததை வேண்டிக் கொண்டு போறான்.

அடுத்த முயற்சி.

"நான்செல்வம்கதைக்கிறன்".

"என்ன விஷயம்?"

"கொஞ்சக் காசு அவசரமாய் தேவைப்படுது. அதுதான்....."

"அவர் இப்ப வீட்டை இல்லை. அவுட்டொஃப்சிற்றிக்குப் போட்டார். ரண்டு நாள் கழிச்சு அடிச்சுப் பாருமன்"

"நாளைக்கு காசு தேவை. அதுதான்...."

"அவர் தான் வரவேணும் ".

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத செல்வம் மீண்டும்.....

"செல்வம் கதைக்கிறன் ".

"எப்படியடாப்பா சொல்லு. என்ன ஆளையே இஞ்சாலப்பக்கம் காணேலை. இண்டைக்கு வாவன்".

"தங்கச்சியின்ரை அலுவலாய் ஓடித்திரியிறன். ஒரு அவசர உதவியடாப்பா. காசு கொஞ்சம் அவசர தேவை".

"உந்தப் பகிடி தான் வேண்டாமென்கிறது. வேண்டின காசைத் திருப்பித் தாற மாதிரி தெரியேலை. அதுக்கிடையிலை...."

"என்னடாப்பா நான் எங்கையேன் ஓடப் போறனே? எல்லாத்தையும் சேர்த்து ஒண்டாய் தாறன். இப்ப ஒரு அவசர தேவை...."

"என்னட்டை ஒரு பெனிக்கும் இல்லை. காறொண்டு எடுத்ததிலை காசு எக்கச்சக்கமாய் முடிஞ்சு போச்சு"

முயற்சி திருவினையாக்கவில்லை. எல்லாருமே கையை விரிச்சாச்சு. எல்லாரிட்டையும் ஏற்கென வே மாறியாச்சு. இனி ஆரிட்டை கையேந்தலாம்?"

இரந்துண்டு வாழ்வாரே வாழ்வார்.

பதினொரு மணி வந்தது. மைதிலி, யூகோ செலவியா. போன். கிறீங்

"ஹலோ."

"நான் ஜேமனியிலையிருந்து செல்வம் கதைக் கிறன்.மைதிலியோடகதைக்கலாமே...?

தடபுடல் சத்தங்கள்.

"மைதிலி "

"அண்ணை...' சொல்லி வைத்தாற்போல் அழத் தொடங்கினாள்".

"என்ன நீ, எப்ப பார்த்தாலும் அழுது கொண்டு. இஞ்சை ரெலிபோன் பில் ஏறுது. ஏசுவதாக நினைத்துக் கொண்டாலும் செல்வத்தின் தொனி அப்படியாயில்லை.

"அண்ணை, என்னைக்கெதியாக்கூட்டிக்கொண்டு போ"

யூகோசெலவியா எங்க, ஜேமனி எங்க.

"மைதிலி ... இன்.... ரெலிபோன் கட் தொடர்ந்து முயற்சித்தான். இரைச்சல்தான் வந்தது.சண்டை நடக்கும் நாடு. அரை மணித்தியாலமாவது லைன் கிடைக்கப் போராடியாக வேண்டும். நேரமில்லை. வேலைக்குப் போக வேணும். பிந்தினால் செவ்வன் கத்துவான்.

மைதிலியை எந்தப் பிரதேசத்தில் வைத்திருக் கிறார்கள்? சேர்பியா? பொஸ்னியா? குரோசியா? எங்கை குண்டு வெடிக்குமோ? சீ..... அழிவை யோசிக்கக் கூடாது நல்லதே நடக்கும்.

"வேலைக்குப் போய், மாக் குழைத்து, உருட்டி, பிரட்டி.... வீட்டுக்கு வந்த போதும் யோசனைகள். காசுக்கெங்க போறது? எல்லாற்றை காலையும் பிடிச்சாச்சு. கடைசி யாயுள்ள வழி செவ்விடம் சம்பளத்தை அட்வான்ஸாய் கேட்பது. அவன் எமகாதகன். அஞ்சு பெனிக்குக் காண்டி அஞ்சு நிமிசமாவது ஏசுவான். எல்லாத்தையும் பொறுத்துக் கொள்ளத்தான் வேணும்.பொறுப்பார் பொறுக்கு வார்."

"படுக்கும் போது விடிந்துவிட்டது."

*இரண்டாம் பாகம்*

"பனஸொனிக்கில் குளிச்சால் குத்தாலம், கும்பிட் டால் பரமசிவம் வந்து கொண்டிருந்தது. மேசையில் மரியக்கோன், கோலா, ஆஷ்ட்ரே, கிளாசுகள், சிப்ஸ் மேசையெங்கும் சிந்தியிருந்தது. போதாதது க்கு சிகரெட் புகை, ஆளாளுக்கு எல்லா இடத்திலும் இருந்தார்கள்.

"வெளியே கோடை கால வெயில், விற்றமின் டி படுகின்ற பெண்களின் இடங்களை சன் ஜன்னலிலி ருந்து கண் கண்காணித்துக் கொண்டிருந்தான். கையில் சுத்த சைவமாய் கோலா.

"நான் கட்டன்றைற்றா சொல்லிப் போட்டன். ஸமர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடியுமட்டும் கஸவில நிக்கமாட்ட ணெண்டு'' என்றான் ராஜேந்தர்.

''ஏன்ராப்பா வேலை கூடவே?''

''வேலை என்னத்தை. அப்பிடி இப்பிடி உடுப்புகளோடை பெட்டையள் முகத்துக்குக் கிட்ட வந்து நிண்டா பில் எங்கை அடிக்கிறது. சாப்பாட்டையும் குடுத்து, காசையும் குடுத்து விட்டா கடைசியா கையாலதான் போட்டுக் கட்ட வேணும்''

''இந்த இடத்தில நாங்கள் ஆண்டவனுக்கு நன்றி சொல்ல வேணும்''.

''இப்படி உடுப்புகளைப் போடுற அறிவைத் தந்ததுக்கோ?''

''அஞ்சாறு மாதத்துக்கு மட்டும் சமரைத் தந்ததுக்கு. உனக்குச் சொன்னா என்ன மச்சான். வெளியில் போனா சற்பொடை திரும்பி வருவேனோ எண்டு ஐமிச்சமாய்க் கிடக்கு''

''இஞ்சையென்ன பெரிய ஸமர். மொஸ்கோவில்லை நிக்க வேணும்'' என்றபடி ராஜேந்தர், ஞானசிவத்தின் சம்பாஷணையில் குறுக்கிட்டான் கண்ணன்.

''சரி, தொடங்கியிட்டான் மொஸ்கோப் புராணம் பாட'' என்றான் ராஜேந்திரன்.

''ஆளை விடு'' நாலு விசயத்தைக் கேப்பம். பொதறிவு வளரும்''

கண்ணன் ஒரு மிடர் விட்டு, எரிவைச் சகித்துக் கொண்டு தொடங்கினான். மொஸ்கோவில் ஏஜென்சி கிருபை யால் ஒன்றரை வருடங்கள் தங்கி, ஜேமனி வந்து இரண்டு கிழமைக்கு மேலாகிறது.''

''அதை எப்பிடிச் சொல்லுறது. ஒரு சிகரெட் பெட்டியைக் காட்டியே ஒரு மொஸ்கோப் பெட்டையைக் கொண்டு போகலாம். அங்க அதுகள் காசுக்கும், சாப்பாட்டுக்கும் சரியாக் கஷ்ரப்படுதுகள். அதைச் சரியாப் பாவிக்கிறது எங்களை சிறீலங்கன் தான். எங்கடை சிலோன் ரூபாவை விட அவங்கட றூபிள் பெறுதி குறைவு தெரியுமே. நாங்கள் ஐஸ்கிறீம் வேண்டிக் குடிச்சாலே அதுகள் ஆவெண்டு பார்த்துக் கொண்டு நிக்குங்கள். எல்லாம் கொப்பச் செவ், ஜெல்சின்ரை புண்ணியம்''

''பொறு, பொறு, சிகரெட் பெட்டியோட பெட்டை டுக்கலா மெண்டுறியோ...?''

''என்ரை விசாவுக்கு மொஸ்கோ போகலா.மோ?'' விசாரித்தான் ஞானசிவம்''

''ஏனென்று சொல்லன்''

''இங்க சனம் முழுக்கத் தெரியும். உனக்கு மைதிலியைப் பேசியாச்சு என்று. இப்ப போய் ......''

''விளக்கமாய் கதைக்கேலாது''

''சிலோனில இருந்து டிரக்ராய் வாற பிள்ளை யைத்தான் நான் கலியாணம் செய்வன். மற்றது நீயும் நானும் எப்பவும் பிரென்ஸ்தான்''. செல்வம் போனை வைத்துவிட்டான். அதிர்ச்சி, ஆத்திரம், கோப வெப்பம் உடலில் பரவியது.

''பன்னாடைப் பரதேசி''

''என்னண்ணை ஏதேன் பிரச்சினையா?'' மைதிலி அண்ணனை நெருங்கி வந்தாள்.

எப்படி அவளக்குச் சொல்லுவது. ஒரு அண்ணை தங்கச்சியிட்டை.....

''என்னெண்டு சொல்லணண்ணா''

எப்பிடியோ எப்பவோ சொல்லியேயாக வேண் டும். அதை இப்பவே சொல்லிப் போடலாம். அவள் கனவு காணக்கூடாது. இப்பவே....சொன்னான்.

ஆனால் அவன் எதிர்பார்த்தபடி நடக்க வில்லை.

இதுக்கேன் யோசிக்கிறாய் அண்ணை. அந்தாள் இல்லையென்டாப் போல எனக்குக் கலியாணமே இல்லையோ? உன்ரை சினேகிதன் தன்ரை முடிவை இப்பவே சொன்னது நல்லதாய்ப் போச்சு. இப்படி யெல்லாம் ஐமிச்சப்படுகிறவன் நாளைக்கு கலியா ணம் கட்டினபிறகு, நான் தற்செயலாய் வெளியிலே போய் பஸ் இல்லாமல் பிந்தி வந்தாலும் ஆரோடை யன் படுத்திட்டு வாறன் என்று தான் நினைப்பான். உங்களைப் போல ஆம்பிளையள்..... தூ.....''

''மைதிலி துப்பியது சமூகத்தின் மேல் விழுந்தது''

*மூன்றாம் பாகம்*

....என்று கதையை முடித்தேன். திருப்தியாய் இருந்தது. கனகாலத்திற்கு பிறகு எழுதிய கதை இது. புலம்பெயர் இலக்கியத்தில் சேர்ப்பார்களா?

மைதிலி திட்டியது சமூகத்தின் மேல் விழுந்தது என்ற வரியின் மூலம் கதாசிரியர் சமூகத்தை நன்றாகச் சாடியுள்ளார் என்று எங்காவது ஒரு மூலையிலிருந்து ஒரு வாசகர் அப்பாவித்தனமாக கடிதம் போடுவார் பிரச்சினைக்குத் தீர்வு சொல் லாமல் தப்புபவன் எழுத்தாளனல்ல'' என்று யாரா வது முற்போக்குகள்



''சகலத்தையும் அனுபவிச்சுப் போட்டுத் தான் வந்திருக்கிறான். மொஸ்கோ பெட்டை யளை விடுங்கோடாப்பா. இஞ்சால வாறதுக் கெண்டு வந்து எங்கடை பெட்டையள்.... சாச்சா....''

''டேய்.... நிப்பாட்டாமச் சொல்லு'' எல்லோரும் ஆர்வமாயிருந்தார்கள்.''

''கலியாணம் பேசி வந்த கன பெட்டையள் அங்கேயே பெடியளைப் பிடிச்சு செற்றிலாயிட்டு துகள். சிலதுகள் வடிவாய் என்ஜோய் பண்ணிப் போட்டு இஞ்சை வந்து வேறை யாளைக் கலியா ணம் கட்டியும் இருக்குதுகள்''

சன் சட்டென்று திரும்பினான். மூளையில் ஏதோ வெட்டியது.''எல்லாப் பெட்டையளும் அப்படி யில்லை'' என்றான்.

''ஆ....சும்மா போடா, நானே எத்தினை பேரோட......'' கண்ணன் தொடர்ந்து சுவாரசிய மாக விவரிக்க, மற்றவர்கள் ஏக்கமாய்க் கேட்டுக் கொண்டிருக்க, சண் தனக்குள் சில கணக்குகள் போட்டுப் பார்த்துத் தீர்மானித்துக் கொண்டான். தொடர்ந்து மூன்று நாட்கள் அதையே யோசித்து, உறுதி செய்து கொண்டு, செல்வத்துக்கு போன் பண்ணினான்.

''என்னடாப்பா நான்கு நாலு உன்னைப் போனி லையே பிடிக்க ஏலாமல் போச்சு. எங்கே போய்த் தொலைஞ்சனீ. மைதிலியை நேற்றுப் போய்க் கூட்டி யந்திட்டன். வாவன் வீட்டை''

பிறகு ஆறுதலாய் வாறன். இன்னொரு முக்கியமான விசயம் உன்னோடை கதைக்க வேணும்''

''வீட்டை வந்து கதையேன்ராப்பா''

''இல்லை போனிலேயே கதைக்கிறதுதான் ஈஸி''

''மாப்பிள்ளைக்கு வெட்கம் வந்திட்டது போலை''

''எனக்கு இப்ப கலியாணம் செய்யிற பிளான் இல்லை''

''என்ன இருந்தாப் போல. சரி பிரச்சினை யில்லை. அதுவரைக்கும் மைதிலி பாஷை படிக்கட்டும்''

''நான் மைதிலியைக் கலியாணம் செய்யிற தாய் இல்லை''.

''டேய் பகிடி விடாதை''

''சீரியசாத்தான் சொல்லுறன்''

கோபித்தால் வாசகர்களை சிந்திக்க வைத்திருக்கிறேன் என்று வாசகர்கள் மேல் பாரத்தை இறக்கிவிடலாம்.

என்ன தலைப்பு வைக்கலாம்? சிம்பிளாய் இருக்கக் கூடாது. கவர்ச்சியாயும் இருக்க வேண் டும். ம்....''வந்தவள் வராமல் வந்தால் இதெப்படி தலைப்பு என்று யோசிக்கையில் போன் ஒலித்தது. ''ஹலோ நான் மணி கதைக்கிறன்''.

''என்ன இந்த நேரம்?''

''உனக்கு விசயம் தெரியாதே?'' செல்வத்தின் தங்கச்சி மைதிலி நித்திரைக் குளிசை போட்டிட் டாள். ஆள் இப்ப ஆஸ்பத்திரியிலை.படு சீரியஸ். இப்போதைக்கு ஒன்றும் சொல்லேலாது என்று டாக்டர் சொல்லிப் போட்டார்.

''ஏன் என்ன நடந்தது?''

''சண் அவளை முடிக்க மாட்டன் என்று சொன்னது தெரியும் தானே. அதோடை மைதிலி சரியாய்க் கவலைப்பட்டு போனாள். பிறகு செல்வம் கன சம்பந்தங்கள் பேசினவன். ஆனா கடைசி நேரத்தில அதுகள் சண் மாட்டன் என்ற கதையைக் கேள்விப்பட்டு, கிண்டிக் கிளறி அவனேன் மாட்டன் எண்டதையையும் கண்டு பிடிச்சு..... பிறகென்ன எல்லாச் சம்பந்தங்களும் இடையிலை முறிந்து கடைசியில இண்டைக்கு வந்து ஒரு பகுதி மாட்டன் என்று சொல்ல பொடிச்சி குளிசையை விழுங்கிப் போட்டுது.''


விசர் பெட்டை என்று சொல்லி விட்டு வேறு புதினங்களையும் அலசி விட்டு போனை வைத் தேன். மைதிலி ஆஸ்பத்திரியில் குற்றுயிராய் படுத்திருக்கும் காட்சி ஒருதரம் மின்னியது. சா.....அதை அழித்து விட்டு கதைக்கு வந்தேன். கதையில் வாற பெயர்களை மாற்ற வேண்டும். மைதிலியை ஜானகியா ...., செல்வத்தை சந்திர னாய்..... மணியை......

கதையை எங்க அனுப்பலாம்? வீரகேச ரிக்குத்தான் வாசகர்கள் கூட ஆனால் சரிநிகருக்கு ஒரு கிரெளட இருக்கிறது. என்ன புனை பெயரில் எழுதலாம். பீம்சிங்கிற்கு பாவன்னா வரிசைப் படங்கள் எல்லாம் வெற்றி. பாண்டியன்? பாக்கியநாதன்?? பார்த்திபன்???......

பார்த்திபன்

## விலையுயர்ந்த எழுதுசாதனம்

நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் அண்மைக்காலமாக மிகவும் சிலாகித்துப் பேசப்படுபவர் பி.ஜெயமோகன் என்னும் இளைஞர். தற்போது இவருக்கு 32 வயது. மிகவும் முதிர்ந்த எழுத்தாற்றல் உடையவர். இவர் வணிகப் பத்திரிகைகளிலேயே எழுத ஆரம்பித்தார். வணிகப் பத்திரிகைகளில் ஏராளமான கதைகள் வெளிவந்திருக்கின்றன. அதன் பின்பே சிற்றேடுகளில் எழுத ஆரம்பித்தார். தனது ஆரம்பகால எழுத்துக்களை முதிரா இளைஞனின் செயற்பாடுகளில் ஒன்றா கவே இவர் கருதுகிறார்.



பி.ஜெயமோகன் தமிழ் நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றாகிய தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். வணிக வியலை கற்ற இவர் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யாது ரெலிபோன் ஒபரேட்டர் ஆகப் பணிபுரிகின்றார் மலையாள மொழியிலும் புலமையுடைய பி.ஜெயமோகன் தமிழிலி ருந்து மலையாளத்திற்கும், மலையாளத்திலி ருந்து தமிழுக்கும் பரிவர்த்தனை செய்து கொடுத்திருக்கின்றார்.

புத்தக உருவில் வெளிவந்த இவரது முதலாவது படைப்பு 'ரப்பர்' எனப்படுகின்ற ஒரு நாவலாகும். 'ரப்பர்' நாவல் அகிலன் ஞாபகார்த்த நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்றது. 'ரப்பர்' வெளிவந்த உடனேயே தமிழின் குறிப்பிடத்தகுந்த படைப்பாளிகளில் ஒருவராக பி.ஜெயமோகனை இனங்காட்டி யது.

அடுத்ததாக வெளிவந்த 'திசைகளின் நடுவே' எனும் சிறுகதைத் தொகுப்பும், பல் வேறு சஞ்சிகைகளில் வெளியாகிய குறுநாவல் களும், சிறு கதைகளும் ஜெயமோகன் நவீன தமிழிலக்கியத்துக்கு ஆற்ற வேண்டிய பணி கள் குறித்து மிகவும் எதிர்பார்ப்புடன் கூடிய நம்பிக்கையைத் தோற்றுவித்தன.

'கதா' பரிசும், ஜானகிராமன் ஞாப கார்த்த விருதும் இவருக்குக் கிடைத்தன. 'கதா' பரிசை இவர் பெறக் காரணமாயிருந்த 'ஜகன் மித்யை' எனும் சிறுகதை, நவீன தமிழிலக் கியத்தின் மிகச் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாகும் என்பது எனது கருத்து.

ஜெயமோகனின் எழுத்துக்கள் பொதுவாக அபிவிருத்தி, இயந்திரமய மாக்கல் என்பவை தரும் எதிர்விளைவு களைப் பற்றி விசாரணை செய்கின்றன. 'ரப்பர்' நாவல் அதை துல்லியமாகக் காட்டுகின்றது. அதையும் விடமுக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, மரபுவழிப் படுத்தப் பட்ட இந்திய தத்துவஞானத்தின் மீது இவர் செய்யும் விசாரணை எனவும் எனக்குப் படுகின்றது.

இவ்வாண்டுக்கான சான்ஸ்கிரிட்டி விருது பி.ஜெயமோகனுக்கு வழங்கப் பட்டிருக்கின்றது. அந்தப் பரிசுப் பணமான 20,000 இந்திய ரூபாய்களில் தனது எழுத்து வேலைகளுக்கு உதவும் பொருட்டு ஒரு கம்பியூட்டர் வாங்கப் போவதாகச் சொல்கிறார். தனது புதிய நாவலுக்கு அது பிரயோசன மளிக்குமாம்.

ஜெயமோகன் எழுதும் புதிய நாவல் ஏற்கனவே 600 பக்கங்கள் வரை வளர்ந்து விட்டது. 3ம் நூற்றாண்டுக்கும் 12ம் நூற்றாண் டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரு கற்பனை இடமான விஷ்ணுபுரத்திலுள்ள கற்பனைக் கோயில் ஒன்றை மையமாக வைத்து இந்த நாவலைத் தான் எழுதிவருவதாக அறிவிக்கிறார். நாவலின் பெயரும் ''விஷ்ணுபுரம்''

''விஷ்ணுபுரம்'' விலையுயர்ந்த ஒரு எழுதுகோலைக் கோருகிறது போலும். பேனாவினால் எழுதுவதிலும்விட கம்பியூட் டரில் தட்டச்சு செய்து 'மெமரி'யில் வைத்துக் கொள்வதில் பல அனுகூலங்கள் உண்டு என்பது உண்மை தான். இலங்கை எழுத்தாளர்களும் இனிக் கம்பியூட்டர் பாவிப் பார்களோ தெரியாது. இலங்கையில் விலை குறைந்த இந்தியக் கம்பியூட்டர்கள் இன்னும் கிடைக்கவில்லை. விலைகூடிய ஜப்பானிய ,சிங்கப்பூரிய, அமெரிக்க, ஆங்கிலேய கம்பியூட்டர்களே கிடைக்கின்றன. ஒரு 1000 பக்க நாவலை எழுதவும் தொடர்ந்து பேணிப் பாதுகாக்கவும் உசிதமான ஒரு கம்பியூட்டர் விலை ஏறத்தாழ ''ஒரு லட்சம் ரூபாய்''. கோயில் கணக்கில் வாங்கினால் தான் உண்டு. இங்கு வழங்கப்படும் பரிசுகளோ 3000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை மட்டுமே. வேண்டுமானால் கொஞ்சம் பேப்பர் வாங்கலாம்.

# மறுபக்கம்

ஆழ்வார்க்குட்டி

## சர்வதேச ரீதியிலான ஒரு மாற்றுச் செய்தி ஸ்தாபனம்.

IPS (INTER PRESS SERVICE) எனும் செய்தி ஸ்தாபனத்தை பற்றி அனேகர் அறிந்திருக்க நியாயமில்லை. எம்மீது ராய்ட்டர், CNN, WTN, BBC முதலிய செல்வாக்கு மிகுந்த செய்தி ஸ்தாபனங்கள் முதலிலேயே ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விட்டன. இச் செய்தி ஸ்தாபனங்கள் அரசியல் இராணுவ விவகாரங்களுக்கே முதன்மை அளிக்கின்றன. அத்துடன் பலம்வாய்ந்த நாடுகளுக் கும், ஸ்தாபனங்களுக்கும் பிரச்சார பீரங்கிகளாகவும் இவை இயங்குகின்றன. இவை தரும் செய்திகளும் விமரிசனங்களும் அனேகமாக ஒடுக்குவோருக்கு அனுகூலமாக ஒருதலைப் பட்சமாகவே இருப்பதைக் கூர்ந்து அவதானித்தால் புரிந்து கொள்ளலாம். அத்துடன் இவை நிதி நிலைமையில் நல்ல ஸ்திதியிலும் காணப்படுகின்றன.

IPS இவற்றைவிட கொஞ்சம் வித்தியாசமானது. நிதிப்பற்றாக் குறையை இது எப்போதும் எதிர்நோக்குகிறது. IPS ஐ 3ம் உலக நாடுகளின் செய்தி ஸ்தாபனங்களில் ஒன்று என பொதுப்படை யாகவே கூறமுடி யும். இலங்கையில் மும்மொழிகளிலும் ஒரு சிறிய செய்திப் பத்திரிகையை மிகக் குறைந்த எண்ணிக்கையில் IPS வினியோகிக்கின்றது. தமிழில் மாதமொரு முறையும் ஆங்கிலத்தில் இரு வாரங்களுக்கொரு முறையும் வெளி வருகிறது. சிங்களப் பதிப்பு சிறிது காலத்துக்கு முன்பு இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது.

IPS இன் ஆசியப்பிராந்திய தலைமை அலுவலகம் பிலிப்பைன்ஸ் - மணி லாவில் இருக்கிறது. இலங்கையில் கொழும் பிலும், இந்தியாவில் புதுடில்லி முதலிய சில பிரதான நகரங்களிலும் இதன் அலுவலகங்கள் அமைந்துள்ளன. கொழும்பிலிருந்து சேகரிக் கப்படும் செய்திகள் புதுடில்லியில் பரிசீலிக்கப் பட்டு மணிலாவுக்கு அனுப்பப்படுகின்றன.

IPS அபிவிருத்தி, சுற்றுப்புறச் சூழல் பொருளாதாரம், வணிகம் என்பவற்றை யிட்டே அதிக கவனம் செலுத்துகின்றது. சமீப காலங்களில் மிக நல்ல கட்டுரை களையும், தகவல்களையும். IPS செய்தி இதழ் மூலமாக என்னால் வாசித்து அறிந்து கொள்ள முடிந்தது.

வேறு பல நாடுகளில் செய்திப் பத்திரிகையை மட்டுமல்லாது தொலைக்காட்சி சேவையினையும் IPS வழங்கி வருகிறது. கொழும்பு அலுவலகத்தில் ரீட்டா செபஸ் ரியன், திரு. C.நாகேந்தரா ஆகியோர் பணி புரிகிறார்கள். தொடர்பு கொள்ள விரும்புகிற வர்களுக்கு முகவரி கீழே தரப்படுகிறது.

Mr. C.Nagendra,
6, Francis Maha deva Avenue,
Colombo - 4.

வீரகேசரி, தினகரன் முதலிய செய்திப் பத்திரிகைகளும் ஆங்கிலப் பத்திரி கைகளும் IPS செய்தி இதழிலிருந்து விஷயங் களை சிறிது சுருக்கி மறுபிரசுரம் செய்வது முண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "புலிகளுக்கு மட்டுமல்ல ஜேவிபிக்கும் எம்மிடம் மருந்துண்டு!"

-அனுருத்த ரத்வத்த

**"எந்தவொரு புவியியல் பிரதேசத்தையும் நாங்கள் விட்டுக்கொடுக்கவோ, கொடுத்துவிடவோ இல்லை; பூநகரி முகாமை 600 மீற்றர் பின்னால் நகர்த்தியதைத் தவிர நாங்கள் எதுவும் கொடுத்துவிடவில்லை. தற்போது மீண்டும் அதனை வழமைக்கு கொண்டுவந்து விட்டோம்".**

மே 12ஆம் திகதி பிரதி பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்தை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார். நாங்கள் எதுவும் கொடுத்துவிடவில்லை என சிங்கள மக்களுக்கு ஆறுதல் கூறியதன் மூலம் எதுவும் கொடுத்துவிடவில்லை, கொடுத்துவிடவும் மாட்டோம் என்பதையும் ஒப்புக்கொண்டுவிட்டார். நாங்கள் யார் என்பதை உண்ர்ந்து கொள்ளுங்கள் என உறுதியாக சொல்லி வைத்துவிட்டார்.

இலங்கையில் பேரினவாத அரசியல் தலைதூக்கிய பின் ஆளும் பேரினவாத அதிகாரத்துவத்தைக் கைப்பற்றும் அரசாங்கங்களில் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கும் சகலரும் பேரினவாத அரசாங்கத்தின் ஏக பிரதிநிதிகளாகவே தங்களை இதுவரை காட்டி வந்திருக்கிறார்கள். குறிப்பாக, 1977களுக்குப்பின் ஒரு அத்துலத்முதலி.... ஒரு ரஞ்சன் விஜேரத்ன அந்த வரிசையில் இன்று அனுருத்த ரத்வத்த.

இவர் கடந்த மார்ச் மாத இறுதியில் கீழ் வருமாறு உரையாற்றியிருந்தார்.

**"யுத்தத்தின் மூலம் சமாதானத்தை அடைவதே அரசின் உறுதியான நோக்கம். அதற்காக எனது அமைச்ச சிருடையை கழற்றி எறிந்து விட்டு போர்ச்சிருடையை அணியவும் நான் தயார். நாட்டின் பிரதான இனத்தின் உரிமையை பாதுகாக்க நாங்கள் எல்லோரும் கை கோர்ப்போம்."**

இதுபற்றி சரிநிகரிலும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அனுருத்த ரத்வத்த இதற்கு முன் இராணுவத்தில் கடமை புரிந்தவர். கேர்ணல் பதவிவரை உயர்தர பதவி வகித்தவர். சிறிமா பண்டாரநாயக்காவின் ரத்வத்த பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் சிறிமா பண்டாரநாயக்காவின் தம்பி - சந்திரிகாவின் மாமனார். தமிழ் மக்களுக்கு எல்லாம் தருவோம் எனக்கூறி எதையுமே தராத பிழைப்புவாத அரசியலில் ரத்வத்தை பரம்பரைக்கு நிரந்தர இடமுண்டு. பண்டாரநாயக்க - செல்வநாயகம், சிறிமா - சாஸ்திரி, சந்திரிகா - பிரபாகரன் ஒப்பந்தங்கள் என்று அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

பேச்சுவார்த்தை குழம்புவதற்கு முன்னரே போருக்கான தயாரிப்பு வேலைகளை செய்து கொண்டும், இனவாத பிரச்சாரங்களை மேற்கொண்டும் வந்த அனுருத்த ரத்வத்த கடந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது போர் தொடர்பாகவும், பாதுகாப்பு செலவீனங்கள் பற்றியும் வைத்த கருத்துக்களைக் கீழே தருகிறேன்.

இது 1989 ஆம் ஆணடு டிசம்பா 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை. மேலும் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது உரையாற்றியது இது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பி. இயக்கத்தை அடக்குதல் எனும் பேரில் பெரும் அரசியற்படுகொலைகளை புரிந்தும் அநியாயமாக அப்பாவி இளைஞர்களை கொன்று குவித்தும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த நேரமது.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போது தான் இந்த பாதுகாப்பு செலவு நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 5.6 % ம் பாதுகாப்பு நிதிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

"தலைவர் அவர்களே..... 1990 ஆம் ஆண்டுக்கான இவ்வரவு செலவு திட்டத்திலும் 5.6 % வீதம். பாதுகாப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. தற்போது நாடடில் ஏற்பட்டிருககிற பொருளாதார சூழ்நிலையில் இந்தளவு பாரிய நிதி ஒதுக்கீட்டை பாதுகாப்புக்காக ஒதுக்குவதானது நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பாதிப்பாக அமையும் என கூற முடியும். ஆனால், நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலைமை காரணமாக அந்தளவு நிதியை ஒதுக்காமலிருக்க முடியாது என்றும் ஒதுக்கியே ஆக வேண்டும் என்றும் அரசாங்கம் சொல்லுகிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளுக்கான தீர்வை யுத்தத்தின் மூலம் தான் அடைய வேண்டுமா என எங்களுக்கு கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளின் யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு அப்பிரச்சினைகளுக்கான மூலகாரணங்களைத்தேடி அக்காரணங்களுக்கான அரசியல் ரீதியிலான, பொருளாதார சமூக முறைகளில் தீர்வு வழங்குவதைப் பற்றி ஏன் சிந்திக்கிறீர்கள் இல்லை என்ற கேள்வி எழும்பியுள்ளது. இந்நாட்டின் பொருளாதார நிலைமை இந்தளவு பின் தங்கியிருக்கிற போதும் கூட இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கி யுத்தத்தின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதென்பது சரிதானா என்பதை அரசு சிந்திக்க வேண்டும்.....

இந்நாட்டில் ஏற்படடிருக்கிற பிரச்சினைக்கு தீர்வொன்றைக்காண முயலுங்கள். இப்போது ஒதுக்கப்பட்டுள்ள பாரிய நிதி ஒதுக்கீட்டை நாட்டில் இருக்கின்ற ஏனைய பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பாவியுங்கள். யுத்தத்தின் மூலம் தீர்வொன்றை பெற முடியாதென்பதை அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.....



யுத்தம் தொடங்கு முன்னமே ஆர்ஜன்டீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட போர் விமானத்தை அனுருத்த பார்வையிடல்

தேசிய புலனாய்வுப் பிரிவு கடந்த ஏழு வருட காலமாக சரியானதாக இயங்கியதாகத் தெரியவில்லை. அந்நிறுவனத்திற்கும் இம்முறை இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கியிருப்பது தேவைதானா?.........

கடந்த நாற்பது வருட காலமாக இந்த ஜனநாயக சட்டத்தினுள் (Frame) ஐக்கிய தேசியக்கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குமே போட்டியிருந்தது இந்நிலைமை நாட்டில் இருக்கும் போது இந்நிறுவனம் நாட்டின் சரியான நிலைமையைத்தான் தங்களுக்கு அறியத்தந்தார்களா? அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நடவடிக்கைகளைப் பற்றித் தேடிக்கொண்டிருந்தார்களா....?

இப்படியான நிலையில் கடந்த காலங்களின் ஏற்பட்ட சம்பவங்களின் பின் இப்போது எல்லாம் முடிந்துவிட்டது என பாதுகாப்பு பிரதி அமைச்சர் அறிவித்தார். Match is Over என அவர் ஆங்கிலத்தில் கூறினார்..... அந்த 'மெச்' முடிந்தது என்றால். அந்த போட்டி முடிந்து விட்டது என்றால் இன்னமும் பாரிய அளவிலான கைதுகளை மேற்கொள்வது ஏன்?

நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலை எனக் கூறி உடனடியாக மூன்று வாரங்கள் அல்லது ஒரு மாத பயிற்சியை மாத்திரம் வழங்கி துப்பாக்கியையும் கையில் கொடுத்து பெருமளவு அதிகாரங்களையும் வழங்கி வெளியனுப்பப்படுவோரால் சிலவேளை விரும்பத்தகாத சம்பவங்கள் இடம் பெற வழியுண்டு....


தெற்கில் பல பிரச்சினைகள் தோன்றியது. தாங்கள் கூறுவது போல அப்பிரச்சினை கூடிய விரைவில் தீர்க்கபபட வேண்டும் என்பதை நாங்களும் விரும்புகின்றோம். ஆனால் அப்பிரச்சினைகளுக்கு யுத்தத்தீர்வு, தீர்வு ஆகாது. அரசியல, சமூக, பொருளாதார ரீதியில தீர்க்க முடியாவிட்டால் எதிர்காலத்தில் நங்கள் இன்னும் பெரிய பெரிய விளைவுகளை யுத்தம் மூலம் சந்திக்க வேண்டியேற்படும்.....

'பிரா', கொலகொட்டி', 'களுகொட்டி', களுபளல்லு' என்கின்ற பேர்களில் பல ஆயுதக்குழுக்கள் இயங்கி வந்துள்ள போதும் அவை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமற்ற ஆயுதக்குழுக்கள். இவ்விடயத்தை பாதுகாப்பு பிரதி அமைச்சரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். அப்படியிருக்கும் போது அவற்றை இல்லாது செய்வதற்கு இன்னமும் நடவடிக்கை எடுக்காதது ஏன்?


***ரஞ்சன் விஜேரத்ன:*** நீங்கள் தான் அவ்வாறான குழுக்கள் இருப்பதாகக் கூறிக்கொள்கிறீர்கள். அப்படி இருப்பதாக நானென்றால் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி இருந்தால் அதனை இல்லாமல் செய்வோம்.

***அனுருத்த ரத்வத்த:*** கௌரவ தலைவர் அவர்களே. கடந்த காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களை தெளிவாக உணர்ந்து யதார்த்தத்தை - உண்மை நிலைமையை கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் மீண்டும் அவை நடக்காதிருப்பதற்கான வேலைத்திட்டம் அமைப்பது அத்தியாவசியமானது. அவசியமான நேரத்தில் யுத்தத்தின் மூலமல்லாது வேறு முறையில் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தால் இன்று இப்படியான பொருளாதார நிலைமைக்களுக்குள்ளும் - இந்நடவடிக்கைகளுக்கு பெரிய தொகை - நூற்றுக்கு 5.6% பணத்தை ஒதுகக வேண்டியேற்பட்டிருக்காது. சரியான அரசியல் தீர்வொன்றை மேற்கொண்டால் மட்டுமே இப்பிரச்சினைக்கு முடிவு காணலாம் எனக்கூறி விடைபெறுகிறேன்".

**"யுத்தத்தின் மூலம் சமாதானத்தை அடைவதே அரசின் உறுதியான நோக்கம். அதற்காக எனது அமைச்சு சீருடையை கழற்றி எறிந்து விட்டு போர்ச்சீருடையை அணியவும் நான் தயார். நாட்டின் பிரதான இனத்தின் உரிமையை பாதுகாக்க நாங்கள் எல்லோரும் கை கோர்ப்போம்."**



ரஞ்சன் விஜேரத்ன



அனுருத்த ரத்வத்த

இந்த அனுருத்த ரத்வத்தவின் அன்றைய முகம் மேலே காட்டப்பட்டுள்ளது. இன்றைய முகத்தை இன்று நாம் கண்டு கொண்டிருக்கின்றோம்.

இதே நடவடிக்கைளை ஐ.தே.க. செய்த போது இனவாதமென்றும், யுத்த வெறியர்கள் என்றும் மனித உரிமை மீறல் என்றும் பொ.ஐ.மு. பிரச்சாரம் செய்தது - கண்டனங்களை எழுப்பியது. இன்று மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை என்னவென்பதோ தெரியவில்லை!

மேற்படி உரையில் ஜே.வி.பியைப் பற்றியும் குறிப்பிடுகிறார். **தெற்கில் ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கு தீர்வு ஆயுதத்தீர்வல்ல** என்றிருக்கிறார்.

ஆனால் அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அனுருத்த '**ஜே.வி.பி. தனது பழைய நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் அதற்கும் என்னிடம் மருந்திருக்கிறது'** எனக்கூறியிருப்பது, அனுருத்த ரத்வத்தவின் பிழைப்புவாத அரசியலை அப்படியே வெளிக்காட்டுவதாக இருக்கிறது. அவர் கூறிய மருந்து என்ன என்பது தெரியாத தொன்றல்ல.

கடந்த மேதினத்தன்று கொழும்பில் நடத்தப்பட்ட ஜே.வி.பி. கூட்டத்தில் உரையாற்றிய ஒருவரது உரை ஞாபகத்திற்கு வருகிறது. அவர் சொன்னார்:

"உங்களுக்கெல்லாம் ஒன்றைக் கூறலாம் உங்கள் முகங்களை நீங்கள் கண்ணாடியில் பார்த்ததுண்டா? அதிற்தெரியும் அவலட்சணங்களை பார்த்ததுண்டா? இவற்றை உங்களிடமே நீங்கள் கேளுங்கள். நிச்சயம் உங்களுக்கு அவை உறைக்கப்போவதில்லை என்பதை நாங்கள் அறிவோம். ஏனென்றால், நீங்கள் யார் என்பதை புதிதாக சொல்லித் தெரிய வேண்டியதில்லையே."

என்.எஸ்.குமரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரே ஜனாதிபதியின் கீழ் இரு பாராளுமன்றம்

ஒரே ஜனாதிபதியின் கீழ் தமிழ்ப் பாராளுமன்றமொன்றையும், தமிழ்ப் படையொன்றையும் நடத்திச் செல்ல இடமளிப்பது வட - கிழக்கு இனப்பிரச்சினைக்கு உள்ள ஒரே தீர்வாகும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர் ஹொங்ஹொங்கில் நடைபெற்ற தெற்காசியப் புத்திஜீவிகள் மாநாட்டில் யோசனை சமர்ப்பித்துள்ளார்.

தெற்காசியப் புத்திஜீவிகள் மாநாடு ஹொங்ஹொங்கிலுள்ள "இலங்கை நண்பர்கள்" அமைப்பினால் நடத்தப்பட்டதுடன் அங்கு அவ்யோசனைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தரால் முன்வைக்கப்பட்டதாக ஏப்ரல் 27 திகதிய பரிசில் இருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகை தெரிவிக்கிறது.

ஹொங்ஹொங்கில் செயற்படும் "Friends of Srilanka" அமைப்பின் நெறிப்படுத்தலில் இந்திய உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி கிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் தென் ஆசியாவிலுள்ள புத்திஜீவிகள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் அவுஸ்ரேலியா வெளிநாட்டு அமைச்சரின் பிரதிநிதியொருவரும், பாகிஸ்தானின் வைத்தியக் கலாநிதி பட்டேல், தமிழ் நாட்டின் ரீ.என். கோபாலன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான வைத்தியக் கலாநிதி சதானந்தன், இலங்கையின் நீதிக்கும், சமாதானத்திற்கமான அமைப்பின் பிரதிநிதி செல்வி கன்னியாவும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைச் சிக்கலுக்குத் தீர்வு காணுவதில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் அரசினதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சமாதான நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடும் யோசனையை எல்.ரி.ரி.ஈ. முக்கியஸ்தரினால் முன்வைககபபடடது.

எல்.ரி.ரி.ஈ.யினால் முன் வைக்கப்பட்ட இவ்வாலோசனையை செயற்படுத்துமாறு தெற்காசிய நாடுகள் இலங்கை அரசுக்கு அறிவிக்க வேண்டுமெனக் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பொலிஸ் நாய்கள்!

தமிழீழ விடுதலைப் புலிகளினால் உள்நாட்டு இறைவரித்திணைக்களக் கட்டிடம் குண்டு வைத்துத் தகர்க்கப்படுமெனப் பரவியிருந்த தகவல் காரணமாக அக்கட்டிடத்தில் குண்டு உள்ளதா எனத்தேடிக் கண்டு பிடிக்கவெனப் பயிற்சியளிக்கப்பட்ட பொலிஸ் நாய்கள் தற்போது அடிக்கடி ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்காவின் அமைச்சும் உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடத்திலேயேயாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக யுத்தம் புரிய அரசாங்கத்திற்குத் தேவையான ஆயுத உபகரணங்கள் உட்பட ஏனையவற்றை விலைக்கு வாங்கத் தேவையான பணத்தை உள்நாட்டு இறைவரித் திணக்களமே வழங்குகிறது.

## கொழும்பைத் தாக்க யாழ்ப்பாணத்தில் பயிற்சி

கொழும்பில் கடுந்தாக்குதலை நடாத்தும் நோக்குடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களினால் உளவாளிகள், தற்கொலைப் படையினர் உட்படக் குண்டு நிபுணர்களுக்கும் பல்வேறு பயிற்சிகள் தற்போது யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவதாக இரகசிய தகவல் பாதுகாப்பு பகுதியினருக்குத் தெரியவந்துள்ளது.

கொழும்பிற்கு முன்பு வந்த குண்டு நிபுணர்கள், தற்கொலைப் படையினர், உளவாளிகள் கூட்டம் கூட்டமாக இராணுவத்திடமும், பொலிஸாரிடமும் அகப்படுவதால் இன்னொரு கோஷ்டியைக் கொழும்பிற்கு அனுப்பும் நோக்கத்துடனேயே இப்பயிற்சியளிக்கப்படுவதாகப் பாதுகாப்பு பிரிவுப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

## புலிகளின்...

இலங்கை அரசு கோரினால் தமது நாடுகள் இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கத் தயார் என அவ் அதிகாரிகளினால் உரிய அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை குறிபார்த்து ஏவக்கூடிய எவுகணைகள் சில தற்போது புலிகள் இயக்கத்திடம் உள்ளதாக கூறப்படுகிறபோதும் இவ்வாறான நீண்ட தூர ஏவுகணைகள் எதுவும் புலிகள் இயக்கத்திடம் இல்லையெனப் பாதுகாப்பு தகவல் வட்டாரங்கள் மறுக்கின்றன.

## கடற்பரப்பில்...

ளின் நீர் மூழ்கி (Sub Marine) களை முன் கூட்டியே இனங்காணக்கூடிய றேடார் பூட்டப்பட்டுள்ள நவீன கடற்படைப் படகுகளை இந்தப்படை அணி கொண்டிருக்குமெனவும் இந்திய உள்துறைப் பாதுகாப்புத் தகவல்துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

மே 15ம் திகதி முதல் இந்திய இலங்கைக் கடற்பரப்பில் இரவு, பகலாகக் காவல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க இந்தியக் கடற்படை தயாராக உள்ளது. அதே சமயம் இக்காவல் நடவடிக்கை இதற்கு முன் எப்போதுமில்லாதவகையிலான வழமைக்கு மாறான நடவடிக்கை என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க 'சாாக' மாநாட்டில் கலநது கொள்ள புதுடில்லி சென்ற போது இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளிலும் இந்திய - இலங்கைக் கடற்பரப்புத் தொடர்பாக கூடிய கவனத்தைச் செலுத்துமாறு இந்தியப் பிரதமரிடம் கோரியிருந்ததாக ரொயிற்றர் செய்திச் சேவை தெரிவித்திருந்தது.

இவ்வாறான ஒத்துழைப்பொன்று இந்தியக் கடற்படையிடமிருந்து கிடைக்குமாயின் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒழிப்பது இலகுவாகும் என இலங்கை கடற்படையினாலும், பாதுகாப்பு சபைக்கூட்டங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## யுத்தத்திற்கு...

ளுடன் கப்பல் ஒரு மாதத்து மேலாக கொழும்பு துறைமுகத்தில் தரித்துநிற்கிறது

இவ்வாறு பொலிஸ், இராணுவ, விமானப்படை, கடற்படை வீரர்கள் தமது கடமைகளுக்கு செல்லாமல் பின்நிற்கும் வேளையில் பொலிஸாரும், முப்படையினரும் யுத்தம் செய்வதற்கு தயாராகவும், உஷாராகவும் இருப்பதாக இராணுவ தளபதியும் பாதுகாப்பு அமைச்சரும் சரடு விடுவதை என்னவென்பது?

## 1993இல்...

பாதிக்கப்பட்ட மக்களை, மரணத்துள் வாழ்வு நடத்தும் சாதாரண மனிதர்களைப் பற்றிய நாவல்தான் இது. அவ்வகையில் இந்த நாவல் சமகால யாழ்ப்பாண வாழ்க்கையைப் பற்றிய ஒரு உண்மையான பதிவு. மிகவும் யதார்த்த பூர்வமாக ஆசிரியர் இன்றைய சூழலைப் பதிவு செய்திருக்கிறார். இது மிகவும் எளிமையான ஆனால் அதேசமயம் சமகால முக்கியத்துவம் உடைய ஒரு படைப்பு ஆகும். இந்த ஆண்டில் வெளியான நாவல்களுள் ஒரு உண்மையான சமகால வரலாற்று நாவல் என்று சொல்லக் கூடிய தகுதி இந்த நாவலுக்கே உண்டு எனலாம்.

இதனை சமகால அரசியல் நாவல் என்றும் கூறலாம். ஆனால் இந்த நாவலில் ஓர் இடத்திலும் வெளிப்படையாக அரசியல் பேசப்படவில்லை. தமிழ்த் தேசியவாதக் கருத்தியல் இந்த நாவலுக்குப் புறம்பானதல்ல; ஆனால் அது இந்த நாவலுக்குள் எங்கேயோ கரைந்து ஒளித்துக்கொண்டிருக்கிறது. இந்த நாவலில் வெளிப்படையாக இருப்பது யாழ்ப்பாணத்தின் இன்றைய வாழ்க்கை அனுபவம், பாதிக்கப்பட்ட மனிதர்கள் தாங்கள் வாழ்க்கையை எதிர்கொள்ளும் விதம் அவ்வளவுதான். இதில் ஆசிரியரின் இலட்சியவாதம் இல்லாமல் இல்லை. அதனை நாவலின் கதாநாயகன் (?) சதானந்தத்திடமும் அவனது மைத்துனன் தேவாவிடமும் காணலாம். ஆனால் இந்த இலட்சியவாதம் அவர்களின் வாழ்க்கை யதார்த்தத்தின் ஊடாக வெளிக்கிளம்பி வருவது. அவர்களின் யதார்த்தத்தின் பிரிக்க முடியாத பகுதியாய் இருப்பது.

இந்த நாவலில் காதலும் இருக்கிறது. அது மிகவும் இயற்கையான கிராமப்புறத்து ஊமைக்காதல். அதில் மிகை உணர்ச்சிக்கு இடம் இல்லை. இதில் தியாகமும் இருக்கிறது. அதுவும் மிருக உணர்ச்சிப் பாங்கான தியாகம் அல்ல. தவிர்க்க முடியாத வாழ்க்கை நிர்ப்பந்தத்தில் நிகழ்வது; அதனால் அதிக சோகம் தருவது. ஆயினும் தாகம் ஒரு மகத்தான படைப்பு என்று கருதத் தேவை இல்லை. சமீபகாலத்தில் வெளிவந்த - சமகால அனுபவத்தின் ஒரு பகுதியைப் பற்றிய உண்மையான சித்திரம் என்ற வகையில் முக்கியத்துவம் உடையது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நாவல் சித்திரிக்கும் இன்றைய யாழ்ப்பாண அவலம் இன முரண்பாட்டினதும் யுத்தத்தினதும் விளைவு என்ற வகையில், இன மோதலுக்கும் யுத்தத்துக்கும் எதிரான உணர்வை நம்முள் கிளரச் செய்வதனால் சமாதானத்துக்கான தேடலில் முழுத் தேசமும் ஈடுபட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், இதன் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கின்றது. இது உடனடியாக சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டிய ஒரு படைப்பாகும்.

தாமரைச்செல்வி ஓர் இளம் எழுத்தாளர் எனினும் எமது 'சிரேஷ்ட நாவலாசிரியர்கள்' இவரிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பல சங்கதிகள் உள்ளன.

தாமரைச் செல்வியின் தாகம் 1993ல் வெளிவந்த ஈழத்து நாவல்களுள் சிறந்தது என்ற விருதைப்பெறுகின்றது. நாவலாசிரியைக்கு எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

## இலங்கைக்கு...

இந்தியாவிடமிருந்து மட்டுமல்ல, ஏனைய மேற்குலக நாடுகளிலிருந்தும் யுத்த உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள இலங்கை அரசு தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் எந்நாட்டிலிருந்தும் மனித வளத்தை உதவியாகப் பெறுவதில்லை எனவும் முடிவெடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

நிலைமை உக்கிரமடைந்தால் மட்டும் இந்தியப் படையின் ஒத்துழைப்பை நிபந்தனையின்றிப் பெற்றுக்கொள்ளலாம் என்று இலங்கை அரசு கருதுவதாகவும் தெரியவருகிறது.

இது பற்றி பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி அடங்கிய ஒரு கூட்டத்தின் போது இந்தியப்படை வந்தால் இலங்கையில் இந்தியா நிரந்தர தளம் அமைத்து விடக்கூடும் என படை அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்திருந்ததனாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டதாம்.

அமெரிக்க யுத்த உதவிகளைப் பெற்றுக் கொள்வது பற்றிப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசினுள்ளேயே எதிர்ப்புக் கிளம்பியுள்ளதால் அமெரிக்க உதவியைப் பெற்றுக்கொள்வதை இரண்டாம் கட்ட நடவடிக்கையாகப் பரிசீலிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கிடையில் கடந்த 15ம் திகதி (வெசாக்தினத்தன்று) கொழும்பு துறைமுகத்துக்கு பெருமளவு ஆயுதங்கள் கப்பலில் வந்து சேர்ந்துள்ளது. இதன் காரணமாக 16ம் திகதி கொழும்பு துறைமுகத்தில் தொழில் புரிந்த சிவிலியன்கள் உள்ளேவர அனுமதிக்கப்படவில்லை. இந்த ஆயுதங்கள் மேற்குலக நாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

## அனைவருக்கும்...

பதும் அவர்களின் விமர்சனத்திற்குள்ளாகியிருப்பதாகத் தெரியவருகிறது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பெருந்தெருக்கள், மின்சார, எரிபொருள் அமைச்சராகவும் இருக்கிறார். நாட்டின் பாதுகாப்பு அவரது அடிப்படை விடயமாக ஆக்கப்பட்டு ஏனைய விடயங்களை அவரிடமிருந்து அகற்றுவது அல்லது வேறு பொருத்தமான நபரொருவரைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக முழுநேரமாக ஆக்குவது உகந்தது என்பது அவர்களின் கருத்தாகும்.

இவ் யோசனைகளை அரசிற்கு முன் வைக்கும் முன்னாள் இராணுவத் தளபதிகள், இன்றைய முப்படைத் தளபதிகளுடனும் இது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிகிறது. முப்படைகளின் தளபதிகள் அரசியல்வாதிகளை நெருங்கிப் பழகக்காட்டும் அக்கறையைப் பலமான இராணுவ ஆலோசனைச் சபையொன்றை ஏற்படுத்துவதனூடாக இல்லாதொழிக்கலாமெனவும், அதேபோல் ஆயுதக் கொள்வனவுகளின் போது நடைபெறும் ஊழல் மோசடிகளைக் கூட அதனூடாக இல்லாது செய்ய முடியுமென்பது அவர்களது கருத்தாகவுள்ளது.

தாம் கருதும் சில யோசனைகள் பகிரங்கமாகக் கலந்துரையாட முடியாதவையாதலால் அவ் அனைத்து விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடாதத் தீர்மானித்திருப்பதாகவும் அந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் மறுத்தால் அவற்றை மக்கள் முன்னிலையில் கொண்டு வரவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமது தயாரிப்புக்களை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் உடன்பட்டால், எழுந்துள்ள ஸ்திரமற்ற நிலைமையை முழுமையாகவே மாற்ற நிலைமையைக் கட்டுப்படுத்த தம்மால் முடியுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## போரும்...

அந்நியப்படுத்தி, தமது தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தலாம் என்று அரசு எதிர்பார்க்கிறது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும், சமஷ்டி அமைப்பு முறை, மற்றும் வடகிழக்கு இணைப்பு என்பன தொடர்பாக ஐ.தே.கவின் ஆதரவு அரசுக்கு கிடைக்குமா என்பது சந்தேகமே என்றும், யுத்தம் தொடங்கியுள்ள ஒரு சூழலில் இத்தகைய அறிவிப்பு பொ.ஐ.மு.வுக்குள்ளேயே சிக்கலை தோற்றுவிக்க கூடும் என்றும் அரசியல் அவதானிக்ள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி அவர்களுக்கு, இத்தீர்வு திட்டத்தை அறிவிக்க முன்பே வாய்ப்பு இருந்த போதும் அதை செய்யாததே இன்றைய யுத்த நிலைக்கு காரணம் என்று குற்றம் சாட்டும் அரசியல் விமர்சகர்கள், புலிகளுடன் செய்யும் யுத்தம், எத்தகைய அரசியல் தீர்வையும் நடைமுறைப்படுத்த அனுமதிக்காது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, சமஷ்டி அரசியல் தீர்வு நடைமுறைக்கு வர வேண்டுமானால், முதலில் அரசு இனமதச் சார்பற்றதாக அறிவிக்கப்படுதல் மிகவும் முக்கியமான நிபந்தனையாக உள்ளது என்ற கருத்தை சரிநிகர் கூறிவைக்க விரும்புகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

# அரபாத் நகரில் ஆரம்பம்

மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளிலேயே இப்போது அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இத்தாக்குதல்கள் புலிகளுக்கு எதிராக உள்ளனவே தவிர மக்களுக்கு எதிரானதல்ல' அரசாங்கத்தின் அறிவிப்பு இது.

புலிகளுக்கு எதிரான தாக்குதலுக்காக 'இரகசியமாக திட்டமிடும்' அரசாங்கத்தின் தாக்குதல் நடவடிக்கைகளால் வடக்கு கிழக்கு மக்கள் அநியாயமாகப் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதம் அரசாங்கத்தின் பலமட்டத்தினராலும் சொல்லப்படுகிறது.

ஆனால் நடைமுறை இதற்கு மாறாகவே உள்ளது.

எல்லா முன்னைய அரசாங்கங்களும் அது ஜே.ஆர். அரசாங்கமாயினும் சரி, பிரேமதாசா அரசாங்கமாயினும் சரி, டி.பி.விஜேதுங்க அரசாங்கமாயினும் சரி, எல்லாமே புலிகளை மட்டுமே குறிவைத்து தாக்குவதாகத்தான் கூறின.

ஆனால், இந்த அரசாங்கங்களின் காலத்தில் நடந்த யுத்தங்களில் கொல்லப்பட்ட , அல்லது காயத்துக்குள்ளாக்கப்பட்ட விடுதலைப் புலிகளை விட பொதுமக்களே அதிகம் என்பதுதான் உண்மை. தரைமார்க்கமாக நகர முடியாத, கடல்மார்க்கமாக அண்மிக்க முடியாத ஒரு படை, மக்கள் மத்தியில் வாழும் கெரில்லாக்கள் மீது 3000 அடி உயரத்திலிருந்து தாக்குதல் நடாத்தினால் அது அவர்களின் நிலைகளை தாக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பது வெளிப்படை. விமானக் குண்டு வீச்சினாலும் ஷெல்லடிகளாலும் கொல்லப்பட்ட மக்களும் சிதைக்கப்பட்ட கட்டிடங்களும் ஏராளம்!

இப்போது விமானக் குண்டுவீச்சும், ஏவுகணைத் தாக்குதல் காரணமாக இன்னும் அதிகளவு உயரத்திலிருந்து - அதாவது ஏவுகணை வீச்சுக்கு அதிகமான உயரத்திலிருந்தோ அல்லது அதிவேக போர் விமானங்களிலிருந்தோ குண்டுகள் போடப்படுவதும் முகாம்களிலிருந்து கண்மூடித்தனமாக ஷெல்லடிக்கப்படுவதும் அரசின் நடவடிக்கைகளாக வேண்டியுள்ளன.

அரசாங்கம் என்னதான் இரகசியமாக திட்டம் தீட்டினாலும், நடக்கப்போவது அதே பழைய விடயங்கள் தான்.

இந்தப் புதிய யுத்த நிலைமைகளால் பாதிக்கப்படப் போவது திரும்பவும் பொதுமக்கள்தான்.

ஏற்கெனவே கிழக்கில் இராணுவத்தினர் தமது தாக்குதல்களின் போதும், படைநகர்த்தல்களின் போதும் பல பொதுமக்களை பலிகொண்டுவிட்டனர். இராணுவ ரோந்து நடவடிக்கைகட்காக பொதுமக்கள் கவசமாக முன்னால் அனுப்பப்படுகின்றார்கள். அண்மையில் முறக்கொட்டாஞ்சேனையில் இவ்வாறு கவசமாகப் பாவிக்கப்பட்ட ஒரு பெண் கண்ணிவெடியில் சிக்கி தனது காலை இழந்துள்ளார். இன்னுமொருவர் காயத்துக்குள்ளாகியுள்ளார்.

இராணுவ நிலைகள் மீதான புலிகளின் தாக்குதல்களுக்கு பொதுமக்கள் பலிகொள்ளப்படும் சம்பவங்களும் ஆரம்பமாகிவிட்டன, அண்மையில் புல்மோட்டை பகுதி நிலையொன்றின் மீது புலிகள் நடாத்திய தாக்குதலால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர். அப்பகுதி மக்களுக்கு புலிகளுடன் தொடர்பு இருக்கிறது என்று கூறி சின்னாபின்னமாக அவர்கள் மீது தாக்குதல் நடாத்தியுள்ளார்கள். அரபாத் நகரில் நடந்த இந்தப் 'பழிக்குப் பழி' வாங்கும் நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட முஸ்லீம் மக்களின் படுகொலைகள், எதிர்காலத்தில் நடக்கப்போகும் இம்மாதிரியான பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கு ஒரு ஆரம்பமாக உள்ளனவென்றே தோன்றுகிறது.

தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்த வேளையில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது அப்போது பிரதமராக இருந்த இன்றைய ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் அதை வன்மையாக கண்டித்தார். துப்பாக்கி பிரயோகம் செய்த பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தார்.

ஆனால் இப்போது இந்தப் படுகொலைகள் பற்றி அவர் மூச்சுக்கூட விடவில்லை.

அப்போது ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க இருந்தார். சந்திரிகா அவர்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருந்தார் என்பவைதான் அவரது அன்றைய கண்டனத்துக்கு காரணமோ என்ற ஐயத்தை இது ஏற்படுத்துகிறது.

ஜனாதிபதி அவர்களும் 'ஆறு கடக்கும் வரை அண்ணா தம்பி; ஆறுகடந்த பின் நீயாரோ - நான்யாரோ' என்ற அடிப்படையிலேதான் இயங்குகிறாரோ என்ற சந்தேகத்தை இது எழுப்புகிறது.

அப்படியானால், ஜனாதிபதி அவர்களின் சமாதானம், 'மனிதாபிமானம், ஜனநாயகம் எல்லாம் இவ்வாறான தேர்தல் சுலோகங்கள் தானோ என்று சந்தேகிப்பதிலும் தவறில்லை.

புலிகளுக்கும் - இராணுவத்துக்குமிடையில் நடந்த மோதலில் அகப்பட்டவர்கள் இவர்கள் என்று அரபாத் நகர் மக்களின் கொலையை பூசிமெழுகி விட முயல்கிறது இந்த அரசு.

இந்தத் தொடக்கம், ஆட்சிக் கட்டில் என்றால், அதிகாரம் கைக்கு வந்தால், அது யாராக இருந்தாலும் அதே குணத்தைதான் காட்டுவார்கள் என்ற அனுபவ உண்மையை மெய்ப்படுத்துவது போலவேபடுகிறது.

இதன் அடுத்த கட்டமாக, கடந்த ஆட்சிக் காலங்களில் இராணுவத்தினரால் செய்யப்பட்ட படுகொலைகள், காணாமல் போதல்கள் பற்றி ஆராய நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் கமிஷன்களும் இழுத்து மூடப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை; அல்லது பிரேமதாசா கால விசாரணைகள் போல 'கண்துடைப்பு' விசாரணைகளாக இவை போய்விடலாம்!

'சமாதான வியாபாரிகள்' முதல், தமிழ் அரசியல் கட்சிகள் வரை இதுபற்றி ஏதுவும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

இந்த லட்சணத்தில் நாடு பூராவும் அவசர காலச்சட்டத்தையும், செய்தித் தணிக்கையையும் கொண்டுவரப் போகிறதாம் அரசு.

இனியென்ன?

'போர் முரசு கொட்டியாயிற்று; வாழ்த்துப் பாடுவதைத் தவிர பிழைப்புக்கு வேறு வழியிருக்கிறதா என்ன?' என்ற கோதாவில் எல்லா 'சமாதான - ஜனநாயக' சக்திகளும் இயங்கப் போகிறார்களா, அல்லது மக்களின் நல உரிமைக்காக குரல் கொடுக்கப்போகிறார்களா என்பதுதான் இன்றுள்ள கேள்வி.

அரசியல் லாபங்களுக்காக, தேர்தலுக்கு முன் பொ.ஐ.மு நடந்து கொண்ட அதேவிதத்தில் இப்போது ஐ.தே.கவும் நடக்க ஆரம்பித்துவிட்டது.

'மக்கள் நலன்' பற்றி அவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள். பாவம்; மக்கள்!


'பொல்லுக்கொடுத்து அடிவாங்கும்' தலைவிதி மக்களுக்கு. இந்த தலைவிதியை மாற்றுவது பற்றி அவர்கள் எப்போது விளங்கிக் கொள்ளப்போகிறார்கள்?

# மட்டக்களப்பு: STF பயங்கரம்



மட்டக்களப்பு தனது அனைத்து அம்சங்களிலும் ஒரு யுததகால நகரமாகவே மாறிவிட்டது. மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நாளில் இருந்து ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த வண்ணமே இருக்கிறது. சுற்றிவளைப்புக்கள், கைது செய்தல், பொது மக்களைத் தாக்குதல், பொது மக்களைச் சுட்டுக் கொல்லுதல் என அரசின் அனைத்து செய்றபாடுகளும் மீண்டும் முடுக்கிவிடப்பட்டு படுமோசமாக நடந்த வண்ணம் இருக்கின்றன.

மட்டக்களப்பு நகரின் இன்றைய தோற்றம் முற்றாக மாறுபட்டுவிட்டது; பிரதான பாதைகள் அனைத்தும் பொது மக்களின் போக்குவரத்துக்காக்த் தடை செய்யப்பட்டுள்ளன; நகரின் ஒவ்வொரு மூலையிலும் மிகக் கடுமையாக சோதனைகள் இடம் பெறுகின்றன; சிறிது காலம் பேச்சு மூச்சற்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருந்த தமிழ்க் குழுவினர் சிலர் தற்போது ஆயுதங்களுடன் பகிரங்கமாகவே திரிகின்றனர்; சுற்றிவளைப்பின் போது ஆட்களை காட்டிக்கொடுத்தல், சோதனை முகாம்களில் இளைஞர்களை அடையாளம்



காட்டுதல், பொலிஸ் நிலையங்களிலேயே தங்கியிருந்து படையினருக்கு அனைத்து விடயங்களிலும் உதவி செய்தல் ஆகியன இவர்களுடைய கைங்கரியங்களாக இருக்கின்றன.

### STF பயங்கரம்

மட்டுநகரில் மீண்டும் 'வெள்ளை வேன்' பீதி மக்களிடம் பரவ ஆரம்பித்துவிட்டது. இவர்களுடைய அடாவடித்தனங்களும் கட்டுக்கடங்காவண்ணம் மிக மோசமாகவே இருக்கின்றன. அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பரவலாக உள்ள S.T.F. என அழைக்கப்படும் விசேட அதிரடிப்படையினரின் நடவடிக்கைகளே மிக மிகப் பயங்கரமாக உள்ளன. இவர்கள் முகாமிட்டிருக்கும் பகுதியில் உள்ள பொதுமக்கள் தினந்தோறும் இவர்களால் பயங்கரமாகத் தாக்கப்படுகின்றனர். கிரான்குளம், கொக்கட்டிச்சோலை, மண்முனை, ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, பழுகாமம், களுவாஞ்சிக்குடி ஆகிய பகுதிகளில் இவர்கள் இவ்வாறு பொதுமக்களைத் தாக்கியுள்ளனர். இதை மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாயுள்ள பிரிகேடியரிடம் முறையிட்டால் S.T.F. தனது கட்டுப்பாட்டில் இல்லை எனக்கூறி அவர் தப்பித்துக்கொள்கின்றார்.

### மீண்டும் அதிகளாகும் மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு எல்லையில் உள்ள கட்டுமுறிவுக்குள இராணுவமுகாம் புலிகளால் தாக்கப்பட்டதன் பின்னர் அப்பகுதியில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அகதிகளாக வாழைச்சேனைப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கான நிவாரணத்தை வழஙகும படி அரசாங்கத்தைக் கேட்டபோது அனைவரையும் வாகரைக்கு வரும்படி சொல்கிறார்கள். இதன் காரணமாக வாழைச்சேனை, பேத்தாளையில் உள்ள அகதி முகாமில் இவர்கள் பசியோடும், பட்டினியோடும் அல்லல்பட்ட வண்ணம் இருக்கின்றனர்..... இதற்கிடையில் தற்போது தோன்றியுள்ள யுத்த நிலைமையின் காரணமாக எல்லைப் பகுதியில் உள்ள தமிழ் கிராமங்களில் மீளக்குடியமர்ந்த மக்களும், முஸ்லீம் கிராமங்களுக்கு அருகில் உள்ள தமிழ் கிராமங்களில் மீளக்குடியமர்ந்த மக்களும் மீண்டும் அகதிகளாக மட்டக்களப்பை நோக்கி நகரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில். அண்மையில் ஏறாவூருக்கு அருகாமையில் உள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பில் இருந்த பொலிஸ்காவல் அரணில் இருந்த பொலிஸார் ஒருவர் சுடப்பட்டு இறந்துள்ளார். இதையடுத்து அக்கிராமம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர்கள் அனைவரும் மிக மோசமாகத்தாக்கப்புட்டுள்ளன்ர். ஒரு இளைஞர் அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இத்தாக்குதலில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் இருந்த முஸ்லீம் பொலிசாரே அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து அக்கிராமத்தில் மீளக் குடியமர்ந்த சிலர் மட்டக்களப்பிற்கு இடம் பெயர்ந்து வந்து உறவினர்களின் வீட்டில் தங்கியுள்ளனர். அத்தோடு ஏறாவூரில் கடமைபுரியும் தமிழ் உத்தியோகஸ்தர்களும் பொலிஸாரால் சோதனை நிலையங்களில் வைத்து பயமுறுத்தப்பட்டுள்ளனர்.

### மீனவர்கள் பட்டினி

இவை ஒருபுறம் இருக்க மறுபக்கத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலை நம்பியிருந்த 20 ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பட்டினியில் வாடுகின்றனர். இவர்களுக்கு இதுவரை அரசினால் எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை. பட்டினியைப் பொறுக்க முடியாமல் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற ஏழை மீனவர்கள் கடற்படையினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டு, அனைத்து மீன்படி உபகரணங்களையும் பறிகொடுத்துள்ளனர். மொத்தத்தின் மட்டககளப்பு மாவட்ட மக்கள் தொடர்ந்தும் இன்னலுற வேண்டிய நிலைக்குத் தளப்பட்டுள்ளனர் இதற்கிடையில் முழத்துக்கு ஒரு பொலிஸ் போஸ்ட் என அமைக்கப்பட்ட மினி இராணுவ முகாம்களுக்கு அருகில் வாழும் மக்கள் இரவில் உயிரைக் கையில் பிடித்த வண்ணம் இருக்க வேண்டியுள்ளது. மாலை 6 மணியுடன் சன நடமாட்டத்தைத் தடை செய்யும் இப்படையினர் அதன் பின்பு வீதியில் செல்வோரை மிகமோசமாகத் தாக்குகின்றனர். இதனால் மட்டக்களப்பு நகரம் மாலை 6 மணியுடன் மயான அமைதி நிலவும் இடமாக மாறிவிட்டது.

### மதுபோதை வந்தால் கொலை விழும்!

இரவில் ஒவ்வொரு முகாமில் இருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படுகின்றன. காரணமில்லாமல் தீர்க்கப்படும் இவ்வேட்டுக்கள் அருகில் குடியிருந்த இளம்பெண் ஒருவரின் உயிரைக் குடித்துள்ளது பின்பு விசாரித்த போது அக்காவல் அரணில் இருந்த அனைத்துப் பொலிஸாருமே அன்றிரவு நல்ல மதுபோதையில் இருந்ததாகவும், மாடு ஒன்று தெருவில் வருவதைக் கண்டே அவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரியவந்துள்ளது. இதேநிலைதான் மட்டக்களப்பில் உள்ள அனைத்துக்காவல் நிலையங்களிலும் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே காவல் அரண்களுக்கு அருகில் உள்ள மக்கள் இரவில் உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு இருக்க வேண்டியுள்ளது. இதைத்தவிர சுற்றி வளைப்பின் போது வீடு வீடாகக் சோதனையிடும் படையினர் வீட்டில் உள்ள பணம், நகை என்பவற்றைக் களவாடிச் செல்வதும் தெரியவந்துள்ளது. பல இடங்களில் இந்நடவடிக்கை இடம் பெற்றுள்ளது. சுற்றிவளைப்பின் போது படையினர் ஆட்களைச் சோதனை செய்வதை விட வீட்டில் உள்ள பெட்டிகள், சூட்கேசுகள் போன்றவற்றைச் சோதனையிடுவதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர். ஒருவேளை, புலிகள் சூட்கேசுகளுள் ஒழிந்திருக்கலாம் என்று நினைக்கிறார்களோ என்னவோ! அத்தோடு எந்தக் காவல் அரணில் இருந்து அன்றிரவு அதிக துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்கிறதோ அப்பகுதி மறுநாள் அதிகாலையிலேயே சுற்றிவளைக்கப்பட்டுவிடும் என்பது அப்பகுதி மக்களுக்குத் தெரிந்த விடயமாகி விட்டது. பொதுமக்கள் இதைப் பற்றிக் கூறும் போது, இது ஒன்றும் எங்களுக்குப் புதிய விடயமில்லை. சில மாதங்கள் இல்லாமல் இருந்தது. தற்போது மீண்டும் தொடங்கிவிடடது. எமது வாழ்வு இப்படித்தான் என்றாகிவிட்ட பிறகு, பழக்கப்படுத்திக் கொள்வதைத் தவிர வேறுவழியில்லை என்று கூறுகின்றனர்.

-சத்தியேந்திரா